இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 238 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆடி 06 சனிக்கிழமை 22.07.2017

## கிளிநொச்சி வந்தார் பிரியதர்சன யாப்பா

மாவட்ட நிலமை தொடர்பில் இராணுவத்துடன் ஆராய்ந்தார்

கிளிநொச்சி, ஜீலை 22
இடர் முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா நேற்று கிளிநொச்சி சென்றிருந்தார். >> 25

மணல் கடத்தலைத் தடுக்க முயன்ற

## கடலோரக் காவற்படையினர் மீது வடமராட்சி கிழக்கில் தாக்குதல்

வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு; பெரும் பதற்றம்

குடத்தனை, ஜீலை 22
வடமராட்சி, வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு அண்மையாக மணல் கடத்தலில் ஈடுபட்டோரை மறித்துச் சோதனையிட முற்பட்ட கடலோ >> 25



## மோ.சைக்கிள் விபத்தில் பல்கலை. மாணவன் சாவு

மன்னாரில் சம்பவம்

மன்னார், ஜீலை 22
மன்னார் நானாட்டான் முதன்மைவீதியில்நேற்று மாலை நடந்த விபத்தில் பல்கலைக்கழக மாண வன் ஒருவர் >> 24



## சைட்டம் விவகாரம் ஐ.நாவில் முறைப்பாடு

கொழும்பு, ஜீலை 22
சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூ ரியை தடை செய்யக் கோரி >> 24

## வீதியில் சென்ற வயோதிபர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு

புத்தூரில் நேற்றுக் காலை சம்பவம்

யாழ்ப்பாணம் ஜீலை 22
யாழ்ப்பாணம், புத்தூர் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன >> 24

## மகிந்த அணியின் 11 பேர் ஐ.தே.க. பக்கம் தாவுவர்

அவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்குவதற்கு இரகசியப் பேச்சு

கொழும்பு, ஜீலை 22
சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் அரசில் இருந்து விலகி மகிந்த அணியில் இணைந்தால் மகிந்த அணி >> 24

## ஐ.நா. அரசியல் செயலர் மைத்திரியுடன் சந்திப்பு

கொழும்பு, ஜீலை 22
ஐ.நா. அரசியல் செயலர் ஜெப்ரி பெல்ட் மன் நேற்று அரச தலைவர் மைத்திரி பால சிறிசேனவைச் சந்தித்துப் பேசி னார். >> 24



## டி.ஐ.ஜி. ஜயசிங்க பணி இடைநீக்கம்

கொழும்பு, ஜீலை 22
புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக் கில் கைது >> 24

## மனித உரிமை முன்னுரிமைப் பட்டியலில் இலங்கை

கொழும்பு, ஜீலை 22
இலங்கையை மனித உரிமைகள் முன்னு ரிமை நாடுக >> 25

## ஆலயங்களுக்கு நிதி வழங்கியதில் கொமிசன் அடித்த அமைச்சர் யார்?

விரிவு பக். 02

# அரசமைப்பை உருவாக்கும் பணியிலிருந்து நழுவுகிறது அரசு

ஐ.நா. அரசியல் செயலரிடம் நேற்று எடுத்துரைத்தது தமிழ்க் கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஜீலை 22
புதிய அரசமைப்பை உருவாக்கும் விடயத்தில் அரசுக்கு ஆர்வம் குன்றிவிட்டது. அந்த முயற்சிகளிலிருந்து அவர்கள் பின்வாங்கப் பார்க்கின்றார்கள். சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் தமது தனிப்பட்ட நலன்களைப் பற்றி மாத்திரமே தற்போது சிந்திக்கின்றனர்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான உத >> 25






தமிழர் விவகாரங்களிலேயே இவையளிண்ட சண்டைதான் ஐ.நாவுக்கு முக்கியமாப் போச்சு....

## வானிலிருந்து பொழிந்த மஞ்சள் நிற திரவத்தால் மாணவிகள் மயக்கம்

யாழ். வேம்படியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜீலை 22
வானத்தில் இருந்து கொட்டிய திரவத்தால் 16 மாணவிகளும், ஒரு ஆசிரியையும் பாதிக்கப்பட்டனர். அவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை யாழ்ப் >> 24



## பேருந்து மீது கற்கள் வீச்சு

கிளிநொச்சியில் நேற்றிரவு சம்பவம்



>> 23

## கூட்டமைப்புக்குள் ஒற்றுமை அவசியம்

ஐ.நா. பிரதிநிதி கொழும்பில் புத்திமதி

யாழ்ப்பாணம், ஜீலை 22
வடக்கு மாகாண சபையில் நடந்த விடயங்களை அறிந்திருக்கின்றோம். என்றும் உங்களின் ஒற்றுமை முக்கியம். நீங்கள் ஒற்றுமையாகத் தொடர்ந்தும் >> 25

வடக்கு - கிழக்கு மாகாண சபை 16 மாதங்களில் செய்ததைக் கூட 45 மாதங்களில் நாம் செய்யவில்லை

## வடமாகாண சபையின் ஆட்சியை நேற்று ஒரு பிடிபிடித்த தவராசா

கைதடி, ஜீலை 22
வடக்கு மாகாண சபை கடந்த மூன்றரை ஆண்டுகாலத்தில் உருப்படியாக எதையுமே செய்யவில்லை என்று மிகக் கடுமையாக விமர்சித்திருக்கிறார் சபையின் எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா. நேற்றைய சிறப்பு அமர்வில் அவர் நீண்ட உரையை ஆற்றினார். அதில் ஒவ்வொரு அமைச்சர்களும் அவர்களின் கீழான அமைச்சுக்களும் கடந்த காலங்களில் விட்ட தவறுகளைத் தெளிவாகச் சுட்டிக்காட்டினார். மாகாண சபை செய்யாமல் விட்டவற்றையும் செய்திருக்கவேண்டியவற்றையும் ஆணித்தரமாக எடுத்துரைத்தார். அவரது உரையில் அவர் முக்கியமாகக் குறிப்பிட்டவற்றின் சாராம்சம் வருமாறு:



இரணைமடுத் திட்டத்தை நிறுத்தினீர்களே அதற்குப் பதிலாக என்ன திட்டத்தைச்செயற்படுத்தினீர்கள்? குறைந்தது, மாற்றுத் திட்டத்தை யாவது முன்மொழிந்தீர்களா?
பளையில் அமைக்கப்பட்ட ரின் காற்றாலையால் கிடைத்த பணம் மாகாணசபை >> 25

## புதிய அரசமைப்பு முயற்சியை தோற்கடிக்க மகிந்த கங்கணம்

இரு முனைத் தாக்குதலுக்குத் திட்டம்

கொழும்பு, ஜீலை 22
புதிய அரசமைப்பொன்றை இயற்றும் கூட்டு அரசின் முயற்சியைத் தோற்கடிப்பதற்கு இரு முனைத் தாக்குதலை நடத்துவதற்கு மகிந்த அணி தீர்மானித்துள்ளது. சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அந்த அணியின் உறுப்பினர்கள் முன்னாள் அரச >> 23

புதுப் பொலிவுடன் உதயனின் இணையம்
newuthayan.com
ஒளி, ஒலி வடிவத் தகவல்களுடன்
உதயன் DIGITAL newuthayan.com
24 மணிநேரப் பதிவேற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# உள்ளூராட்சிப்பிரச்சினைகளை தீர்க்க 100 நாள் வேலைத்திட்டம்

## வடக்கு முதலமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 22

வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் பல்வேறு குறைகளுடன் இயங்குகின்றன. அவற்றைத் தீர்க்க நூறு நாள் வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துங்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வடக்குமாகாணமுதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் கோரிக்கைவிடுத்தார்.

வடக்கு மாகாண சபையின் கடந்த காலச் செயற்பாடுகள் தொடர்பில் ஆராயும்அமர்வுநேற்றுநடைபெற்றது. இதன்போதேஅவர்மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது;

உள்ளூராட்சி மன்றங்களில் திண்மகக் கழிவகற்றல் இன்று பெரிய பிரச்சினை யாகியுள்ளது. வடக்கிலுள்ள 34 உள்ளூராட்சி மன்றங்களில் 18 உள்ளூராட்சி மன்றங்களுக்கு திண்மக் கழிவகற்றல் மேற்கொள்வதற்குநிலம்இல்லைஎன்று பத்திரிகைச்செய்தியில்பார்த்தேன். நிலம்இல்லைஎன்றுவிட்டுஇருக்க முடியாது. காணியைச் சுவீகரிக்க வேண்டும். ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும் கோடிக்கணக்கான நிதியை வங்கியில் நிரந்தர வைப்பிலிட்டு விட்டு இப்படிச் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

உள்ளூராட்சிமன்றங்களில்கடந்த காலங்களில் நடந்த விடயங்கள் தொடர்பில்விசாரிக்க,முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் விசாரணைக்குழுக் களை நியமித்தார். அந்த விசாரணைக் குழுக்களின் அறிக்கைகளை முதலமைச்சர் பகிரங்கப்படுத்த வேண்டும். மாகாண சபையில் அதனைச் சமர்ப்பிக்க வேண்டும். வல்வெட்டித்துறை நகரசபைதொடர்பில்நடத்தப்பட்டவிசாரணை அறிக்கையை தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் கோரியுள்ளார்கள். அதனைக் கொடுப்பது தொடர்பில் எங்களிடம் கேட்கப்பட்டுள்ளது. இவ்வாறு கோரிக்கை வருவதற்கு இடம்கொடாமல், அதனைப் பகிரங்கப்படுத்துங்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இப்போதைக்குநடக்கப்போவதில்லை. உறுப்பினர்களின் ஆட்சி ஆறு மாதத்துக்கு இல்லை என்று கருதலாம். உள்ளூராட்சிமன்றங்களின் குறைகளைத்தீர்ப்பதற்குநூறுநாள் வேலைத்திட்டத்தைநடைமுறைப் படுத்துங்கள் - என்றார். (ற-5)

# 10 தனியார் மருத்துவ கல்லூரிகள்வேண்டும்!

யாழ்ப்பாணம், ஜூலை 22

ஒரு தனியார் மருத்துவக் கல்லூரி அல்ல பத்து தனியார் மருத்துவக் கல்லூரிகள் இங்கு வர வேண்டும். தற்போதுள்ள மருத்துவர் பற்றாக்குறையைநீக்கஇந்தியாவிலிருந்து200மருத்துவர்களைக் கொண்டு வரவேண்டும்.

இவ்வாறுவடக்குமாகாணசபையின்ஆளும்கட்சி உறுப்பினர்எம்.கே.சிவாஜிலிங்கம்தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

போரின்இறுதியில்நடந்ததைஉலகநாடுகளுக்கு மறைக்க, இந்தியாவிலிருந்து மருத்துவர்களை அழைத்துவந்துஅரசுசிகிச்சைவழங்கியிருந்தது. வடக்கில் தற்போதுள்ள மருத்துவர் பற்றாக்குறையைப்போக்கஇந்தியாவிலிருந்து200மருத்துவர்களை இரண்டு வருடங்களுக்கு இங்கு வந்து சேவையாற்றக் கோரிக்கை விடுக்க வேண்டும்.

ஆசிரியர்களை 8 வருடங்கள் பின்தங்கிய பிரதேசத்தில் கட்டாயம் சேவையாற்றப் பணிக்கின்றோம். ஆனால் மருத்துவர்களுக்கு அவ்வாறில்லை. ஆசிரியர்களுக்கு ஒரு நீதி, மருத்துவர்களுக்குஒருநீதியாகஇருக்கமுடியாது. ஒருதனியார் மருத்துவக் கல்லூரிக்கு இங்கே எல்லோரும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள். நான் கூறுகின்றேன் ஒன்றல்ல, பத்து தனியார் மருத்துவக் கல்லூரிகள் இங்கு வரவேண்டும். தனியார் பொறியியல்கல்லூரிஇங்குஇருக்கலாம். மருத்துவக் கல்லூரிதான் இருக்கக் கூடாதா?.

யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவகப் பிரதேசத்தில் மருத்துவர்கள் இன்மையால், சுழற்சி முறையில் அங்குள்ள மருத்துவர்கள் பணியாற்றுகின்றார்கள். அங்குள்ள மக்களுக்கு மருத்துவர் மருத்துவமனைக்கு வரும்நாள்பார்த்துத்தான்நோய்வர வேண்டுமா? - என்றார். (ற-5)

# குடிதண்ணீர் பிரச்சினைக்கு 1 மாதத்தில் முடிவு தேவை

## சிவாஜிலிங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 22

சாட்டுப்போக்குகள்காரணங்களைக் கூறி யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீர்த் தேவையைத் தட்டிக் கழித்துக் கொண்டிருக்காமல், உருப்படியாகச் செயற்பட வேண்டும். யாழ்ப்பாணம் கிளிநொச்சி இரணைமடுத் திட்டம்தொடர்பில்ஒருமாதத்துக்குள் கொள்கைத் தீர்மானம் எடுத்து அதனை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சபையில் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாணசபையின் ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறுகூறினார். யாழ்ப்பாணத்துக்குதண்ணீர்வராமையால், யாழ்ப்பாண நகருக்கு உரிய கழிவகற்றல் திட்டம் கைவிடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிய வருகின்றது.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்திலிருந்து குடிதண்ணீரைத் தரமாட்டோம் என்கிறார்கள். குளத்தில் எஞ்சி கடலுக்கு திறந்து விடும் நீரைத்தான் நாம் தருமாறு கேட்கின்றோம். எங்களுக்கு மட்டுமல்ல, கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசத்துக்கும் குடிதண்ணீர் தேவை. பூநகரி பிரதேசம் கடவுளால் சபிக்கப்பட்ட பகுதி போன்று உள்ளது. வறட்சியால் மக்கள் இடம்பெயரும் நிலையில்இருக்கின்றார்கள். அவர்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட வேண்டும்.

மருதங்கேணியில் கடல் நீரை நன்னீராக்கும் திட்டமும் இழுபறியில் இருக்கின்றது. அங்கிருந்தும் குடா நாட்டுக்கு தண்ணீர் இல்லை என்றால்மக்கள்குடிதண்ணீருக்கு எங்கு செல்வது?. யாழ்ப்பாணத்தை வறட்சி வாட்டி வதைக்கின்றது. மக்கள் தண்ணீருக்காக அலைந்து கொண்டிருக்கின்றார்கள்.

சகல மக்களாலும் காசு கொடுத்து குடிதண்ணீர்ப் போத்தல் வாங்க முடியாது. மக்களுக்காகஇதுதொடர்பில் உடனடி முடிவு எடுக்கப்பட வேண்டும் - என்றார். (ற-5)

# “கொமிசன் பெற்ற அமைச்சர்” சூடானது வட மாகாண சபை

ஆலயங்களுக்கு நிதி வழங்கியதில் ‘கொமிசன்’ பெற்றஅமைச்சர்யார்?என்றவாதத்தால்வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வு கொஞ்சம் சூடானது. பின்னர் கடந்த கால அமர்வுகளைப் போல் அல்லாது அமைதியாக உரிய நேரத்துக்கு நடந்து முடிந்தது.

வடக்கு மாகாணசபையின் 99ஆவது அமர்வு, சிறப்புஅமர்வாகநேற்றுநடைபெற்றது. அவைத் தலைவர் அறிவிப்புடன் சபை தொடங்கியது.

### வந்திட்டேன்னு சொல்லு

அமைச்சுக்கள்மீதானமீளாய்வுவிவாதத்துக்கு கோரிக்கை விடுத்த எதிர்க்கட்சித் தலைவர் தவராசாவோ, சிவாஜிலிங்கமோசபைதொடங்கும் போது அவைக்குள் இருக்கவில்லை. எதிர்க்கட்சித் தலைவரைக் காணவில்லை என்று அவைத் தலைவர் தேடிக் கொண்டிருக்கும் போதே, சபைக்கு ஓடி வந்தார் தவராசா. வந்திட்டேன் என்று சொல்லிக் கொண்டு நுழைந்தார். விவாதத்தை ஆரம்பிக்குமாறு அவைத் தலைவர் பணிக்க, மூச்சு வாங்கியபடி பேச்சைத் தொடங்கினார். ஓடி வந்தது களைக்கின்றது என்று தவராசா கூற, ஓடி ஓடி உழைக்க வேண்டும் என்றார் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

வடக்கு மாகாண சபையின் ஆதிமூலம் வரையில் கிளறியெடுத்து ஒவ்வொரு விடயமாகப் பிரித்து மேய்ந்தார் எதிர்க்கட்சித் தலைவர். பிரசங்கம்நடத்த எல்லோரும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருப்பதுபோன்று எதிர்க்கட்சித் தலைவர்அடுக்கடுக்காகஅடுக்கியகுற்றச்சாட்டுக்களைச்செவிமடுத்துக் கொண்டிருந்தனர்.

சில தினங்களுக்கு முன்னர், கல்வியங்காட்டுச் சந்தையின் குறைகளை முதலமைச்சர் நேரில் சென்று பார்த்திருந்தார். யாழ்ப்பாண நகரின் சீத்துவக்கேட்டையும் போய் பார்க்குமாறும், வேண்டுமானால் தானும் வருகின்றேன் என்றும் தவராசா கூறினார்.

தனது குற்றச்சாட்டுப் பட்டியல்களின் நடுவில் முதலமைச்சரைப் பார்த்து நீங்கள் வடக்கின் 12 லட்சம் மக்களுக்கும் முதலமைச்சர் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் என்று சுட்டிக்காட்டினார். வடக்கு மாகாணத்தின் அமைச்சரவை யாழ்ப்பாணத்துக்குள் சுருங்குவதை மனதில் வைத்து எதிர்க் கட்சித் தலைவர் இதை இழுத்துவிட்டிருக்க வேண்டும் என்று பார்வையாளர் கலரிக்குள் பலர் கதைத்துக் கொண்டனர்.

அதுமட்டுமல்லாது முதலமைச்சர் தான் பேசும் உரையை எழுதிக் கொண்டு வந்து வாசிப்பதே வழமையாகக் கொண்டவர். அவருக்கு உரை எழுதிக்கொடுப்பவர்கள் தவறாக எழுதிக்கொடுக்கிறார்கள் என்றும் முதலமைச்சரைச் சாடைமாடையாய்க் கடித்தார்.

### பிடுங்கிய நிதி தூங்குகின்றது

ஆளுநர் சந்திரசிறி ஆளுநர் நிதியத்துக்கு மாகாணசபையிலிருந்து மாற்றிய 14 கோடி ரூபா நிதியைத் திரும்பிப் பெற்றும், அந்த நிதி செலவு செய்யப்படாமல்வங்கியில்இருக்கின்றதுஎன்று அவைத் தலைவர் விசனத்துடன் சுட்டிக்காட்டினார். எதிர்க்கட்சித் தலைவர்தனது உரையின் போது அடிக்கடி முதலமைச்சரைப் பார்த்து, ஐயா நான் உங்களைக் குற்றம் சொல்லவில்லை. ஆனால் இப்படி எல்லாம் நடக்கின்றது என்பதைத்தெரிந்து கொள்ளுங்கள் என்று, பிரம்பால் அடித்து விட்டு மயில் இறகால் தடவினார் தவராசா. வடக்கு மாகாண சபையின் அமைச்சுப் பொறுப்புக்கள் அண்மையில் மாற்றப்பட்டது. இதனை வைத்து, “இப்ப எந்தெந்த அமைச்சர் எதற்கு எதற்குப் பொறுப்பாக இருக்கின்றார்கள் என்பது தெரியவில்லை” என்று, அமைச்சரவைமாற்றக்குழப்பத்தைமறைமுகமாகச் சுட்டிக்காட்டினார் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா.

முன்னைய விவசாய அமைச்சர், சுற்றுச் சூழலைக்காரணம்காட்டித்திட்டங்களைமறுத்தார் என்று கூறிய தவராசா, சில திட்டங்களை நடைமுறைப்படுத்த பேரம் பேசப்பட்டது என்று கேள்விப்பட்டேன் என்று பட்டும்படாமலும் சொல்ல, எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் அதற்கு முணுமுணுத்தார். இந்தவிசயத்திலஆழமாய்போகாதையுங்கோஎன்றுசொல்லிக்கொண்டுஅடுத்த விடயத்துக்கு தாவினார். கணக்கில இருந்தால் தான் கணக்காய்வில் வரும் என்று அமைச்சர்களுக்கு ஒரு போடும் போட்டார் தவராசா.

### குருகுலராசாவை மீளவும் நியமியுங்கள்

கொக்குவில்இந்துக்கல்லூரிக்குதற்போதுபுதிய கல்விஅமைச்சரின்அறிவுறுத்தலுக்குஅமைய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார். என்று அவரது அமைச்சே தகவல் வழங்கியது என்று சுட்டிக்காட்டிய தவராசா, நியமனங்களில் அதிகார துஷ்பிரயோகம் செய்தார் என்றுதான் குருகுலராசாவை பதவி நீக்கினீர்கள். அப்படியானால்புதிய கல்வி அமைச்சரும் அதேதவறைச் செய்திருக்கிறார். நடவடிக்கை எடுங்கள் என்ற தொனியில்புதுக்குண்டை புதிய கல்வி அமைச்சர் மீது போட்டார். தவராசாவின் குற்றச்சாட்டுப் பத்திரம்முடிவுக்குவந்ததும்அவைதேநீர்இடைவேளைக்கு நிறுத்தப்பட்டது.

### அனந்திக்கு ஆறுதல் பரிசு

தேநீர் இடைவேளையின் பின்னர் சபை கூடியது. எதிர்க்கட்சி உறுப்பினர் ஜெயதிலக சமர்ப்பித்த சிறப்புரிமை தொடர்பான விவகாரம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஆளும்கட்சிஉறுப்பினர்எம்.கே.சிவாஜிலிங்கம் உரையைத்தொடங்கினார். எதிர்க்கட்சித்தலைவர் தவராசாவைப் போலன்றி, கொஞ்சம் மெதுவாகவே அடி போட்டு மாகாணசபை செய்யத் தவறியதை அடுக்கிச் சென்றார். வழமைக்கு மாறாக நிதானமாக, அமைதியாகப் பேசினார்.

ஆறுதல் பரிசாக அனந்திக்கு அமைச்சுப் பதவி கிடைத்திருக்கின்றதுஎன்றுசிவாஜிலிங்கம்கூற, சபையில் சிரிப்பொலி எழுந்தது. போட்டிபோட்டுத்தான்அவருக்குஅலுவலகம்பெற்றுக்கொடுக்கப்பட்டிருக்கின்றது என்றும் கூறினார். அவர் தனது உரையில், சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தைப் பார்த்து, சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தைஅனந்தியிடம்கொடுக்கலாம் தானே என்று தனது யோசனையை முன்வைத்தார்.

வல்வெட்டித்துறையில் அமையவிருந்த மிகப் பெரிய மருத்துவமனையை எமது மக்கள் பிரதிநிதிகளே அந்தக் காலத்தில் குழப்பி விட்டார்கள் என்று பழைய கதையையும் சபையில் கூறினார்.

எல்லோரும் குறைகூறி உரையாற்றி வந்த நிலையில், ஆளும்கட்சிஉறுப்பினர்க.விந்தன், அமைச்சுக்கள் செய்த பாராட்டத்தக்க விடயங்களைப் பட்டியலிட்டார். இதன் பின்பு முன்னாள் அமைச்சர் ஐங்கரநேசன் உரையாற்றினார். அவரதுஉரைகொஞ்சம்காரமாகவேஇருந்தது. எதிர்க்கட்சித் தலைவர் தவராசவைக் குறிவைத்தே அவரது தாக்குதல் அமைந்தது. தவராசா இங்கே கேட்ட கேள்விகள் இதற்கு முன்னரும் இந்த அவையில் எழுப்பிய கேள்விகள் என்றும் அதற்கு விக்கிரமாதித்தன் போன்று நாங்களும் பதில்களைச் சொல்லிக் கொண்டேயிருக்கின்றோம் - என்றார்.

### அரசு மூடி மறைத்துள்ளது

பூநகரியில்திறக்கப்பட்டகலப்புமின்பிறப்புத்திட்டம் கொழும்பு அரசினுடையது அல்ல. அது தனியார் நிறுவனத்தினுடையது என்ற உண்மையை அம்பலப்படுத்தினார் ஐங்கரநேசன். சுற்றுச் சூழலைக் கட்டிப்பிடித்து இங்கு அபிவிருத்திக்கு இடம் கொடுக்கப்படவில்லை என்ற எதிர்க்கட்சித் தலைவரின் குற்றச்சாட்டுக்கு, தெற்கில்நிராகரித்ததொழிற்சாலைகளைஇங்கு நிறுவவே எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது என்று பதில் கூறினார் ஐங்கரநேசன்.

தன்னைப் போல பிறரையும் நேசி என்றுதான் சொல்லியிருக்கின்றார்கள். தன்னைப் போல பிறரையும் யோசி என்பதை இப்போதுதான் நான் அறிந்திருக்கின்றேன் என்று தவராசாவுக்கு பதிலடி கொடுத்தார் ஐங்கரநேசன். கணக்குக்கு வராதது கணக்காய்வுக்கு வராது என்ற அவரது குற்றச்சாட்டையே இப்படித் திருப்பியடித்தார்.

### ஆலய நிதியில் கொமிசன்

கடந்த ஆட்சிக் காலங்களில் கொழும்பு அரசின் அமைச்சராக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர் ஒருவர் இருந்தார். ஆலய நிர்வாகிகளை அழைத்து அழைத்து நிதி வழங்கினார். காசோலைவழங்கும்போதுஅதற்குப்பின்னால் அதிகாரிகளும் போவார்கள். காசோலையை மாற்றிகணிசமானதொகையைஅமைச்சருக்கு வாங்கிக் கொண்டுதான் கோயிலுக்கு கொடுத்திருக்கிறார்கள் என்று குற்றம் சுமத்தினார் ஐங்கரநேசன்.

எதிர்க்கட்சித்தலைவர்தவராசா, ஈ.பி.டி.பி. மாகாணசபை உறுப்பினர் தவநாதன் காதில் ஏதோ ஓதினார். உடனே எழுந்தார் தவநாதன். ஒழுங்குப் பிரச்சினையை கிளப்புகின்றேன் என்றார். அந்த அமைச்சர் எந்தக்காலப்பகுதியில்இருந்தவர் என்று கேட்டு சர்ச்சையைத் தொடக்கினார். தொப்பி அளவென்று போட்டுக் கொண்டதால் அந்தக் கேள்வியைக் கேட்டிருக்கலாம் என்று கலரிக்குள் பேசிக் கொண்டனர்.

முன்னாள் அமைச்சர் ஐங்கரநேசனோ காலத்தைச்சொல்ல மாட்டேன் என்று அடம்பிடித்தார். இறுதியில் அவைத் தலைவருக்கு முறைப்பாடு வைக்கும் அளவுக்கு இந்த விடயம் சென்றது. அவைத் தலைவரோ, கனபேர் இப்படி அமைச்சராக இருந்தவர்கள் என்பதைச் சொன்னார். எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, ஐங்கரநேசன் சொல்வது உண்மை என்று அவருக்கு ஒத்து ஊதினார். ஆனால்காலத்தைச்சொல்லவேண்டும்என்றார். கொஞ்சம்நீடித்தஇந்தவிவாதத்தில் கடைசியில், ஐங்கரநேசன் ஒலிவாங்கியை ‘ஒன்’ செய்யாமல் காலத்தைக் கூறினார்.

இதன்பின்னர்கல்விஅமைச்சர்சர்வேஸ்வரன், எதிர்க்கட்சித் தலைவரின் குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் வழங்கினார். இதன்போது இருவருக்கும் கொஞ்சம் சூடாகவே விவாதம் நடந்தது. எதிர்க்கட்சித்தலைவர்ரொம்பத்துள்ளக்கூடாது என்றுஒருகுட்டுப்போட்டார். எதிர்க்கட்சித்தலைவரோ, தர்க்கத்தைதர்க்கத்தால்எதிர்கொள்ளுங்கள். வேறு கதைகள் தேவையில்லை. நீங்கள் வேறு கதைகள் கதைத்தால் நாங்களும் கதைப்போம் என்று மண்டையில் கை வைத்துக் காட்டினார். எதிர்க்கட்சித் தலைவரின் சைகை மொழி பலருக்கும் புரிந்தது.

மோதல்கள்குறைவாகநடந்தசபைஅமர்வுபி.ப. 2.10 மணிக்கு நிறைவுக்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்துகள் நேர விதியை கடைப்பிடிப்பது அவசியம்

## வடக்குப் போக்குவரத்து அமைச்சின் செயலர் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஜூலை 22
வடக்கு மாகாணத்தில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் தனியார் மற்றும் அரச பேருந்து சேவைகளில் ஈடுபடுபவர்கள் நேர விதிகளுக்கு அமைய கடமையில் ஈடுபட வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்துத் துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சின் ஏற்பாட்டில் பேருந்துச் சேவை நேரக்கணிப்பாளர்களுக்கான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. மாகாண வீதி அபிவிருத்தி திணைக்கள அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

அதில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது
வடக்கு மாகாணத்திலே போக்குவரத்துச் சேவையைச் சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு இணைந்த நேர அட்டவணை மற்றும் 60:40 என்ற முறையை நாம் விரைவில் நடைமுறைப்படுத்த உள்ளோம்.

இணைந்த நேரஅட்டவணையின் மூலம் சேவையில் ஈடுபடும்போது நேரம் மிக முக்கியமானது. நேரக் கணிப்பாளர்களின் பங்களிப்பு மிக அவசியமாகும். இணைந்த நேர அட்டவணையின் மூலம் சேவையில் ஈடுபடுபவர்களுக்கு மாவட்ட ரீதியாக நேரக் கணிப்பாளர்களின் இடங்கள் வகுக்கப்பட்டுள்ளன. நேரத்தை கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டும்.

ஒரு மாவட்டத்தில் நீண்ட தூர பேருந்து சேவையில் ஈடுபடும் போது அவர்களின் நேரத்தைக் கணிப்பிட 24 நேரக் கணிப்பு மையங்களும், மாவட்டத்தில் உள்ளூர் சேவையில் ஈடுபடுபவர்களுக்கு 104 நேரக் கணிப்பு மையங்களும், மாவட்ட ரீதியாக போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுபவர்களுக்கு 21 நேரக் கணிப்பு மையங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

நேரக் கணிப்பாளர்களின் நன்மை கருதி அவர்களுக்கான வசதிகளும் செய்து கொடுக்கப்படும். வெகு விரைவில் இந்த இணைந்த நேர அட்டவணையை ஒரு மாத காலத்துக்கு பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார். (ற-10,ரி)

# இரண்டு மணி நேரத்துக்குள் குருதிச் சோதனை அறிக்கை

## தனியார் மருத்துவமனைகள் வழங்க வேண்டுமென அறிவுறுத்து

கொழும்பு, ஜூலை 22
தனியார் மருத்துவமனைகளில் மேற்கொள்ளும் டெங்குத் தொற்று குருதி மாதிரி பரிசோதனை அறிக்கை, இரண்டு மணித்தியாலங்களுக்குள் வழங்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் சிகிச்சைக்கு அந்த அறிக்கை செல்லுபடியாகாது.

இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் நிறுவனங்களின் பிரதானிகளின் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது;
சில தனியார் மருத்துவமனைகளில் முழுமையான குருதி மாதிரி பரிசோதனை அறிக்கையைவிநியோகிக்க இரண்டு மணித்தியாலங்களுக்கும் அதிக காலம் எடுக்கின்றது என்று மருத்துவர்களிடம் இருந்து முறைப்பாடு கிடைக்கின்றது. அதைக் கருத்திற் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

அறிக்கை காலதாமதமாவதால் சிகிச்சை வழங்குவதில் சிக்கல் ஏற்படுகின்றது என்று மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். தனியார் மருத்துவமனைகளில் குருதி மாதிரி பரிசோதனை அறிக்கை இரண்டு மணித்தியாலங்களுள் கிடைக்காவிடின், அரச மருத்துவமனைகளுக்கு வந்து இலவசமாக இந்த பரிசோதனையை செய்து கொள்ளலாம்.

அரச மருத்துவமனைகளில் ஒரு மணித்தியாலத்தில் முழுமையான குருதி மாதிரி பரிசோதனை அறிக்கை பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. கொழும்பு தேசிய மருத்துவமனையில் 10 நிமிடங்களில் குருதி மாதிரி பரிசோதனை அறிக்கை விநியோகிக்கப்படு கின்றது. என்றுள்ளது.

அதேவேளை, டெங்கு நோயாளர்களை அடையாளம் காண்பதற்கு நடத்தப்படும் குருதிப் பரிசோதனை அறிக்கையை வழங்க 90 நிமிடங்களை அரச மருத்துவமனைகள் எடுத்துக் கொள்கின்றன. தனியார் மருத்துவமனைகள் இதற்காக 8 மணித்தியாலங்களை எடுக்கின்றன.

நோயாளர்களை அவசரமாக இனங்கண்டு கொள்வதற்காக இந்தப் பரிசோதனை நேரத்தைச் சுருக்கி, 2 மணி நேரத்துக்குள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க நேற்றுமுன்தினம் அறிவுறுத்தியிருந்தார். (ற-10)

## வெளிநாடு அனுப்புவதாகக் கூறி

# ஒளிப்படங்கள் எடுத்து மிரட்டியவர் மறியலில்

சாவகச்சேரி, ஜூலை 22
வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி எடுக்கப்பட்ட பெண்ணின் ஒளிப்படங்களை ஆபாசப் படங்களாக மாற்றி அவரிடம் கப்பமாகப் பணம் பெற்ற ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். சாவகச்சேரி நீதிமன்றபதில் நீதிவான் பா.சுப்பிரமணியம் நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த யுவதியை முகவர் ஒருவரிடம் செல்லுமாறு காதலன் கூறியுள்ளார்.

யுவதியை ஆலயமொன்றுக்கு வரவழைத்த முகவர் பெண்ணை வெளிநாட்டுக்கு அனுப்பவேண்டுமெனக் கூறி ஆலய முன்றிலில் வைத்து ஒளிப்படங்கள் எடுத்துள்ளார்.

சில நாள்களின் பின்னர் யுவதியின் அலைபேசியில் தொடர்பு கொண்டு சில ஆபாசப் ஒளிப்படங்களை அனுப்பி அவற்றை இணையத்தளத்தில் பதிவு செய்யப் போவதாக மிரட்டிப் பணம் தருமாறு கோரியுள்ளார்.

யுவதியும் பயந்து அவர் கேட்ட வேளைகளில் வங்கியூடாகப் பணத்தை அனுப்பியுள்ளார். முகவரின் கப்பம் கோரல் அதிகரித்தமையால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக பொலிஸார் நீதிமன்றில் நேற்று முன்தினம் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

நீதிவானின் பணிப்புக்கமைய உடுவிலைச் சேர்ந்த குறித்த முகவரை கைது செய்த பொலிஸார் நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த பதில் நீதிவான் இந்த நபரை எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-10,9)



மீசாலையில் புதுமையான திருமண நிகழ்வு நேற்று நடைபெற்றது. ஜேர்மனியில் இருந்து வந்த இருவர் மீசாலை வெள்ளைமாவடி பிள்ளையார் ஆலயத்தில் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர். மணமகனும், மணப் பெண்ணும் மாட்டு வண்டியில் ஆலயத்துக்கு வந்தமை அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது. மணமகள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும், மணமகன் ஜேர்மனியைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

# விசாரணைக்கு வருமாறு சிவாஜிக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22
வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தை விசாரணைக்காகக் கொழும்பு வரவேண்டும் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு நேற்று அழைப்பு விடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பௌத்த பிக்கு ஒருவரை அவதூறாகப் பேசினார் என்ற குற்றச்சாட்டிலேயே அவரிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

இன்று முற்பகல் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைக்கு வருமாறு அழைத்தனர். இந்த விசாரணைக்காக கொழும்புக்கு வருவதற்குத் தயாராக இல்லை. விசாரணையாளர்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புங்கள் என்று தான் தெரிவித்தார் என்றும் சிவாஜிலிங்கம் கருத்து வெளியிட்டுள்ளார். (ற)

# காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்துக்கு வரவேற்பளிப்பது வேதனை தரும் விடயம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 22
காணாமல் ஆக்கப்பட்டோர்களுக்கான அலுவலகத்தைப் பன்னாடுகளும், புலம்பெயர் அமைப்புக்களும் வரவேற்பது வேதனைக்குரியது என்று கிளிநொச்சியில் தொடர் போராட்டம் நடத்தும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் 152 ஆவது நாள்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இடத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

"அரச தலைவருடனான சந்திப்பில் எமது பிள்ளைகளின் பெயர் விவரங்கள் வெளியிடப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. இதுவரை எமக்கான தீர்வுகள் எதுவுமே கிடைக்கவில்லை. எம்மையும் ஐக்கிய நாடுகள் சபையையும் ஏமாற்றுவதற்கே இந்த அலுவலகம் அமைக்கப்படுகின்றது. இது ஒருபோதுமே எமக்கான தீர்வைப் பெற்றுத்தரப்போவதில்லை." என்று அவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, அரச தலைவர் காணாமற்போன உறவுகளைத் தேடும் அலுவலகம் திறப்பதற்கு கையொப்பம் இட்டுள்ளார். அதனால் அவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்று தென்பகுதி ஊடகவியலாளர்கள் சிலர் வற்புறுத்தினர் என்று வவுனியாவில் போராட்டம் நடத்தும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் சிலரே நேற்று முற்பகல் காணாமற்போன உறவுகளின் போராட்டக் களத்துக்குச் சென்று அரச தலைவருக்கு நன்றி தெரிவித்து ஒளி,ஒலிப்பதிவு செய்ய முயற்சித்தனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

ஆத்திரமடைந்த தாம் அவர்களை அந்த இடத்தில் இருந்து வெளியேற்றினோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

"கடந்த 5மாதங்களாக தாம் மேற்கொண்டு வரும் போராட்டத்தை கண்டு கொள்ளாத ஊடகங்கள் தற்போது அரச தலைவர் காணாமற்போன அலுவலகம் திறப்பதற்கு கையொப்பம் இட்டுள்ளமைக்கு நன்றி செலுத்தக் கூறுவது எந்த விதத்தில் நியாயமானது?" என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர். (ற-10,35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய மீனவர்கள் 8 பேர் பரு. கடற்பரப்பில் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 22
இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 8 இந்திய மீனவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.
"பருத்தித்துறைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த இந்தியா, நாகப்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள் 8 பேர் படகு ஒன்றில் தொழில் ஈடுபட்டிருந்த வேளை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.
அவர்கள் அனைவரும் இன்று யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டு பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படுவார்கள்" என்று கடற்படையினர் மேலும் தெரிவித்தனர். (வ-101)



மட்பாண்ட கைப்பணித் தொழிலில் ஈடுபடுபவர்களில் 11 பயனாளிகளுக்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபையால் மட்பாண்டங்களைத் தயாரிப்பதற்கான சக்கரங்கள் வழங்கி வைக்கப்பட்டன. யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்பாண்ட கைபணித் தொழிலில் ஈடுபடுபவர்களை ஊக்குவிப்பதற்காகவே, இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு கடந்த வாரம் சங்கானை மட்பாண்ட பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர்,சங்கானை பிரதேச செயலர் ,கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பணிப்பாளர், தொழிற்றுறைத் திணைக்களத்தின்' அபிவிருத்தி உத்தியோகத்தர்,தேசிய அருங்கலைகள் பேரவையின் உத்தியோகத்தர் ,மற்றும் யாழ்ப்பாண மாவட்டக் கைப்பணி அபிவிருத்திச் சங்க தலைவர், செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (21,ரி)

## தாயாரைத் தாக்கிவிட்டு இளம் பெண் கடத்தல்

யாழ்ப்பாணம்,ஜூலை 22
வாள், பொல்லுகளுடன் வீடு ஒன்றுக்குள் புகுந்த 6 பேர் கொண்ட கும்பல், அங்கிருந்த தாயாரைத் தாக்கிவிட்டு அவரது மகளைக் கடத்திச் சென்றுள்ளது. காயங்களுக்கு உள்ளான தாயார், பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.
இந்தச் சம்பவம் அல்வாய்ப் பகுதியில் நேற்று காலை 9 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
"முச்சக்கர வண்டியில் வாள் மற்றும் பொல்லுகளுடன் வந்திறங்கிய 6 பேர் அடங்கிய கும்பல், மகளைக் கடத்திச் சென்றது. கும்பலிடமிருந்து மகளைப் பாதுகாக்க முற்பட்ட போது, கும்பல் என்னைத் தாக்கியது" என்று தாயாரால் பருத்தித்துறைப் பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
"இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக நேற்றிரவு வரை எவரும் கைது செய்யப்படவில்லை. விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன" என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-21,26)

### வறட்சியால் நெல் உற்பத்தி பாதிப்பு

# அரிசி இறக்குமதிக்கு விரைவில் ஏற்பாடு

### அரச தலைவர் தெரிவிப்பு

திருகோணமலை, ஜூலை 22
வறட்சி காரணமாக மக்கள் பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர். எதிர்வரும் வாரங்களில் அரிசி இறக்குமதி செய்யப்பட்டு மக்களுக்கு நியாய விலையில் வழங்கப்படும்.
இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் சிறந்த தேசிய உணவு உற்பத்தியாளர்களுக்கான அரச தலைவர் விருது வழங்கும் நிகழ்வு கந்தளாயில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
திருகோணமலை மாவட்ட விவசாயிகளுடைய பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இதுவரை நிலையான ஒரு செயற்றிட்டம் இல்லை. அதற்காக 5 ஆயிரம் மில்லியன் ரூபா நிதியை எதிர்வரும் மூன்று வருடத்துக்குள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக ஆயிரம் மில்லியன் ரூபா நிதி இந்த வருடம் ஒதுக்கப்பட்டு பல்வேறு துறை சார்ந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
காலநிலை மாற்றம் காரணமாக நாட்டின் தேசிய பொருளாதாரம் நேரடியாக பாதிப்புக்கு உட்படுகின்றது. பல்வேறு நாடுகளும் இதன் பாதிப்புக்கு உட்பட்டுள்ளன.
நாட்டினுடைய நெல் உற்பத்தி நூற்றுக்கு ஐம்பது வீதம் வறட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ளது. பர்மா பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்து மக்களுக்கு அவற்றை நியாய விலையில் வழங்கப்படவுள்ளது. நிவாரண செயற்பாடுகளுடன் நாட்டின் அபிவிருத்தி செயற்பாடும் முன்னெடுக்கப்படும். என்றார்.
அரச தலைவர் செயலகம் திருகோணமலை மாவட்ட செயலகம் ஏனைய ஐந்து அமைச்சுக்களும் இணைந்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் அமைச்சர்களான துமிந்த திஸாநாயக்க.தயா கமகே. மகிந்த அமரவீர, கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகல்லாகம. உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.
வர்த்தக ரீதியான தெரிவு, வீட்டுத்தோட்ட ரீதியான தெரிவு எனும் இரண்டு வகையில் போட்டிகள் இடம்பெற்றன. வர்த்தக ரீதியான போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தை ஊர்காவற்றுறை பிரிவைச் சேர்ந்த குமரசேன் குமாரவேலும் மூன்றாம் இடத்தை கரவெட்டி பிரிவைச் சேர்ந்த கந்தையா சுபாகரனும், வீட்டுத் தோட்டபிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தை யாழ்ப்பாணப் பிரிவைச் சேர்ந்த இளையதம்பி நாகராசாவும், இரண்டாம் இடத்தை சாவகச்சேரி பிரிவைச் சேர்ந்த இளையதம்பி நாகராசாவும், மூன்றாம் இடத்தை சங்கானைப் பிரிவைச் சேர்ந்த சர்வேஸ்வரன் லலிதாதேவியும் பெற்றுக் கொண்டனர்.
தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தை தெல்லிப்பழை பிரிவைச் சேர்ந்த சேனாதிராசா பிறேம்குமார் பெற்றுக் கொண்டார். (ந-10-8-45)





நெல்லியடி மத்திய கல்லூரியின் பிரதி அதிபர் இரஞ்சினி சிவராஜா அவர்களின் பிரியாவிடை நிகழ்வு நேற்று முன்தினம் புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் கல்லூரி கலையரங்கத்தில் கல்லூரி அதிபர் கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்றது நி கழ்வில் கல்லூரின் முன்னாள் அதிபர்கள் கல்வித்திணைக்களம் சார்ந்த அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர். (109)

## குருதிக் கொடை

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு குருதித் கொடை முகாம் நடைபெறவுள்ளது என்று ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் வை.யதுனாநந்தன் அறிவித்துள்ளார்.
குருதித் தானம் வழங்க விரும்புப வர்கள் இதில் கலந்து கொள்ளலாம் என்று மேலும் தெரிவித்தார். (4-8)

## சாவகச்சேரி – சங்கத்தானை சாலை சீரமைக்கப்படுகிறது

சாவகச்சேரி.ஜூலை 22
சாலை அபிவிருத்தி திணைக்களத்தால் சாவகச்சேரி பெருங்குளம் சங்கத்தானை சாலைசெப்பனிடப்பட்டு வருகிறது. இது சாவகச்சேரி பருத்தித்துறை சாலையில் பெருங்குளம் சந்தியில் ஆரம்பித்து மட்டுவில் சிவன் கோயில் சந்தி வரையான நீண்ட சாலையாகவுள்ளது. இது சுமார் 4.5 கிலோ மீற்றர் நீளத்தைக் கொண்டது.
இந்தச்சாலை நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படாது ஆழமான குழிகள் கொண்டதாக காணப்பட்டது. இதனால் பாடசாலை மாணவர்கள். பொதுமக்கள் பிரயாணம் செய்வதில் தடைகளை எதிர்கொண்டனர். (4-131)

## வட்டுக்கோட்டை இணக்க சபை அமர்வு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 18
வட்டுக்கோட்டை திருஞான சம்பந்த ஆரம்ப பாடசாலையில் இடம்பெறும் சங்கானை இணக்க சபையின் இன்று இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த அமர்வு ஆடி அமாவாசை விரத தினமாகையால் இன்று நடைபெறுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-21)

## அபிவிருத்தி திட்டங்கள் கிழக்கில் கையளிப்பு

அம்பாறை, ஜூலை 22
கிழக்கு மாகாண சுகாதார அமைச்சால் அம்பாறை பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.
அம்பாறை, திம்பட்டுவ பிரதேசத்தில் ஒரு மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட ஆரம்ப பாரமரிப்பு மருத்துவ நிலைய திறப்பு விழாவும், 4 மில்லியன் ரூபா நிதியில் வைத்தியர் விடுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் இடம்பெற்றன.
நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் கலந்துகொண்டு மருத்துவமனை அபிவிருத்தித் திட்டங்களை மக்களிடம் கையளித்தார்.
கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் சந்திராச கலபதி, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான மெத்தானாந்த சில்வா, மஞ்சுல பெர்னாண்டோ, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் மாகாண பணிப்பாளர் முருகானந்தன், ஆயுர்வேத திணைக்கள மாகாணப்பணிப்பாளர் மருத்துவர் ஶ்ரீதர், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் உதவிச்செயலாளர் சியாகுல் ஹக், அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திலக் ராஜபக் ஷ, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் மக்கள் தொடர்பாடல் அதிகாரி எம்.ஐ. நஜீம் மற்றும் மருத்துவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.
அம்பாறை, பொறபல பிரதேசத்தில் 5.3 மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவமனையும், அம்பாறை, [illegible] 16 மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட ஆரம்பபாரமரிப்பு நிலையமும் பாவனைக்குக் கையளிக்கப்பட்டன. (ந-10)

## வீடு மீது தீ வைப்பு சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 22
வீடு ஒன்றை எரித்து நாசமாக்கினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.
நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துன்னாலைப் பகுதியில் கடந்த வருடம் வீடு ஒன்று எரிந்து நாசமாகியது. இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெத்து வந்தனர். சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச் சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் விசாரணைகளின் பின்னர் பருத்தித்துறை நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-21,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டில் தீ விபத்து; குடும்பப் பெண் காயம்

முல்லைத்தீவு, ஜூலை 22

முழங்காவில், நாச்சிக்குடாசெபஸ்ரியர்நகர்பகுதியில் நடந்த தீ விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் காயமடைந்தார்.

இந்த விபத்து நேற்றுக் காலை 9 மணியளவில் நடந்துள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த ஒருபிள்ளையின்தாயான கிறிஸ்ரியா(வயது33)என்பரேகாயமடைந்தார். அவரைக் காப்பாற்றச் சென்ற அவரது கணவரும் கையில்தீக்காயங்களுக்கு உள்ளானார் என்று தெரிவிக்கப்பட்டது.

காலை உணவு தயாரிக்கும்போது அடுப்பிலிருந்து வழிந்தோடிய மண்ணெண்ணையாலேயே விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. பெண்ணின் இடுப்புக்குக் கீழ் அதிகம் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த குடும்பப் பெண்முழங்காவில்மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காககிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

(ற-10)



## வீட்டுத்திட்டம்வழங்கக் கோரி முல்லைத்தீவில் கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, ஜூலை 22

நிரந்தர வீட்டுத் திட்டம் வழங்கக் கோரி ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் முன்பாக நேற்றுக் காலை10 மணியளவில் கவனவீர்ப்புப் போராட்டம்நடத்தப்பட்டது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர்பிரிவின் கீழ் 2010 ஆண்டுக்குப் பின்னர் மீள்குடியமர்ந்த வர்களுக்கு இன்னமும் நிரந்தர வீடுகள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தே போராட்டம் நடத்தப்பட்டது.

''நாங்கள் ஏழுவருடங்களுக்கு மேலாக தற்காலிக வீடுகளிலேவாழ்கின்றோம். உளரீதியாகபெரிதும்பாதிப்படைந்துள்ளோம். எமது இந்த நிலையை மாற்றி எமக்கு நிரந்தர வீடு பெற்றுத்தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக கவனம் செலுத்த



வேண்டும்" என்று போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் ய. அனிருத்தனனிடம் தமது கோரிக்கை அடங்கிய மனுவைக் கையளித்தனர்.

"ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரிவில் 800க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு நிரந்தர வீட்டுத் திட்டம் இல்லை. அவர்களின் தேவைகளைஒரேநேரத்தில் நிறைவேற்ற முடியாத நிலமை காணப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் அரசு வீட்டுத்திட்டங்களைவழங்குகின்றது. இந்த ஆண்டு 95 வீடுகள்இந்தப்பகுதிக்குஒதுக்கப்பட்டுள்ளன. வீட்டுத் திட்டங்கள்வழங்கப்படும்போது தற்காலிக வீடுகளில் வாழ்வோருக்கு அவை பகிரப்படும்." என்று ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் ய. அனிருத்தனன் தெரிவித்தார்.

(ற-10)

## பிரதேச மக்களின் எதிர்ப்பால் வீதிச்சீரமைப்பு இடைநிறுத்தம்

வவுனியா, ஜூலை 22

மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து வவுனியா ஓமந்தை அரசமுறிப்பு பிரதானவீதிச்சீரமைப்புப்பணிகள்நேற்று நிறுத்தப்பட்டன.

பிரதேச சபையின் அனுமதியின்றிவீதிசீரமைப்புப்பணிகள்மேற்கொள்ளப்படவிருந்தன. அந்தப் பகுதி மக்கள் வீதிச் சீரமைப்புப் பணிகள் பொருத்தமற்றவை என்று தெரிவித்ததை அடுத்தே அவை இடைநிறுத்தப்பட்டன.

வவுனியா ஓமந்தை அரசமுறிப்புபெரியவிளாத்திக்குளம் பிரதான வீதியை சீரமைப்பு செய்வதற்கு சமுர்த்தி மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டது. முழுவீதியும் சீரமைக்கப்படாது 300 மீற்றர்நீளமான வீதியை 3 மில்லியன் ரூபா செலவில் சீமெந்து வீதியாக்கும் வேலைத் திட்டம் நேற்று ஆரம்பிக்கப்படவிருந்தது.

இந்த வீதியைச்சீரமைப்பது தொடர்பாக அந்தப் பகுதி கிராம அபிவிருத்திச் சங்கம், கிராம சேவையாளர், பிரதேச சபையினருடன் கலந்துரையாடப்படவில்லை.

சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவிருந்தநிலையில் கிராம அபிவிருத்திச்சங்கமும், அந்தப் பகுதி கிராம மக்களும் ஒன்றிணைந்து இது தொடர்பில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள உதவிப்பணிப்பாளருக்கும் கடிதம் அனுப்பப்பட்டது.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபைச்செயலர்நேற்றுக் காலை வீதியை நேரில் சென்று பார்வையிட்டார். மக்களின் முறைப்பாட்டையடுத்துவீதிசீரமைப்புப்பணிகளை இடைநிறுத்துமாறு கோரினார்.

"எமது கிராமத்தில் சமுர்த்தி மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் கிராமத்துக்கு பத்து இலட்சம் வேலைத் திட்டத்துக்கு அமைய அரச முறிப்பு பிரதானவீதியில்இடைநடுவில் வேலைஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு கிராம மக்களிடமோ கிராம மட்ட அமைப்புக்களிடமோ எந்தவித ஆலோசனைகளும்பெறப்படவில்லை. இந்த வீதியை நேரில் வந்து பார்வையிட்டு எமது கிராமத்தின் பாடசாலை வீதிக்கு இந்த வேலைத்திட்டத்தை மாற்றி செய்து தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்" என்று கிராம அபிவிருத்திச் சங்கம் தனது கடிதத்தில் கோரியுள்ளது.

"அந்தப் பகுதி மக்கள், கிராம அபிவிருத்திச் சங்கம், உதவிப்பணிப்பாளர் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் ஆகியோருடன் கலந்துரையாடல்ஒன்றுநடத்தப்படவுள்ளது. பொதுமக்களின் கருத்துக்களைஉள்வாங்கிஅவர்கள் தெரிவிக்கும் வீதியை சீரமைக்கநடவடிக்கைஎடுக்கப்படும்" என்று வவுனியா தெற்குதமிழ்பிரதேசசபைச் செயலாளர் திருமதி சுகந்தி கிஷோர்தெரிவித்தார்.

(ற-10)

## நீர்த்தேக்கத்தில் கழிவுகளை அகற்றும்வேலைத்திட்டம்

கொழும்பு, ஜூலை 22

மவுஸ்ஸாக்கலை நீர்தேக்கத்தில்கரையோரப் பகுதிகள் மற்றும் நீரேந்தும் பகுதிகளில்நிரம்பிஇருக்கும் குப்பைகளை சேகரிக்கும் வேலைத்திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

மஸ்கெலியா மவுஸ்ஸாக்கலைநீர்தேக்கத்தில்குப்பைகள் அதிகரிக்கப்பட்டு சூழல் மாசடையும்நிலைகாணப்படுவதாலும், டெங்குத் தொற்றும்பரவும்அபாயம்காணப்படுவதாலும்இந்தவேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வேலைத்திட்டத்தைமஸ்கெலியா பொலிஸார், அம்பகமுவ பிரதேசசபையின் சுகாதார பிரிவினர்கள், மின்சார சபை அதிகாரிகள், மஸ்கெலியா சென். ஜோசப் தமிழ் மகா வித்தியாலயத்தின் மாணவ, மாணவிகள், மஸ்கெலியா சிவில் அமைப்பினர் ஆகியோர் ஒன்றிணைந்து மேற்கொண்டனர்.

எதிர்வரும்காலத்தில்மவுஸ்ஸாக்கலை நீரேந்தும் பகுதிகளிலும் நீர் உள்வாங்கும் பகுதிகளிலும் காணப்படும் நீர் ஓடைகளில் கழிவுகளைக் கொட்டுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

(ற-10)

## மைத்திரியின் தளத்தை முடக்கியோர் விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 22

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை முடக்கியவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அரசதலைவரின் இணையத்தளத்தை முடக்கினார்கள்என்றகுற்றச்சாட்டில்17 வயது மாணவன் உட்பட இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களை நீதிமன்றம் முன்னர் பிணையில்செல்லஅனுமதித்திருந்தது.

இந்த வழக்கு நேற்று கொழும்புபிரதானநீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சந்தேக நபர்களை விடுதலைசெய்யுமாறுசட்டமா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார் என்று குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிவான் லால் ரணசிங்க பண்டாரவிடம் தெரிவித்தனர். அதையடுத்து அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து மீட்கப்பட்ட பொருள்களையும்மீள ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

(ற-10)



## வவுனியாவில் விபத்து; இருவர் படுகாயம்

வவுனியா, ஜூலை 22

வவுனியாவில் நேற்றுக் காலைநடந்த விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து மு.ப. 10.30 மணியளவில்வைரவப்புளியங்குளம் பகுதியில் நடந்துள்ளது.

குருமன்காட்டிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த மோட்டார்சைக்கிளும், அதே சாலையில்பயணித்தமுச்சக்கர வண்டியுமே விபத்துக்குள்ளாகின. மோட்டார்சைக்கிளில் பயணித்தவரும், முச்சக்காரவண்டியின்சாரதியும் காயங்களுக்கு உள்ளாகினர்.

அவர்கள்வவுனியாமாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்என்றுதெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-10)

## 8 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

கிளிநொச்சி, ஜூலை 22

புத்துவெட்டுவான் கிராமத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கிய 8 குடும்பங்களுக்குச்சுமார்2 லட்சம்ரூபாபெறுமதியான வாழ்வாதார உதவிப் பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன.

எட்டுக் குடும்பங்களுக்கும் தலா25ஆயிரம்ரூபாபெறுமதியான தையல் இயந்திரங்கள் நீரிறைக்கும் இயந்திரங்கள், மின் மோட்டர்கள் கால்நடைகள் போன்றவை வழங்கப்பட்டன.



புத்துவெட்டுவான் பொது நோக்குமண்டபத்தில்நடைபெற்றநிகழ்வில்துணுக்காய் பிரதேச செயலர், ஐயன்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், முன்பள்ளி ஆசிரியை உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தப் பகுதியைச் சேர்ந்த வேலாயுதம் சிவநிதன் என்பவரின் நிதி உதவியில் இவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-10,9)

## பூண்டுலோயாவில்தீ; களஞ்சியங்கள் நாசம்

நுவரெலியா, பூண்டுலோயாநகரத்தில்ஏற்பட்டதீயால்இரண்டு களஞ்சியங்கள் முற்றாக நாசமாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம்நேற்றுக்காலை 8 மணியளவில்நடந்துள்ளது.

பூண்டுலோயாஅரசபேருந்துசாலைஊழியர்கள், பொதுமக்கள், பூண்டுலோயா பொலிஸாருடன் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. விபத்து தொடர்பான விசாரணைகளை பூண்டுலோயா பொலிஸார்மேற்கொண்டுள்ளனர்.

(ற-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரணியில் பரிசளிப்பு

தென்மராட்சி, ஜூலை 22
வரணி மத்திய கல்லூரியின் பரிசில் நாள் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை மு.ப.9 மணிக்கு கல்லூரி முதன்மை மண்டபத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.
கல்லூரி அதிபர் ப.செல்வவி நாயகம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல் விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொள்வார்.
சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண மேல்நீதிமன் றப் பதிவாளர் திருமதி மீரா வடிவேற்கரசன், யாழ்ப்பா ணம் தேசிய கல்வியியல்க் கல்லூரி விரிவுரையாளர் து.இளங்கோ ஆகியோரும், மதிப்புறு விருந்தினராகஓய்வு பெற்ற அதிபர் சி.யோகலிங்கமும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (4 - 9)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 22
நல்லாட்சி அரசின் கீழ் மக்கள் திரள் போராட்டங்கள் எனும் தலைப்பிலான கலந்துரையாடல் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை டி.எம்.ஐ. கல்வி நிறுவனத்தில் தலைவர் ஏ.சி.ஜோர்ச் தலைமையில் நடைபெறவுள்ளது என்று பன்னாட்டு மார்க்சிய குழு அறிவித்தது. (4)

### தென்மராட்சியில்
# ரூ.40 லட்சம் செலவில் 6 குளங்கள் சீரமைப்பு

தென்மராட்சி, ஜூலை 22
தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள ஆறு குளங்கள் மனி தவலு மூலமாகச் சீரமைக் கும் பணிகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன என்று அதிகாரிக ளால் தெரிவிக்கப்பட்டது.
உலக உணவுத் திட்டத்தின் காசுக்கான வேலைத்திட்டத் தின் கீழ் சுமார் 40 லட்சம் ரூபா செலவில் ஆறு குளங்க ளும் சீரமைக்கப்பட்டு வரு கின்றன. சரசாலை தெற்கு மாத்தளன் குளம், வெள்ளாம் போக்கட்டி வண்ணான் குளம், கெற்பேலி தரவைக் குளம், நாவற்குழி கிழக்கு நெலிக்கள் குளம், வரணி இயற்றாலை நெத்தலிக் குளம், நாவற்குழி மேற்கு கோப்பியன் குளம் ஆகிய வையே சீரமைக்கப்பட்டு வருகின்றன.
கடந்த வருடம் மழை வீழ்ச்சி குறைவாகக் காணப்பட்ட தால் மேய்சலுக்கு விடப்படும் கால்நடைகள் குடிதண்ணீ ருக்காக அலைகின்றன என்று கூறப்பட்டு வந்தது.
இந்த நிலையில் அந்தந்த கிராம அலுவலர் பிரிவு களைச் சேர்ந்த மக்கள் மூல மாகக் குளங்களைச் சீரமைக் கும் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. சீரமைப்பு வேலைகள் மனித வலுவைப் பயன்படுத்தி ஆறு மாத காலத் தினுள் முழுமை செய்யப்ப டல் வேண்டும். இந்தச் சீர மைப்புப் பணிகளில் ஈடுபடு வர்களுக்கு ஆறு மாதங்க ளுக்குரிய உலர் உணப் பொருள்கள் வழங்கப்படுமெ னவும் தெரிவிக்கப்பட்டது. (4,9)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 22
ஆடி அமாவாசையான நாளை ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை க்கும் அடியவர்களுக்கு அன்ன தானம் வழங்குவதற்கு சிவபூமி அறக்கட்டளை ஏற்பாடு செய்துள்ளது.
அத்துடன் இன்று சனிக்கி ழமை இரவு கீரிமலை சிவ பூமி யாத்திரிகள் மடத்தில் சமய சொற்பொழிவுகள் மற்றும் பத்த நந்தனார், அரி சந்திர மயான கண்டம் ஆகிய இசைநாடகங்களும் இடம்பெறும் என்று சிவ பூமி அறக்கட்டளைத் தலை வர் ஆறு.திருமுருகன் அறி வித்தார். (4)

## சான்றிதழ் வழங்கல்

பண்டத்தரிப்பு வடலிய டைப்பில் தையல் பயிற்சி டிப்ளோமாகற்கைநெறியை நிறைவு செய்த தேறிய 20 மாணவிகளுக்கு இன்று சனிக்கிழமை டிப்ளோமா சான்றிதழ் வழங்கி வைக் கப்படும் என்று அறிவிக்கப் பட்டது.
வடலியடைப்பு கலை வாணி ச.ச.நிலைய தலை வர் சா.சுதன் தலைமை யில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் மகளிர் அமைப் பின் கண்காட்சியும் இடம் பெறும் என்று தெரிவிக்கப் பட்டது. (4-50)

## கட்டாக்காலி நாய்களுக்கு கருத்தடை

யாழ்ப்பாணம்,ஜூலை 22
யாழ்ப்பாண மாநகரசபைப் பிரதேசத்தில் கட் டாக் காலியாக நடமாடும் பெண் நாய்கள் பிடிக்கப்பட்டு சத்திரசிகிச்சை மூலமாகக் கருத் தடை மேற்கொள்ளும் பணிகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.
சுகாதாரசேவைகள் திணைக்களத்தின் உத வியுடன் இந்தக் கருத்தடை செய்யும் பணிகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து ஒரு வார காலத்துக்கு இடம்பெறு கிறது.
கட்டாக்காலியாக நடமாடும் பெண் நாய்கள் பிடிக்கப்பட்டு அவற்றுக்கு ஏ.ஆர்.வி தடுப்பூசி மருந்துகள் ஏற்றப்பட்டு கருத்தடையும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.
குறிப்பாக யாழ்ப்பாண நகரிலும் முற்றவெளி குருநகர், கொட்டடி, நாவாந்துறை போன்ற கரையோரப் பிரதேசங்களிலும் கட்டாக்காலி யாக நடமாடும் நாய்களின் பெருக்கம் அதிக ரித்துள்ளன.
கட்டாக்காலியாக நடமாடும் நாய்களின் பெருக்கத்தை குறைக்கும் முகமாக அவற் றுக்கு கருத்தடை செய்யும் பணிகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளதாக மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை தெரிவித்துள் ளது. (4-17)

## விளையாட்டு விழா

சங்குவேலி விநாய கர் முன்பள்ளி விளை யாட்டு விழா இன்று சனிக்கிழமை பி.ப.3 மணிக்கு சங்குவேலி சிவஞானப்பிள்ளை யார் கோயில் முன்ற லில் விநாயகர் முன் பள்ளி போசகர் தே. திருமுருகராஜன் தலைமையில் நடை பெறும் என்று அறி விக்கப்பட்டது. (4)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றியவருக்கு ஒரு லட்சம் ரூபா தண்டம்

சட்டவிரோதமாக மணல் ஏற்றிய வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
கொடிகாமம் பொலிஸாரால் தாக் கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
வழக்கை விசாரித்த நீதிவான் வாகனச் சாரதிக்கு ஒரு லட்சம் ரூபா தண்டம் விதித்தார். (4-9)

## தேர் இன்று

சாவகச்சேரி, ஜூலை 22
சாவகச்சேரி கோயிற்குடியி ருப்பு சந்தனமுதலிச்சிபுலம் முருகமூர்த்தி ஆலய தேர்த் திருவிழா இன்று மு.ப.9 மணிக்கும் நாளைஆடி அமாவாசை தினத்தன்று மு.ப..10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறு மென்று அறிவிக்கப்பட் டது. (4 - 9)

## சாலைக் குறியீடுகள் அழிவு

தென்மராட்சி,ஜூலை 22
நாவற்குழிச் சந்தியிலிருந்து ஆரம்பமாகும் ஏ -32சாலையில் சாலை அபிவிருத்தி அதிகார சபையினரால் பொருத்தப்பட்ட சாலைக்குறியீடு கள் பல அந்தப் பகுதியில் வீசும் கடும் காற்றின் காரணமாக வயல்களுக்குள் வீழ்ந்து காணப் படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் தெரி வித்தனர். சாலையோரத்தில் நடப்பட்டிருந்த சாலை வளைவைக் குறிக்கும் குறியீடுகள் வேகக் கட்டுப்பாட்டுக் குறியீடுகள் மற்றும் பயணிகள் வாகனத் தரிப்பிட குறியீடுகளுமே முறிந்து வயல்களுக்குள் காணப்படுகின்றன.
நிலத்தின் புதைக்கப்பட்ட இரும்புக் குழாய்கள் துருப்பிடித்து சேதமடைந்த நிலையில் முறிந்து வீழ்ந்துள்ளன. இதற்கு உரிய திணைக்களத்தினர் கவனம் செலுத்த வேண் டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (4-9)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 70 | 80 | 80 | 60 | 80 |
| கத்தரி | 140 | 100 | 160 | 120 | 140 |
| மரவள்ளி | 80 | 80 | 100 | 60 | 80 |
| பயிற்றை | 160 | 100 | 200 | 160 | 200 |
| பாகல் | 170 | 200 | 400 | 200 | 220 |
| க.கிழங்கு | 140 | 130 | 120 | 120 | 120 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 90 | 100 |
| சி.வெங்காயம் | 250 | 200 | 160 | 280 | 120 |
| பூசணி | 80 | 120 | 120 | 120 | 100 |
| தக்காளி | 160 | 150 | 160 | 160 | 190 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 80 | 60 |
| கீரை | 30 | 30 | 40 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 250 | 300 | 350 | 250 | 200 |
| புடோல் | 100 | 80 | 120 | 80 | 80 |
| கோவா | 140 | 150 | 160 | 120 | 120 |
| வெண்டி | 100 | 120 | 120 | 80 | 80 |
| போஞ்சி | 160 | 160 | 200 | 160 | 200 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 120 | 120 |
| தேங்காய் | 60 | 55 | 70 | 60 | 60 |
| உ.கிழங்கு | 100 | 120 | 120 | 100 | 100 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 | 60 | 50 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 240 | 300 | 180 | 240 |
| கரட் | 200 | 280 | 240 | 160 | 240 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 200 | 120 | 240 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 900 | 1000 |
| நண்டு | 400 | 300 | 500 | 400 |
| கணவாய் | 600 | 800 | 700 | 1000 |
| பாரை | 600 | 700 | 1000 | 1000 |
| சுறா | 500 | 700 | 1000 | 900 |
| சீலா | 500 | 200 | 500 | 600 |
| விளை. | 500 | 500 | 500 | 800 |
| முரல் | 400 | 500 | 450 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 600 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 300 | 400 | 500 | 500 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | 300 |
| சூடை | 150 | 150 | 200 | 200 |
| ஒட்டி | 200 | 300 | 300 | 500 |
| திருக்கை | 300 | 250 | 400 | – |
| மதனம் | 200 | 200 | 250 | – |
| கொய் | 150 | 60 | 80 | 100 |
| பாலை | 250 | 250 | 500 | – |
| வாழை | 150 | [illegible] | 400 | [illegible] |




ஆண்களுக்கான சேட் வகைகள் சில தற்போது நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. இவை ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை மாணவர்களின் வகுப்புத்தடை நீக்கப்படாது

## கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படும் பீடாதிபதி பிறின்ஸ் தெரிவித்தார்

யாழ்ப்பாணம், ஜூலை 22

"யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட இரண்டாம் வருட மாணவர்கள் 5 பேருக்கு விதிக்கப்பட்ட மூன்று மாதகால வகுப்புத் தடை உத்தரவு எந்தக் காரணம் கொண்டும் மீளப்பெறமாட்டாது."

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி ஜெய. பிறின்ஸ்ஜெயதேவன்தெரிவித்தார்.

விஞ்ஞான பீடத்தின் 5 மாணவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கடந்தபுதன் கிழமை வகுப்புத் தடை வழங்கினார்.

விஞ்ஞானம் பீட 2ஆம் வருட மாணவர்களுக்கும் முதலாம் வருட மாணவர்களுக்கும் இடையேபகிடிவதையால்மோதல் இடம்பெற்றது. இதில் 2ஆம் வருட மாணவர்கள் பகிடிவதை என்ற போர்வையில் முதலாம் வருட மாணவர்களை மோசமாகத் தாக்கினர்என்றுகுற்றஞ்சாட்டப்பட்டது. இதில்ஒருமாணவன்கடுங்காயங்களுக்குஉள்ளாகிவைத்தியசாலையில்சிகிச்சைபெற்றுமீண்டுள்ளார்.

இதனையடுத்து பல்கலைக்கழக வளாகத்துக்குள்இடம்பெற்ற2ஆம் வருடமாணவர்களின்அடாவடித்தனத்துக்குஎதிராகவிசாரணைசெய்வதற்காகதுணைவேந்தரால்மூன்று துறைத்தலைவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

இதில் வர்த்தகதுறை தலைவர் பிரகலாதன், பௌதீகவியல் துறை தலைவர் விக்னரூபன், சட்டத் துறை தலைவர் குருபரன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

இந்தக்குழுவின்பரிந்துரைமற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்திட்டங்களுக்கு ஏற்ப 2ஆம் வருட விஞ்ஞான பீட மாணவர்கள் 5 பேருக்கு எதிராக மூன்று மாதகால வகுப்பு த் தடை வழங்கப்பட்டது.

"யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்மாணவர்களின்பகிடிவதைக்கு எதிராகமானியங்கள் ஆணைக்குழுவின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப இனிவரும் காலங்களில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது குற்றவாளிகளாக இனம் காணப்பட்டுள்ள 5 மாணவர்களுக்கு எதிராக மூன்று மாத வகுப்புத்தடைகண்டிப்பாகநடைமுறைப் படுத்தப்படும்" என்று விஞ்ஞான பீடாதிபதிதெரிவித்தார்.

இதேவேளை, விஞ்ஞான பீட நான்காம் வருட மாண வர்களும் வகுப்புத்தடை முன்வைக்கப்பட்ட 5 மாணவர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்கக்கோரிநேற்று முன்தினம் தொடக்கம் வகுப்புக்களை புறக்கணித்துள்ளனர். (4-50)

# கால்நடை மருத்துவர்களுக்கு வடக்கில் பெரும் பற்றாக்குறை

## மருத்துவ சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21

வடக்கு மாகாணத்துக்கு 133 கால்நடை மருத்துவர்கள் தேவை. எனினும் 70கால்நடை மருத்துவர்களே கடமையாற்றுகின்றனர். 63 வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறுவடக்குமாகாணகால்நடை மருத்துவ சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.வசிகரன் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது: வடக்கில்கால்நடைமருத்துவர்களுக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றபோதும்இன்றுவரை அவைநிரப்பப்படவில்லை. இந்த நிலை தொடர்பில் கொழும்பு அமைச்சிடமும் வலியுறுத்தியுள்ளோம். கால்நடைமருத்துவர்களுக்கு நாடுமுழுவதும் பற்றாக்குறை நிலவுவதன் காரணமாகவே வடக்கில் கால்நடை மருத்துவர்களைநியமிக்கமுடியவில்லை என்று கூறப்படுகிறது.

> "வெளி மாவட்டங்களிலிருந்து கால்நடைமருத்துவர்களைக்கொண்டு வந்துசேவையில்ஈடுபடுத்துவதற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டியுள்ளது. வடக்கில் தற்போதுவரை 73 மருத்துவர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறான இக்கட்டான நிலையில் வடக்கு மாகாணத்தில் கால்நடைகளுக்கு மருத்துவத்தை வழங்குவது சவாலாகவுள்ளது. 60மருத்துவர்களைக்கொண்டு வடக்கின் ஐந்து மாவட்டங்களுக்கும் முழுமையான சேவையை வழங்குவது மிகக்கடினம்.

வெளி மாவட்டங்களிலிருந்து மருத்துவர்களைக் கொண்டு வந்து சேவையில் ஈடுபடுத்துவதற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டியுள்ளது.

வடக்கில் தற்போதுவரை 63 மருத்துவர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

பணியிலுள்ள 60 வைத்தியர்களே ஒன்றுக்கு மேற்பட்ட பிரதேசங்களில் பணிகளை முன்னெடுக்க வேண்டி யுள்ளனர். இது கால்நடை மருத்துவர்களுக்கும் சவாலான விடயமாகவே உள்ளது.

எதிர்காலத்தில் கால்நடை மருத்துவத்தைப் பயில்வதற்கு மாணவர்கள் முன்வர வேண்டும் - ஆர்வம் காட்டவேண்டும். அவர்கள் முன்வருவார்களானால் வடக்கு மாகாணத்தில் கால்நடைத் துறையில் பெரும் முன்னேற்றத்தை அடைய முடியும். கால்நடை வளர்ப்பாளர்களும்பெரும்பயன்பெறுவர்-என்றார். (4-8)

# அன்னதான மடங்களின் பணியாளர்களுக்கு மருத்துவ சோதனைச் சான்றிதழ் கட்டாயம்

## சுகாதாரப் பிரிவு கண்டிப்பான அறிவுறுத்தல்

தென்மராட்சி, ஜூலை 22

ஆலயங்களில் அன்னதான மடங்கள் மற்றும் மடப்பள்ளிகளில் சமையல் வேலை செய்வோர் அதற்கான மருத்துவ சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவினரால்மேலும்தெரிவிக்கப்பட்டதாவது:

தற்போது ஆலயங்களில் திருவிழாக்கள்ஆரம்பித்துள்ளன. அனைத்து ஆலயங்களிலும் தினமும் அன்னதானம் இடம் பெற்று வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

ஆலயமடப்பள்ளியில்மேலதிகமாக சமையலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நெருப்புக்காய்ச்சல்உள்ளிட்ட பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் சமையல் வேலையில் ஈடுபடுவதால் அதனை உண்ணும் பலர் வயிற்றோட்டம் மற்றும் ஒவ்வாமை நோய்களுக்கு இலக்காகி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருவதை காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறான நோய்களுக்கு உள்ளானவர்கள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டபோது ஆலயங்களில் இடம்பெற்ற அன்னதானத்தில்உணவருந்தியவர்களென்று தெரியவந்தது.

அதனால் ஆலய அன்னதானத்துக்குச்சமையல்வேலையில் ஈடுபடுவோர் மருத்துவச் சான்றிதழ்பெற்றிருத்தல்அவசியம். மருத்துவச் சான்றிதழின்றி சமையல் வேலையில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் ஆலயங்களில் அன்னதானம் குழைத்து வழங்குவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. சோறு கறியைக் குழைத்துவழங்குவோர்உயரமான இடத்தில் வைத்து அவற்றை ஒன்றாக்கிய பின்னர்வழங்கவேண்டும்.

அறைக்குள் வைத்து பாயில் போட்டு குழைத்து வழங்குவதை ஆலய நிர்வாகத்தினர் தடுத்து உயரமான மேசையொன்றில் வைத்துக் குழைத்து அடியவருக்குப் பாதுகாப்பான முறையில் வழங்கவேண்டும்என்றனர். (4-9)

# சுண்ணாம்புக் கல் ஆய்வால் நிலத்தடி நீர் உவரடைகின்றதா?

## நேரடியாகச் சென்று பார்த்து அறிக்கையிடுமாறு பணிப்பு

கிளிநொச்சி, ஜூலை 21

பூநகரி பொன்னாவெளிப் பகுதியில் சுண்ணாம்புக்கல் ஆய்வுக்கென மிக ஆழமான ஆழ்துளைக்கிணறுகள்தோண்டப்படுகின்றன. அவற்றிலிருந்து வெளியேறும் உவர் நீரால் நிலம் உவரடைகிறதா? என்பது பற்றி ஆராய்ந்து அறிக்கைச் சமர்ப்பிக்குமாறுஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா, அங்கஜன் இராமநாதன்ஆகியோரின்தலைமையில்கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

"இந்தப்பகுதியில்சுண்ணாம்புக்கல் ஆய்வுக்கென தோண்டப்பட்டதுஅதிலிருந்து வெளியேற்றப்படும்உவர்நீர்காரணமாக நிலம் உவர்த்தன்மை அடையும் நிலை காணப்படுகிறது.

சுண்ணாம்புக்கல் அகழ்வு தொடர்பான முயற்சிகளை வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை நேரடியாகச் சென்று பார்த்து அதனை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார். அதன்படிபணிகள்இடைநிறுத்தப்பட்டிருந்தன.

தற்போதுஒருசிலஅதிகாரிகளுக்குமட்டும் தெரியப்படுத்தி ஆள்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுஆய்வுகள்மேற்கொள்ளப்படுகின்றன. அதனால் தமது நிலங்கள் பாதிப்படைகின்றன"என்றுபிரதேசமக்கள் கூட்டத்தில்தெரிவித்தனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், "புவிச்சரிதவியல் திணைக்களப் பிரதேச செயலகத்துக்குத் தகவல் வழங்கிவிட்டு சுமார் 300 அடி ஆளமான ஆள்துளைக் கிணறுகளை அமைத்து வருகின்றன.

அங்கு தற்போது தொடர்சியாக நான்கு தொடக்கம்ஐந்துநாள்களுக்குவெளியேற்றப்படும்உவர்நீர் நல்லநிலையில்உள்ள நிலங்களின் ஊடாக செல்வதால் அவையும் உவர்த் தன்மை அடையும் நிலை காணப்படுகிறது" என்று கூறினார்.

எனவேமாகாணசபைஉறுப்பினர்மற்றும் பிரதேச செயலாளர் நேரடியாகக் குறித்த பகுதிக்குச் சென்று அறிக்கை ஒன்றைத் தயாரித்து அதனை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. (4-6)

# வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மரக்கதிரைகளையே வழங்கவேண்டும்

யாழ்ப்பாணம்,ஜூலை21

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மக்களுக்குவழங்கும்உதவிகளின்போது பிளாஸ்ரிக் கதிரைகளைவழங்காது மரக்கதிரைகளை வழங்கமுன்வரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது.

வடக்கு மாகாணத்தில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் பாவனையை தடை செய்ய மாகாண சபையால் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வாறிருந்தும் மாகாண சபையின் பல உறுப்பினர்கள் இந்த வருடத்துக்கான தமது நிதி ஒதுக்கீட்டில் பிளாஸ்ரிக் கதிரைகள் கொள்வனவு செய்ய நிதி ஒதுக்கியுள்ளமைகுறித்துபொது அமைப்புக்கள் கவலை தெரிவித்தன.

நாடாளுமன்ற உறுப்பினர்கள்மற்றும்மாகாண சபை உறுப்பினர்கள் தமதுவருடாந்தநிதிஒதுக்கீட்டில்பிளாஸ்ரிக்கதிரைகளை கொள்வனவு பொதுஅமைப்புகளுக்கு வழங்கினர்.

கடந்த ஏப்ரில் 22ஆம் திகதி தொடக்கம் பிளாஸ்ரிக்பாவனையைமுற்றாகத்தடைசெய்யஅல்லது பாவனையைத்தவிர்க்க மாகாண சபையால் முடிவு செய்யப்பட்டு அதனைநடைமுறைப்படுத்துமாறு பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மாகாண சபை உறுப்பினர்கள் பொது அமைப்புகளுக்கு இந்த வருட நிதி ஒதுக்கீட்டில் பிளாஸ்ரிக் கதிரைகள் கொள்வனவு செய்ய நிதி ஒதுக்கியிருப்பதுகுறித்துகவலைதெரிவித்த பொது அமைப்புக்கள் அந்த நிதியில் மரத்திலான கதிரைகள் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டன. பொது அமைப்புகளுக்கே அவை வழங்கப்படுவதால் காலம் காலமாக அமைப்புக்களால்மரத்திலானகதிரைகள்பயன்படுத்த முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (4-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்பூ கற்றாக்ர்

*கண்ணில் ஏற்படும் வெள்ளையை இலகுவாக சத்திரசிகிச்சை மூலம் நீக்கி, கண்வில்லை ஒன்றை உட்பதித்து சாதாரண பார்வையை பெற்றுக் கொள்ள முடியும்.
*அரச பொது வைத்தியசாலைகளில் இதை இலவசமாக செய்து கொள்ள முடியும்
*40 வயதுக்குப் பின் பார்வை மங்கலை மூக்கு கண்ணாடி அணிவதன் மூலம் சீராக்க முடியும்.
*இரண்டு வருடங்களுக்கு ஒருமுறையாவது கண்களை பரிசோதனை செய்து கொள்வோம்.
*கண்ணாடி அணியாதுவிடின் நோய் நிலமை மேலும் அதிகரிக்கும் வாய்ப்புக்கள் அதிகம்

*தகவல்*
*சு.ம.அ.பணிமனை,*
*யாழ்.மாநகர சபை.*



# உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் 13ஆவது மாநாடு யாழ்ப்பாணத்தில்

## இரண்டு நாள்கள் இடம்பெறவுள்ளன

யாழ்ப்பாணம், ஜூலை 22
உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் 13ஆவது மாநாடு இந்தமுறை யாழ்ப்பாணத்தில் இரண்டு நாள் இடம்பெறவுள்ளது. அதில் ஐரோப்பா மற்றும் கனடா நாட்டிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்டோரும், வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மூத்த அரசியல்வாதிகள் மற்றும் கட்சிப் பிரமுகர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அதற்கான ஏற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் ஜேர்மனிய கிளைத் தலைவர் இ.இராஜசூரியர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த மாநாடு ஓகஸ்ட் 5ஆம், 6ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறுவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இந்த மாநாட்டில் ஐரோப்பா மற்றும் கனடா, இந்தியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளிலிருந்தும் நூற்றுக்கு மேற்பட்டோரும் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மூத்த அரசியல்வாதிகள் மற்றும் கட்சிப் பிரமுகர்களும் கலந்து கொள்வார்கள்.

இந்த நிகழ்வுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் வடக்கு கிழக்கு மட்டுமன்றி இலங்கையில் உள்ள மூத்த தமிழ்த் தலைவர்கள், உணர்வாளர்கள் கலந்து கொள்ள ஏற்பாடாகியுள்ளது. தமிழ் மொழிக்குரிய பண்பாடு, விழுமியங்களைப் பேணிப்பாதுகாப்பதோடு அதனை உலகுக்கு எடுத்துச் செல்லும் நோக்கோடு 1974 ஆம் ஆண்டு இடம்பெற்ற தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிலேயே முதன் முதலாக இந்தத் தமிழர் பண்பாட்டு இயக்கம் உருவானது.

இதுவரை ஜேர்மனி, பிரான்ஸ், இந்தியா, மலேசியா, சுவிஸ், ஆஸ்திரேலியா உள்ளிட்ட 12 நாடுகளில் இந்த மாநாடு இடம்பெற்றுள்ளது.

இறுதியாகத் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டது. இவ்வாறு இடம்பெறும் மாநாடுகளில் முதல்நாள் மாநாடு எதிர்வரும் 5ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் மறுநாள் யாழ்ப்பாணம் விருந்தினர் விடுதியிலும் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முதலாம் நாள் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர், முதலமைச்சர் உள்ளிட்டோரும் இரண்டாம் நாள் நிகழ்வில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட தலைவர்கள் உட்பட பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், கல்விமான்கள் எனப் பலரும் கலந்து கொள்வர்.

நிகழ்வின் இறுதியில் உள்ளூர் கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர் - என்றார். (4-101)

# காக்கைதீவு குப்பைகள் மீள்சுழற்சி மையத்தில் பசளை உற்பத்தி அதிகரிப்பு

## பிளாஸ்ரிக் பொருள்களின் விற்பனையும் உயர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 22
யாழ்ப்பாண மாவட்டத்தில் குப்பைகளின் மீள் சுழற்சி மற்றும் விற்பனை சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த வருடமும் இந்த வருடமும் பல்லாயிரம் கிலோ கிராம் பசளைகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் நடப்பு வருடத்தில்உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துள்ளன.



இவ்வாறு யாழ்ப்பாணம் காக்கைதீவிலுள்ள குப்பை மீள் சுழற்சி மையம், மற்றும் யாழ்ப்பாண மாநகர சபையின் தகவல்கள் கூறுகின்றன.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் கீழ் உள்ள 23 வட்டாரங்களிலுமிருந்து பெறப்படும் குப்பைகள் காக்கைதீவு மீள் சுழற்சி மையத்தில் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படுகிறது. அதன்பின்னர் அவை சுழற்சி மையம் மற்றும் மாநகர சபை ஊடாக விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றில் பிளாஸ்ரிக் போத்தல், உயர்ந்த வகை பிளாஸ்ரிக், பொலித்தீன், மற்றும் சேதனப் பசளை என்பன உரிய முறையில் மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இவ்வாறு விற்பனை செய்யப்படும் பொருள்கள் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளன என்று புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.



பொலித்தீன் ஒரு கிலோகிராம் 25 ரூபா வீதம் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த வருடம் ஆயிரத்து 197 கிலோகிராமும் நடப்பு ஆண்டில் 5 ஆயிரத்து 257 கிலோகிராமும் பொலித்தீன் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு ஒரு கிலோகிராம் சேதனப் பசளை 12 ரூபா வீதம் 10 ஆயிரத்து 860 கிலோகிராமும் உழவு இயந்திரமூலமாக 14 கியூப் சேதனப் பசளையும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

நடப்பு வருடத்தில் ஒரு கிலோ கிராம் சேதனப் பசளை 14.04 ரூபா வீதம் 6 ஆயிரத்து 605 கிலோ கிராமும், உழவு இயந்திரம் மூலமாக 36 கியூப் சேதனப் பசளையும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒரு கிலோ கிராம் சேதனப் பசளை 12 ரூபா வீதம் விற்பனை செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் வரி அதிகரித்ததால் ஒரு கிலோ கிராம் சேதனப் பசளை 14.04 ரூபா வீதம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பு ஆண்டில் பொலித்தீன் மற்றும் சேதனப் பசளை விற்பனை அதிகரித்துள்ளதைப் புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாத காலப்பகுதியில் மீள் சுழற்சியை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு உரிய இயந்திரம் கிடைத்ததால், அதன் பணி சிறப்பாக முன்னெடுக்கப்படுகிறது. குப்பைகளுடன் எடுத்துவரப்படும் பிளாஸ்ரிக் போத்தல்கள் தரம் பிரிக்கப்பட்டு அடித்து நசுக்கப்பட்டுகின்றன. அவை ஒரு கிலோகிராம் 8 ரூபா வீதம் நடப்பு ஆண்டில் 9 ஆயிரத்து 598 கிலோகிராம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. உயர்வகை பிளாஸ்ரிக் ஒரு கிலோகிராம் 40 ரூபா வீதம் 746 கிலோ கிராம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

பொலித்தீன் பைகள் சிறுதுண்டுகளாக வெட்டப்பட்டு அதற்கென உள்ள இயந்திரத்தில் செலுத்தப்படும். இயந்திரம் அவற்றை பவுடராக்கித் தருகிறது. அவை உயர்தரம்கொண்டவையாகவும் சாதாரண தரம் கொண்டவையாகவும் வேறாக்கப்படுகிறது. பின்னர் அவை கிலோக் கணக்கில் விற்பனை செய்யப்படுகிறது.



இந்த மீள் சுழற்சிப் பொருள்களை கொழும்பில் உள்ள நிறுவனம் ஒன்று யாழ்ப்பாணம் வருகைந்து பணம் செலுத்திப் பெற்றுச் செல்கின்றது. அதனால் மீள் சுழற்சி செயற்பாடு நாளடைவில் முன்னேற்றம் அடைந்துள்ளது. குப்பைகள் தொடர்பான பிரச்சினை இன்னும் சிக்கலுக்குரிய விடயமாகவே பார்க்கப்படுகிறது. கல்லுண்டாயில் குப்பைகள் குவிந்தவண்ணமுள்ளன. அப்படியிருந்தும் மீள்சுழற்சியும் வெற்றிகரமாக செயற்படுத்தப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (4-ரி)

# பொலிஸ்நிலையத்தின் நாய்கள் முதியவரைக் கடித்துக் குதறின

யாழ்ப்பாணம், ஜூலை 22
கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யச்சென்ற முதியவரை பொலிஸ் நிலைய வளாகத்துக்குள் நின்ற இரண்டு நாய்கள் கடித்துக் குதறியதில் அவர் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் தருமபுரத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை பொன்னையமூர்த்தி, (வயது - 81) என்ற முதியவரே படுகாயமுற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச்சிகிச்சைபெற்றுவருகின்றார்.

கடந்த புதன்கிழமை மாலை தனது வீட்டில் இருந்து மோட்டார் சைக்கிளில் சென்ற முதியவர் பொலிஸ் நிலையத்துக்குள் சென்று முறைப்பாடு பதிவு செய்துவிட்டுத் திரும்பிய போது, அந்த வளாகத்துக்குள் நின்ற பல நாய்கள் அவரை விரட்டியுள்ளன. நாய்களிடம் இருந்து தப்புவதற்கு முதியவர் முயன்றுள்ளார். இருப்பினும் 2 நாய்கள் முதியவருக்கு மூன்று இடங்களில் பலமாகக் கடித்துள்ளன. படுகாயமுற்ற முதியவர் சாலையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்த முடியாது அருகில் இருந்த வர்த்தக நிலையத்துக்கு மோட்டார் சைக்கிளை உருட்டிச்சென்று நிறுத்தி விட்டுக் கால்நடையாக வீட்டுக்குச் சென்றுள்ளார். (4-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதொச களஞ்சியசாலைக்கு

# கொக்கெயின் வந்தது எப்படி?

## நிறுவனத் தலைவர் விளக்கம்

கொழும்பு, ஜூலை 22
இரத்மலானை சதொச களஞ்சியசாலைக்கு ஊறுகொடவத்தையிலிருந்து ரஞ்சிதா பல்சஸ் நிறுவனத்தால் கொண்டுவரப்பட்டிருந்த சீனியடங்கிய கொள்கலனை, இரத்மலானை சதொச களஞ்சியசாலைக்குக் கொண்டு வந்த பின்னர் களஞ்சியசாலையில் வைத்து அதனை இறக்குவதற்கு முன்னரே வழமையான நடைமுறையின் பிரகாரம் ஊழியர்கள் கொள்கலனைத் திறந்து பார்த்தபோது வித்தியாசமான பொதிகள் இருந்ததைக் கண்டனர். அதன் பின்னர் பொலிஸாருக்கு சதொச நிறுவனம் இது தொடர்பில் அறிவித்தது.

இவ்வாறு நிறுவனத்தின் தலைவர் டி.எம். கே.பி. தென்னக்கோன் தெரிவித்தார்.

இரத்மலானை சதொச களஞ்சியசாலையில் 100 கிலோ கிராமுக்கு மேற்பட்ட கொக்கெயினைப் பொலிஸார் கண்டுபிடித்தமை தொடர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாட்டைக் கொழும்பு சதொச தலைமையகத்தில் நேற்று முன் தினம் அவர் நடத்திய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நிறுவன ஊழியர்களால் சீனிக் கொள்கலன் திறக்கப்பட்டபோது, வித்தியாசமான பொதிகள் இருந்ததனால் அதனை மீண்டும் மூடி பொலிஸாரிடம் ஒப்படைத்த பின்னரேயே, பொலிஸார் சீனியுடன் இருந்த இந்தப் பொதிகள் கொக்கெயின் எனக் கண்டுபிடித்தனர்.

அநாமதேய தகவல் ஒன்றின் அடிப்படையில் பொலிஸார் இதனைக் கண்டுபிடிக்கவில்லை.

இந்த விடயம், தெரியவந்தபோது சதொச நிறுவனமே பொலிஸாருக்கு அறிவித்தது.

எமது நிறுவனம் சதொசவின் விற்பனைக்கென நேரடியாக எந்தவொரு நாட்டிலிருந்தும் சீனியை இறக்குமதி செய்வதில்லை. வாரா வாரம் விலைமனுக் கோரலின் அடிப்படையிலேயே நிறுவனத்துக்குத் தேவையான சீனியைக் கொள்வனவு செய்கின்றது. இந்தவகையில் இந்த வாரம் 'ரஞ்சிதா பல்சஸ்' நிறுவனமே கேள்விகோரலில் தெரிவாகியிருந்தது.

எனினும், இரத்மலானை களஞ்சியசாலையில் கண்டுபிடிக்கப்பட்ட கொக்கெயின் தொடர்பில் சேறுபூசும் நடவடிக்கையில் சில ஊடகங்கள் ஈடுபடுகின்றன. இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் - என்றார். (கு)

# நாடு கடனில் தத்தளிக்க ரவியே முழுக் காரணம்

## மகிந்த அல்ல என்கிறார் பந்துல

கொழும்பு, ஜூலை 22
நாடு தற்போது கடனில் மூழ்கியுள்ளமைக்கு மகிந்த அரசு காரணம் அல்ல. முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவே காரணம் என மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே தற்போது 167 மில்லியன் அமெரிக்க டொலர்களை பன்னாடுகளிடம் இருந்து இலங்கை கடனான பெறவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ரவி கருணாநாயக்க நிதியமைச்சராகச் செயற்பட்ட காலத்தில் இலங்கையின் பொருளாதாரமும், ரூபாவின் பெறுமதியும் வீழ்ச்சியைச் சந்தித்ததெனக் குறிப்பிட்ட பந்துல, அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்திலேயே குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது எனவும் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று மக்களின் வரிச்சுமையினை அதிகரிப்பதற்காகப் புதிய பிரேரணை ஒன்றும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (து-ய)

**தொழிற்சாலை, மாடி வீடு விற்பனைக்கு**
பிரதான வீதியை முகப்பாக கொண்ட தொழிற்சாலை, கல்யாண மண்டபம் நடத்த கூடிய கட்டங்கள், சகல வசதியுடைய மேல்மாடி வீடும் விற்பனைக்கு உண்டு.
**077 600 1701**

**காணி விற்பனைக்கு**
அரியாலை குசவமால் லேனில் 4 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
**077 132 6489, 077 128 8930**

**யாழ் - திருமலை - மட்டக்களப்பு - அக்கரைப்பற்று**

**A/C பஸ் சேவை**
மாலை 7.30 மணிக்கு யாழ்நகரிலிருந்து புறப்படும்
மாலை 7.30 மணிக்கு அக்கரைப்பற்றிலிருந்து புறப்படும்.
கட்டணம் - 1100 /= ரூபா
திருமலை கட்டணம் - 700 /= ரூபா
ஆசனப்பதிவுகளுக்கு
**வரணி ஆசனப் பதிவகம்**
352, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 2868/ 077 791 7691**
அக்கரைப்பற்றில் : **அல் ராசித் ரவல்ஸ்**
**அக்கரைப்பற்று - 071 364 2419/ 077 484 5550**

**செய்து கொடுக்கப்படும்**
வீடுகளுக்கு பல டிசைன்களில் மாபிள்கள் வைத்து செய்து தரப்படும்.
இடம்: ஆறுகால் மடம்
**076 406 4930** (CS 6040) (14)

**SB Travels and Tours (pvt) Ltd**
இலங்கையின் விமானப் பயணச்சீட்டுக்களுக்களின் நேரடி முகவராக செயற்படும் தற்போது யாழ் தனது சேவையினை வழங்குகின்றது. இங்கு அனைத்து நாடுகளுக்குமான அனைத்து விமான பயணச்சீட்டுக்களையும் மிகக் குறைந்த விலையில் உடனடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.
**No 216, Kasthuriyar Road, Jaffna,**
**021 222 9555/ 076 691 1083 (Branch)**
**SPECIAL AIR FARES**
விமானப் பயணச்சீட்டுக்களுக்கான விசேட விலைக் கழிவுகள்

| | | |
|---|---|---|
| CHENNAI | R/T | 26300/= |
| CHENNAI | R/T | 25000/= |
| MADURAI | R/T | 25200/= |
| TRICHY | R/T | 31800/= |
| ZURICH | O/W | 89900/= |
| BOMBAY | R/T | 36700/= |
| MALAYSIA | R/T | 30700/= |
| DELHI | R/T | 47600/= |
| LONDON | O/W | 63500/= |
| TRIVANDRUM | R/T | 34500/= |
| PARIS | R/T | 85000/= |
| RORANTO | R/T | 78600/= |
| SINGAPORE | R/T | 31600/= |
| BANGKOK | R/T | 31000/= |

VISA ARRANGEMENTS INDIA. THAILAND, MALASIYA, ALL AIR TICKETING AND TRAVELS INSURANCE ARRANCEMENT
'Conditions Apply' Mobile - Sinthu - 076 691 1080
Thushani - 076 691 1083


**நல்லூர்க் கந்தன் திருமண சேவை**
எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும். **நல்லூர் 25நாள் திருவிழாவை முன்னிட்டு பதிவுக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.**
**இல.303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**வி.ஜெயந்தி**
T.P: 077 9733 183
021 227 1468

**பெயர் மாற்றம்**
பிரதான வீதி, மாதகல் என்னும் இடத்தைச் சேர்ந்த நான் **மரியதிரேசா** என்னும் எனது பெயரை **மேரிதிரேசா** எனப் பெயர்மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
**எ.மேரிதிரேசா**
(CS 6039) (14)

**சேவை நலன் பாராட்டும் 60 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்**

Happy Birthday
Best Wishes
**(22.07.2017)**
**திரு.நடராசபிள்ளை இராசகுமாரன்**
(நிர்வாக கிராம அலுவலர் - பிரதேச செயலகம் தென்மராட்சி)
**சேவைதனில்: (40 வருட சேவை)**
- 20.05.1977 - 05.11.1978 கட்டடங்கள் திணைக்களம் மன்னார்.
- 06.11.1978 - 31.01.1984 கட்டடங்கள் திணைக்களம் வவுனியா
- 01.02.1984 - 28.02.2009 கிராம அலுவலர் இடைக்குறிச்சி -J/341
- 01.03.2009 - 10.06.2013 கிராம அலுவலர் வரணி - இயற்றாலை - J/343
- 10.06.2013 - 31.05.2016 கிராம அலுவலர் நாவற்காடு - J/338
- 01.06.2016 - 21.07.2017 நிர்வாக கிராம உத்தியோகத்தர் தென்மராட்சி

**பிரதேச மட்ட கிராம அலுவலர்களுக்கிடையிலான முகாமைத்துவப் போட்டியில்**
- 2008, 2010, 2012 - வரணி - இயற்றாலை முதலாம் இடம்.
- 2014 - நாவற்காடு - முதலாம் இடம்

அரச சேவையில் 40 வருடங்கள் நிறைவாகப் பணியாற்றிஇன்று 22.07.2017 இல் மணிவிழாக் காணும் திரு. நடராசபிள்ளை இராசகுமாரன் அவர்கள் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து அர்ப்பணிப்புடன் மகத்தான பணி புரிந்த சேவையாளன். அவர்கள் ஓய்வு காலமதில் குடும்பத்தினருடன் நலமே வாழ மனம் நிறைந்து வாழ்த்துகிறோம்.
**பருத்தித்துறை வீதி, வரணி.**
வாழ்த்துவோர்:
**வே.நாகதேவன் - குடும்பம்**
**ஓய்வு நிலை கிராம அலுவலர்.**

**முச்சக்கர வண்டி ஒன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் - அறிவுரைப் பத்திரம்**
**இலங்கை புகையிரத சேவை**
மூன்று மாத காலத்திற்காக புகையிரத ஓட்ட பணியாளர் குழு யாழ்ப்பாண புகையிரத நிலையத்திற்கும், தங்குமிட வதிவிடத்திற்கும் இடையே நாளாந்தம் போக்குவரத்து செய்வதற்கு முச்சக்கர வண்டி உரிமையாளர்களிடமிருந்து விலைமனு கோரப்படுகின்றது.
இதற்குரிய அறிவுறுத்தல் மற்றும் கேள்விப்பத்திரம் புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி - யாழ்ப்பாணம் அலுவலகத்தில் மற்றும் போக்குவரத்து அதிகாரி - அநுராதபுரம் அலுவலகத்தில் 22.07.2017 ஆம் திகதியில் இருந்து 30.07.2017 ஆம் திகதி வரை இலவசமாக விநியோகிக்கப்படும்.
இது தொடர்பான சகல விவரங்களை பின்வரும் தொலைபேசி இலக்கங்களிற்கு அழைத்து பெற்றுக்கொள்ள முடியும்.
**பிரதம புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி யாழ்ப்பாணம்.**
021 222 2371
**போக்குவரத்து அதிகாரி அலுவலகம் - அநுராதபுரம்**
025 223 5005
**பிரதேச போக்குவரத்து அதிகாரி,**
**பிரதேச போக்குவரத்து அதிகாரி அலுவலகம்,**
**அநுராதபுரம்.**

**சுவிசேஷ விடுதலைப் பெருவிழா**
கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்.
தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்.
தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்
மத்தேயு :- 7:7
**அன்பான சகோதர சகோதரிகளுக்கு இறைவனின் திருநாமத்தில் வாழ்த்துக்கள்**
வியாதிகள், பாவக்கட்டுக்கள், பிசாசின் பிடி, நோய்களினால் நிம்மதி இல்லாத வாழ்க்கை வாழ்ந்து குடும்பத்திலும் சமாதானமில்லாது சண்டைகளால் எல்லாவற்றையும் இழந்து மரணம்தான் முடிவென்று எண்ணி வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் ஜனங்களே உங்கள் விடுதலைக்காக நடத்தப்படும் இந்த சுவிசேஷ பெரு விழாவுக்கு வாருங்கள். தேவனால் உலகெங்கும் வல்லமையாய் பயன்படுத்தப்படும் தேவமனுஷனால் உங்களுக்காக ஜெபிக்கப்படும். நிச்சயமாக விடுதலையை இயேசு உங்களுக்குக் கொடுப்பார்.

**இடம் :- ஊர்காவற்றுறை திறந்தவெளி அரங்கு**
**காலம் :- 22,23 ஜூலை 2017 (சனி, ஞாயிறு)**
**நேரம் :- மாலை 5.00 மணி**
ஒருங்கமைப்பு:- தேவவார்த்தை மிஷனறி சபை (ஊர்காவற்றுறை)
**தலைமைப் போதகர் அ.அருள்ராஜா**
**தேவவார்த்தை மிஷனறிசபை, ஊர்காவற்றுறை, இலங்கை.**
**077 600 0942**
**வணபோதகர் சுவிசேஷகர் பாஸ்கரன்**
**விசுவாச வாழ்வு திருச்சபை**
**நெதர்லாந்து 077 600 0937**
george.kathiresu@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகளில் 28 ஆம் திகதி டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

பாடசாலைகளில் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கல்வி நடவடிக்கைகளை நிறுத்தி.டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தை முன்னெடுக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து பாடசாலையைச் சுத்தம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபடவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



அம்மாள் துணை

ஐந்தாவது குருபூஜை
வல்லிபுரம்
பாங்கயவல்லி
(செல்லப்பாச்சி)
24.07.2017 திங்கட்கிழமை
(11.00 மணி தொடக்கம் 2.00 வரை

இடம்:
சடையம்மா மடம் வெள்ளைப் பிள்ளையார் ஆலய சுற்றாடலில் மேற்படி அம்மையாரின் குருபூசை யூலை மாதம் 24 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் பதினொருமணி தொடக்கம் நடைபெறும். இந்த நிகழ்வில் அம்மையாரின் குருபூசையும், முதியோர் கௌரவிப்பு. உதவிகள் வழங்கல். பஜனை. அறிவுரைகள். நிகழ்ச்சிகளுடன், மகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.

இது ஒரு நல்லூர் லயன்ஸ்கழக 2017 - 2018 ஆம் ஆண்டிற்கான முதலாவது செயற்றிட்டமாகும். லயன்ஸ்கழக உறுப்பினர் லயன் பரமசிவத்துடன் இணைந்து நடைபெறவுள்ளதால். லயன்ஸ்கழக உறுப்பினர்களையும். உற்றார். உறவினர். நண்பர்கள் எல்லோரையும் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

லயன்ஸ்கழகமும்,
பரமசிவம் - குடும்பத்தினரும்.

4 ஆம் வருட நினைவலைகள்



மண்வரவு
03 . 05 . 1965

விண்விரைவு
05 . 08 . 2013

திருமதி ஜெகதீஸ்வரி சற்குணரத்தினம்
(ஜெகாரீச்சர் - புவியியல்)

தொப்புள் அறுவையிலே தொடர்பும்
அறுத்திருந்தால் கணநேரப் பொழுதினிலே
கவலைகளை மறந்திருப்போம் - அம்மா
வஞ்சகமே இல்லாத நெஞ்சம் அம்மா - உங்களுக்கு
பாதியிலே போவதற்கா இந்த நெஞ்சம் உந்தனுக்கு
எம்மை தவிக்கவிட்டு நான்கு வருடமென்ன
நானூறு வருடம் சென்றாலும் ஆறாதம்மா எம் துயரம்.

"கேனுவாசம்"
கோயிலாமனை, கொடிகாமம்.
077 636 5732

தகவல் :
பிள்ளைகள், கணவர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
24 . 04 . 1930

இறப்பு
01 . 08 . 2016

திருமதி அன்னப்பிள்ளை சின்னராசா

எங்கள் அன்புத் தெய்வமே .......
பிள்ளைகளுக்கு ஒரு அன்பு தாயாய்
மருமக்களுக்கு நல்லதொரு மாமியாராய்
பேரப்பிள்ளைகளுக்கு நல்ல ஒரு அம்மம்மாவாய்
பூட்டப்பிள்ளைகளுக்கு நல்லதொரு பூட்டியாய்
இருந்து எம்மை விட்டு சென்றீர்களே
எங்கள் இதயம் கனத்த வேதனையுடன்
உங்களை நினைக்கின்றோம்

ஆண்டவரே இது கனவாக இருக்கக்கூடாதா ?
என்று விம்மி விம்மி அழுது கனத்த இதயத்துடன்
எங்கள் கண்ணீரை காணிக்கையாக சமர்ப்பிக்கிறோம்
ஆண்டு ஒன்று கடந்து விட்டதே எங்கள் வீட்டு தெய்வமே !

"மிதிலை"
டச்சு வீதி, உடுவில்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# நிறைவேற்றதிகாரத்தை ஒழிக்கவே மைத்திரிக்கு மக்கள் ஆணையிட்டனர்

*அவர் அதை மறந்துவிடக் கூடாதென்கிறது ஜே.வி.பி*

கொழும்பு, ஜூலை 22
நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை ஒழிக்கப்பட்டாகவேண்டும். அதில் மாற்றுக் கருத்துக் கிடையாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இரத்தினபுரி எஹலியகொடவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015 அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன மக்களுக்கு அதிக வாக்குறுதிகளை வழங்கினார். அதில் முக்கியமானதுதான் நிறைவேற்று அதிகாரம் அரச தலைவர் முறைமையை இல்லாதொழித்தல் என்ற வாக்குறுதி.மைத்திரி பொது வேட்பாளராகக் களமிறங்கியதன் முக்கிய நோக்கமே அதுதான்.

தேர்தல் முடிந்த பின் இந்த நிறைவேற்று அதிகாரத்தை முற்றாக நீக்கக்கூடிய அரசமைப்பின் திருத்தமோ அல்லது புதிய அரசமைப்போ இன்னும் கொண்டுவரப்படவில்லை. புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்று வாக்குறுதி வழங்கப்பட்டு அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு குழுக்கள் அமைத்து செயற்பாடுகள் தொடங்கப்பட்டன. அந்தச் செயற்பாடுகள் முடிவின்றித் தொடர்கின்றன..

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இப்போது இதுபற்றி ஒரு வசனமேனும் பேசுவதாக இல்லை. நிறைவேற்று அதிகாரத்தை நீக்க முடியாது என்றும் புதிய அரசமைப்பு தேவை இல்லை என்றும் அரச தலைவர் தலைமை வகிக்கும் சுதந்திரக் கட்சி இப்போது கூறுவதை அவதானிக்க முடிகின்றது.

நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமையை முற்றாக இல்லாதொழிப்பேன் என்று மைத்திரிபால மாதுளுவாவே சோபித தேரரின் உடலின் முன்னால் வாக்குறுதியளித்தை நாம் மறக்கவில்லை. ஆனால், அவர் மறந்துவிட்டதாகவே எமக்குத் தெரிகின்றது.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியும் சோபித தேரின் உடலுக்கு முன்னால் வழங்கிய வாக்குறுதியும் நிறைவேற்றப்பட வேண்டும். இதற்காகவே மக்கள் ஆணை வழங்கினர். இந்த ஆணையை ஒருபோதும் மீற முடியாது- என்றார். (த-3)



## ஐ.தே.கவின் 71ஆவது ஆண்டு விழாவிலும் மைத்திரிபாலவே தலைமை அதிதி

கொழும்பு, ஜூலை 22
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி வரவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் 71ஆவது நிறைவுக் கொண்டாட்டத்துக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைத் தலைமை அதிதியாக அழைப்பதற்கு முடி வெடுக்கப்பட்டிருப்பதாகச் சிறிகொத்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த செப்ரெம்பர் மாதம் கட்சியின் 70ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் பொரளை கெம்பல் மைதானத்தில் நடந்தபோதும் அரசதலைவர் மைத்திரிபால அதில் தலைமை அதிதியாகக் கலந்துகொண்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கட்சியின் நிறைவேற்று[illegible]க் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது எனவும், ஆண்டு விழா நடைபெறவுள்ள இடம்பற்றி பின்னர் முடி வெடுக்கப்படும் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த)

## அரச தலைவர் பங்கேற்புடன் தேசிய இஸ்லாமியத் தினம்

*கம்பளை சாகிரா கல்லூரியில் ஏற்பாடு*

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக தேசிய இஸ்லாமிய தின கலாசார விழாவை அரசதலைவர் தலைமையில் தலைமையில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்வியமைச்சின் ஏற்பாட்டில் நவம்பர் மாதம் இரு நாள்கள் கம்பளை சாகிரா கல்லூரியில் இந்த விழா நடைபெறும்.

அன்றையதினம் மீலாத் நபி விழா தொடர்பாக நாடளாவிய ரீதியில் நடத்தபட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு அரச தலைவரால் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படும்.

இது தொடர்பான ஆரம்ப கட்டக் கலந்துறையாடல் ஒன்று கல்வி அமைச்சில் நடைபெற்றது. இந்தக் கலந்துறையாடலில் கல்வி இராஜாங்க அமைச்சர் வீ. இராதாகிருஸ்ணன் இராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவவிதான உட்பட பலர் கலந்து கொண்டனர். (த-ய)

## இரு வாரங்களுக்குள் அரசு பெரும்பான்மை இழக்கும்

*டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு*



கொழும்பு, ஜூலை 22
இலங்கை அரசு இன்னும் இரண்டு வாரங்களில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இழக்கும் என்று கூட்டு எதிரணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நடப்பது ஐ.தே.கவின் ஆட்சி தான். எனவே இதில் அங்கம் வகிக்கின்ற சுதந்திரக் கட்சியினர் அரசை விட்டு வெளியேற வேண்டும்.

நாடு எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை தீர்க்கின்ற ஆற்றலை இந்த அர்சு இழந்து விட்[illegible]. இத்தகைய அர[illegible] பதவி வகிப்பது பயனற்றது. எனவே சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அரசை விட்டு விலகி எம்முடன் இணைய வேண்டும்.

எல்லோரும் எம்முடன் இணைவார்கள் என்று நான் எண்ணவில்லை. ஆனால் இணைய விரும்புபவர்களை நாம் வரவேற்கிறோம்-என்றார். (த)

## துறைமுக அதிகார சபைக்கு 38 வயது

*ஓய்வுபெறும் ஊழியர்களுக்கு கௌரவம்*

கொழும்பு, ஜூலை 22
இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு 38 ஆண்டுகள் பூர்த்தியாகுவதை முன்னிட்டு ஓய்வுப்பெற்ற ஊழியர்கள் நினைவுச் சின்னங்களை வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் சுதந்திர ஊழியர்கள் சங்கம் இதனை ஏற்பாடுச் செய்திருந்தது.

மகபபொல துறைமுகங்கள் மற்றும் சமுத்திரவியல் பயிற்சி நிலையத்தில், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. அமைச்சர்களான மகிந்த அமரவீர, துமிந்த, [illegible] உட்பட பலர் இதில் கலந்துகொண்டனர். (த-ய)

## திருமணத் தோழனை சந்தித்த மைத்திரிபால

கொழும்பு, ஜூலை 22
பழைய நினைவு ஒன்றை மீட்டிப் பார்க்கும் ஓர் அருமையான சந்தர்ப்பம் ஓரிரு நாள்களுக்கு முன் அரச தலைவர் மைத்திரிபாலவுக்குக் கிடைத்தது. அதுதான் அவரது திருமண நாள். அவர் சற்றும் எதிர்பார்த்திராத தருணத்தில் அது நடந்தது.

பாணந்துறை நகர சபை மைதானத்தில் போதைப்பொருளுக்கு எதிரான கூட்டம் அரச தலைவர் மைத்திரிபாலவின் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வு முடிந்து நடையில் சென்று மக்களைச் சந்தித்த மைத்திரிக்கு இன்ப அதிர்ச்சி ஒன்று காத்திருந்தது.

நீண்ட காலத்துக்குப் பிறகு அவரது நண்பர் ஒருவரைச் சந்திக்கக் கிடைத்ததுதான் அந்த இன்ப அதிர்ச்சி. அதில் சிறப்பு என்னவென்றால் அந்த நண்பர் மைத்திரிபாலவின் திருமணத்தின்போது தோழனாகக் கலந்துகொண்டவர் என்பதுதான்.

ஓய்வுபெற்ற ஆசிரியரான அந்த நண்பரைக் கட்டி அனைத்து புகைப்படம் எடுத்து தனது பழைய நினைவுகளை மீட்டி மகிழ்ந்தாராம் மைத்திரி. (த-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலுடன் சந்திப்புகளை நிறுத்தப் போகின்றோம்

## அரச மருத்துவர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 22

சைட்டம் சர்ச்சை தொடர்பில் தங்களது சங்கமும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் எடுத்துள்ள ஆக்கபூர்வமான முடிவுகளைச் சுகாதார அமைச்சர் உதாசீனம் செய்துவருவதால் தொடர்ந்தும் தலைமை அமைச்சருடன் கலந்துரையாடல்களை நடத்துவதை நிறுத்திக் கொள்ளவுள்ளதாக இலங்கை அரச மருத்துவர் அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் மருத்துவக் கல்வியின் குறைந்தபட்சத் தரத்தை நிர்ணயிப்பதற்கான சட்டவரைமுறைகளைப் பரிந்துரை செய்யுமாறு தலைமை அமைச்சர் சட்டவரைவுத் திணைக்களத்துக்கு அறிவித்தல் கொடுத்துள்ளபோதிலும் பல்வேறு சட்டச் சிக்கல்கள் காரணமாக அதைச் செய்யமுடியாதெனச் சட்டவரைவுத் திணைக்களம் பதிலளித்துள்ளதால் தலைமை அமைச்சரின் வாக்கு வெறும் பேச்சளவிலேயே இருப்பதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.

நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையை அரசு பொறுப்பேற்றபோது எந்தவிதமான சட்டவரைமுறைகளும்பின்பற்றப்படவில்லை. எனினும், அது பொதுச் சொத்தாக வரும்போது பல்வேறு சட்டச்சிக்கல்கள் உருவாக இடமுண்டு.

இவ்வாறான பின்விளைவுகள் பற்றிச் சற்றும் சிந்திக்காமல் சுகாதார அமைச்சர் தன்னிச்சையாக எடுத்திருக்கும் முடிவுகள் நியாயமற்றவை. அரச தலைவரும் தலைமை அமைச்சரும் எடுக்கும் முடிவுகளைக்கூட அலட்சியம் செய்து தன்போக்கில் செயற்படும் சுகாதார அமைச்சரை அவர்கள் இருவரும் கட்டுப்படுத்தாவிட்டால் தொடர்ந்தும் அவர்களுடன் பேசுவதில் எவ்வித பலனும் கிட்டப்போவதில்லை என்று மருத்துவர் ஹரித அளுத்கே மேலும் கூறியுள்ளார். (த)


60 ஆவது
சேவை நலன் பாராட்டும்
பிறந்தநாள் வாழ்த்தும்
(22.07.2017)
Happy Birthday


Congratulation

திரு.நடராசபிள்ளை இராசகுமாரன்
(நிர்வாக கிராம அலுவலர் - பிரதேச செயலகம் தென்மராட்சி)

சேவைதனில்: (40 வருட சேவை)

- 20.05.1977 - 05.11.1978
  கட்டடங்கள் திணைக்களம் மன்னார்.
- 06.11.1978 - 31.01.1984
  கட்டடங்கள் திணைக்களம் வவுனியா
- 01.02.1984 - 28.02.2009
  கிராம அலுவலர் இடைக்குறிச்சி -J/341
- 01.03.2009 - 10.06.2013
  கிராம அலுவலர் வரணி - இயற்றாலை - J/343
- 10.06.2013 - 31.05.2016
  கிராம அலுவலர் நாவற்காடு - J/338
- 01.06.2016 - 21.07.2017
  நிர்வாக கிராம உத்தியோகத்தர் தென்மராட்சி

வட வரணி பெற்றெடுத்த நற்குமாரனே!
இராஜ நாமம் கொண்ட இராஜகுமாரனே!
இல்லறமும் நல்லறமும் இனிதே யாற்றி
கிராமத்தை நிர்வகிக்கும் அரச பதவியை
திறம்பட ஆற்றிய செயல் வீரனே!
கடமையில் கருத்தாய் காரியம் பலவாற்றி
கருத்தினில் நிறைந்தீர் காலம் என்றும் வாழ்க.

இன்று (22.07.2017) நாற்பது வருட அரச சேவையிலிருந்து ஓய்வுபெறும் நிர்வாக கிராம அலுவலர் திருவாளர் நடராசபிள்ளை இராஜகுமாரன் அவர்களை மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
வரணி வாழ் கிராம அலுவலர்கள்.


# 2025 ஆம் ஆண்டு வரை கூட்டு ஆட்சிதான் தொடரும்

## அடித்துக் கூறுகின்றார் ராஜித

கொழும்பு, ஜூலை 22



கூட்டு அரசு அதன் கோட்பாடுகளை முன்னோக்கிக் கொண்டு செல்வதில் உறுதி பூண்டுள்ளது. எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அத்துடன், இரண்டு பிரதான தேசியக் கட்சிகளும் இணைந்து அமைத்துக் கொண்ட கூட்டு அரசு 2020 ஆம் ஆண்டுவரை தொடரும் எனவும், 2020ஆண்டு தேர்தலின் பின்னர் 2025 வரை ஒப்பந்தம் புதுப்பிக்க[illegible]டும் என்றும் அவர் கூறி[illegible]ர்.

ஜப்பானிய வேலைத்திட்டத்தின் கீழ் கல்கமுவயில் அமைக்கப்படும் வைத்தியசாலையின் பணிகளை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்தகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு அரசு மனிதநேயக் கொள்கையின்படி மக்களுக்கான சலுகைகளை வழங்கும். ஏழைகளுக்கு இலவசமாக மின்சாரத்தை வழங்கியது. கூட்டு அரசால் நாட்டுக்குச்செய்யப்படும் சேவையை ரூபாக்களால் அளவிட முடியாது. மனிதநேயத்தின் அடிப்படையில்தான் அளவிட முடியும்.

சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் பெரும் பணியை கூட்டு அரசு முன்னெடுத்து வருகின்றது. மாற்றத்தை ஏற்படுத்தும்போது பல்வேறு வகையான குற்றச்சாட்டுகளை எம் மீது சுமத்துகின்றனர். இது பண்டாரநாயக்க காலம் முதல் தொடர்கின்றது. அபிவிருத்தியை ஏற்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

உயர்கல்வி மற்றும் சுகாதாரத்தை தனியார் மயப்படுத்துவதாகச் சிலர் கூறுகின்றனர். உயர்கல்வியையும், சுகாதாரத்தையும் அபிவிருத்தி செய்ய அரச தலைவர் மைத்திபால சிறிசேனவே பெரும் சேவையைச் செய்துள்ளார். புகையிலையைக் கட்டுப்படுத்த கூட்டு அரசு எடுத்த முயற்சி வெற்றியளித்துள்ளது. அதனை அரச தலைவர் தீர்மானித்திருந்தார்.

கூட்டுஅரசை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு எதிராகப் பல தடைகள் ஏற்படுகின்றன. ஆனால், அரசு தனது பயணத்தை நிறுத்தாது. 2020ஆம் ஆண்டுவரை தேசிய அரசு நல்லாட்சி அரசு தொடரும் என்பதுடன், அதன்பின் புதிய ஒப்பந்தத்துடன், 2025ஆம் ஆண்டுவரையும் இந்த அரசு தொடரும் - என்றார். (த)

# உள்ளூராட்சித் தேர்தல் நடவடிக்கைகள் தீவிரம்

## தடைகள் அனைத்துமே நீக்கம் என்கிறார் உள்ளூராட்சி அமைச்சர்



கொழும்பு, ஜூலை 22

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தப்பா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தேர்தல் முறையில் தொகுதி மற்றும் விகிதாசார அடிப்படையில் ஆசங்களை ஒதுக்கீடு செய்வது குறித்தும், பெண்களுக்கு 25 வீத வாய்ப்பளிப்பது குறித்தும் பேச்சுகள் நடைபெற்று வருகின்றன.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்துவதற்கான சட்டவரைவு பேச்சுக்களையடுத்து நிறைவேற்றப்படும். சட்டவரைவு நிறைவேற்றப்பட்டு 55 நாள்களில் தேர்தலை நடத்தக்கூடியதாக இருக்கும். 60 வீதம் தொகுதிவாரி அடிப்படையிலும், 40 வீதம் விகிதாசார அடிப்படையிலும் ஆசன ஒதுக்கீட்டை மேற்கொள்ள அனைத்துக் கட்சிகளும் இணங்கியுள்ளன. தற்போது அனைத்துத் தடைகளும் நீங்கியுள்ளதால் விரைவில் தேர்தல் நடைபெறும் - என்றார். (த)


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCY

Applications are invited by me up to 21.08.2017 from suitably qualified persons for the following post.

**1. FARM MANAGER (GRADE III)**

**Qualifications:**

Should possess a four year degree in Agriculture from a recognized University/HEI with not less than two (02) years of Field Experience in Crop, Husbandry and/or Animal Sciences in a recognized establishment after graduation.

Salary Scale : U-EX 1(II)

Rs. 49,860 - 3X 1,125 - 53,235 (EB) 54,475; 12X1,240 - 69,355/- p.m. as at 01.01.2020
Rs. 35,556 - 3X 801 - 37,959 (EB) 38,842; 12X883 - 49,438/-p.m. as at 01.01.2017

Selection : By Structured Interview

Age limit for the above posts: Not more than 45 years

( Note – Age limit is not applicable for applicants in the Government Departments /State Corporations and Statutory bodies )

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care

Applications should be on specified forms issued by the University. Application forms and particulars for the above post should be obtained from the Office of the Senior Assistant Registrar / Establishments [Non –Academic] of this University on a payment of Rs. 100/- for each application form at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order / Postal Order to the value of Rs. 100/- drawn in favour of the Bursar, University of Jaffna together with self addressed Rs.10/- Stamped envelope of 23X10 c.m in size. Only Applications sent on the specified form will be accepted. (Please annexed copies of relevant documents). The envelope containing the dully filled application form must bear"Post of Farm Manager" on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the Registrar on orbefore 21.08.2017.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

**REGISTRAR,**
**University of Jaffna.**
**21.07.2017.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பில் 4 ஆயிரம் போலி பிச்சைக்காரர்கள்

கொழும்பு, ஜூலை 22
கொழும்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் யாசகம் செய்வதை (பிச்சையெடுத்தல்) ஒரு தொழிலாகக்கொண்டு 4 ஆயி ரம் பேர் செயற்பட்டு வருகின்றனர் என்று மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வொன்றில் தெரிய வந்துள்ளது. இவர்களுள் பெரும்பாலானவர்கள் கொழும்பில் வசிக்காதவர்கள் என்றும், வெளி இடங்களிலிருந்து வந்தே மிகவும் சூட்சுமமான முறையில் யாசகம் செய்து, அதைத் தொழிலாக நடத்தி வருகின்றனர் என்றும், இவர்களுள் சிலர் ஒரு வலையமைப்பாகச் செயற்படுவதுடன், அவர்களை வழிநடத்தக் குழுவொன்று இருக்கின்றது எனவும் கண்டறி யப்பட்டுள்ளது.
அத்துடன், கொள்ளை உள்ளிட்ட சமூக விரோதச் செயல்களில் இவர்களில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர் என்றும், மேற்படி யாசகர்களால் சாதாரண மக்களுக்குப் பல வழிகளிலும் இடையூறுகள் ஏற்படுகின்றன என்றும் தெரியவந்துள்ளது.
எனவே, இனிவரும் நாள்களில் இவ்வாறானவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.
அதேவேளை, கொழும்பில் 660 பேர் மட்டுமே உண்மையான யாசகர்களாக இருக்கின்றனர் எனக் குறித்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. (த-3)

# அரசிலிருந்து எவருமே வெளியேறமாட்டார்கள்

## டிசெம்பரில் சு.கவின் முடிவை அறிவிப்போம் என்கிறார் துமிந்த



கொழும்பு, ஜூலை 22
வீடு என்றால் ஆயிரம் சண்டை இருக்கும். சாதாரண சட்டைக்காக உடனே எவரும் வெளியேற மாட்டார்கள். டிசெம்பர் மாதம் இறுதியில் தேசிய அரசில் சுதந்திரக் கட்சி தொடர்ந்து இருக்குமா? இல்லையா? என்று அறிவிப்போம்."
இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் விவசாய அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.
சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தேசிய அரசியல் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டு வரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து சிலர் விலகவுள்ளனர் என்று பல தரப்பும் கருத்து வெளியிட்டு வருகின்றன. பிரச்சினைகள் ஏற்படுவது சாதாரணமே. வீடு என்றால் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கும். அதற்கான சிறிய பிரச்சினையொன்று ஏற்பட்டவுடன் எவரும் உடனே வீட்டைவிட்டு வெளியேறிவிட மாட்டார்கள்.
இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையிலேயே கடந்த 2015ஆம் ஆண்டு தேசிய அரசை அமைத்தோம். எதிர்வரும் டிசெம்பர் மாதம்வரை தேசிய அரசின் ஒப்பந்தம் தொடரும். அதற்குப் பின்னர் தேசிய அரசில்நாங்கள் தொடர்ந்து பயணிப்பதா? இல்லையா? என்ற முடிவை அறிவிப்போம் - என்றார். (த)

## கறுப்பு ஜூலை நினைவு கனடாவில் ஞாயிறன்று

கொழும்பு, ஜூலை 22
பன்னாட்டுச் சமூகத்திடம் நீதி உரிமை வேண்டித் தமிழர் நடத்தும் கறுப்பு ஜூலை நினைவின் மாபெரும் ஒன்றுகூடல் கனடா அல்பர்ட் கம்பல் சதுர்க்கத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை, கனடா நேரப்படி மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.
கனடியத் தமிழர் தேசிய அவையினால் இது தொடர்பில் வெளியிடப்பட்ட பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
1983ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழரைக் கொன்று குவித்து ஆரம்பமான தமிழினப் படுகொலை 34 ஆண்டுகள் கடந்தும் தொடர்கின்றது. தனது பொறுப்பில் இருந்து தொடர்ந்தும் தவறி நிற்கும் பன்னாட்டுச் சமூகத்தை அதன் மனிதநேயக் கடமைகளை ஆற்ற வைக்க நாம் தொடர்ந்தும் கடுமையாக உழைக்க வேண்டும்.
ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் நிலங்களை அபகரிப்பதில் மிகவும் மும்மரமாகச் செயற்பட்டார்கள். அதன் உச்சக்கட்ட நடவடிக்கையே தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் தமிழர் நில அபகரிப்பு என்பதைப் பார்க்கக் கூடியதாகவுள்ளது. முள்ளிவாய்க்கால் பேரவலத்தை ஏற்படுத்தியவர்கள் தொடர்ந்து தமது இலக்காகத் தமிழர் மண்ணைப் பறிக்கும் முயற்சியில் இறங்கியிருப்பது ஒன்றும் புதிய விடயமில்லையெனினும் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் நில அபகரிப்பின் தீவிரம் மிகுந்த அச்சத்தைத் தருவதாக அமைகின்றது.
ஜூலையில் படுகொலை செய்யப்பட்ட எம் உ... களை நினைவுகூர்வதுடன் போர்க்குற்றங்கள் குறித்துச் இலங்கை மீது சுயாதீனமான பன்னாட்டு விசாரணை ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்த நேரத்தில் அதற்குரிய ஆதரவை முற்றுமுழுதாக வழங்க வேண்டும். மனித உரிமைகளை இலங்கை மதிக்கும் வரை, இராஜதந்திரப் பொருளாதாரத் தடைகளை விதிக்கவேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து மாபெரும் ஒன்றுகூடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
அதியுச்ச வேகத்தில் முடுக்கிவிடப்பட்டுள்ள இனப்படுகொலையிலிருந்து எம் உறவுகளைக் காப்பாற்ற ஐ.நா. மேற்பார்வையில் இடைக்கால தன்னாட்சி அலகு நிறுவப்பட வேண்டும். எமது மக்களுக்கு நிரந்தரமான தீர்வாக ஐ.நா. மேற்பார்வையில் வாக்கெடுப்பை நடத்தி எமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்காக 'கருத்து கணிப்பு 2020' என்ற நடவடிக்கையை ஆரம்பித்துள்ளோம் - என்றுள்ளது. (த-5)

# தேர்தல்களை பின்தள்ளி சூழ்ச்சி செய்கிறது அரசு

## திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 22
தேர்தல்களைத் தள்ளிப் போடும் சூழ்ச்சித் திட்டங்களையே இந்த ஆட்சி தற்போது நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகின்றது எனச் சம சமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
எமது நாட்டின் உரிமைகள், சுதந்திரங்கள் உட்பட அனைத்தையும் தற்போதைய அரசு இல்லாதொழித்து விட்டது.
அதுமட்டுமல்லாது எமது நாட்டின் பொருளாதாரத்தை எமக்கு ஏற்ப கொண்டுசெல்ல முடியாமல் பன்னாடுகளுக்கு அடிபணிந்து செயற்பட்டு வருகின்றது.
மேலும், புதிதாகக் கொண்டு வரப்படவுள்ள வருமான வரி தொடர்பில் தொழிற்சங்கங்களிடம் கலந்துரையாடப்படவில்லை. இது குறித்து தொழிற்சங்கங்களிடம் கலந்துரையாடப்பட வேண்டியது மிக முக்கியமாகும்.
ஏதோ ஒரு நாட்டின் ஆலோசனைக்ளைக் கேட்டுக் கொண்டு அதற்கமைய எமது நாட்டில் வருமான வரி தொடர்பிலான பிரேரணையைக் கொண்டு வருவது என்பது வெட்கப்படவேண்டிய விடயமாகும்.
இதேவேளை, நாட்டில் குறிக்கப்பட்ட தினங்களில் தேர்தல்களை நடத்துவது முதன்மையானதாகும். தற்போதைய ஆட்சியானது தேர்தல்களைத் தள்ளிப்போடும் சூழ்ச்சித் திட்டங்களையே செய்துகொண்டு வருகின்றது.
இத்தகைய செயற்பாடானது மக்களின் உரிமைகளையும் வாக்குரிமையையும் மீறும் நடவடிக்கையாகும். இதனை நாம் முற்று முழுதாக எதிர்க்கின்றோம் - என்றார். (த-ய)






## சு.கவின் 66ஆவது மாநாட்டை கொழும்பில் நடத்த ஏற்பாடு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆவது மாநாட்டை மிகவும் பயனுள்ளதாக நடத்துவதற்கான ஏற்பாட்டைக் கட்சியின் மத்திய குழு முன்னெடுத்து வருகின்றது என மீன்பிடி அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 65ஆவது மாநாடு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் குருநாகலையில் கடந்த வருடம் சிறப்பாக நடைபெற்றது. இம்முறை 66ஆவது மாநாட்டைக் கொழும்பில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. செப்ரெம்பர் மாதம் கொழும்பு கெம்பல் பார்க் மைதானத்தில் இந்த மாநாட்டை மக்களுக்குப் பயனுள்ள மற்றும் அர்த்தமுள்ளதாக நடத்தத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (த)

## ரணில் ஒரு பொய்யர்



கொழும்பு, ஜூலை 22
தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க நாட்டு மக்களுக்கு பொய்களை மட்டும் கூறிக்கொண்டு வரும் ஒருவராகவே தொடர்ந்தும் செயற்பட்டுக் கொண்டு வருகின்றார் என மகிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான மகிந்தானந்த அளுத்கமகே குற்றஞ்சாட்டியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனாவுக்கு விற்பது குறித்து கடந்த காலங்களில் அதிகமான விமர்சனங்கள் வெளிப்படுத்தப்பட்டு வந்தன.
கூட்டு எதிர்க்கட்சியினர் இந்தச் செயற்பாட்டை எதிர்த்து போராட்டங்களையும் செய்தனர். அதன் பின்னர் குறித்த துறைமுகம் விற்கப்படாது என்ற பொய்யான தகவல்கள் வெளியிடப்பட்டன. மக்களும் அதனையே நம்பினர்.
எனினும், தற்போது பராக்கிரம திஸாநாயக்கவைத் துறைமுக அதிகாரிகளின் தலைவராக நியமித்து அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனாவுக்கு விற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
ஆரம்பத்தில் 700 ஏக்கர்கள் நிலப்பரப்பையே சீனாவுக்குக் கொடுப்பதாக இருந்தது. எனினும் தற்போது 1100 ஏக்கர் பரப்பளவு சீனாவுக்கு விற்கப்பட உள்ளது.
இதன்மூலம் கிடைக்கப்பெறுவதாகக் கூறப்பட்ட இலாபமும் கிடைக்காது. இதனால் தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படும்.
விரைவில் இது குறித்த அறிக்கை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதனால் அனைவரும் அவதானத்துடன் இருக்க வேண்டும்- என்றார். (த-ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜப்பான் நாசகாரிகள் கொழும்பில்

கொழும்பு, ஜூலை 22

பெரிய உலங்குவானூர்தித் தாங்கி நாசகாரிக் கப்பல் உள்ளிட்ட ஜப்பானிய கடற்படையின் இரண்டு போர்க்கப்பல்கள் நேற்று முன் தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

ஜப்பானிய கடற்படையின் 248 மீற்றர் நீளம் கொண்ட இசுமோ என்ற உலங்குவானூர்தி தாங்கி நாசகாரிக் கப்பலும், 151மீற்றர் நீளம் கொண்ட சசனாமி என்ற போர்க்கப்பலுமே கொழும்பு வந்துள்ளன.

இசுமோ என்ற உலங்குவானூர்தித் தாங்கி நாசகாரிக் கப்பலில் 970 கடற்படையினரும், சசனாமி என்ற போர்க் கப்பலில், 175 கடற்படையினரும் பணியாற்றுகின்றனர்.

இந்திய அமெரிக்கக் கடற்படைகளுடனான மலபார் கூட்டுப் பயிற்சிக்காக வங்காள விரிகுடாவுக்கு வந்திருந்த இந்தக் கப்பல்கள் மூன்று நாள்கள் பயணமாக இலங்கை வந்துள்ளன.

நாளை மறுதினம் வரை கொழும்பில் தரித்திருக்கும் இந்தக் கப்பல்களில் உள்ள ஜப்பானியக் கடற்படையினர், இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து மனிதாபிமான உதவி மற்றும் இடர் மீட்புப் பயிற்சிகள் உள்ளிட்ட கூட்டுப் பயிற்சிகள் மற்றும் விளையாட்டுக்களிலும் ஈடுபடவுள்ளனர்.

இசுமோ என்ற உலங்குவானூர்தி தாங்கி நாசகாரிக் கப்பல், 9 உலங்குவானூர்திகள் நிரந்தரமாகத் தரித்து நிற்கும் வசதிகளைக் கொண்டது. அதேவேளை அதிகபட்சமாக 28 உலங்குவானூர்திகளை நிறுத்தும் வசதிகள் இதில் இருக்கின்றன. (த)

# அதிகாரப் பகிர்வில்லாத அரசமைப்புக்கே ஆதரவு

## கூறுகிறார் பிரதி அமைச்சர் அருந்திக்க

கொழும்பு, ஜூலை 22

அதிகார பகிர்வு இல்லாத புதிய அரசமைப்புக்கே நாம் ஆதரவு வழங்குவோம் என்று பிரதி அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களுக்குச் சிறந்த சேவையைச் செய்யக் கூடியவாறு மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்த மாகாண சபைகளின் ஊடாக நாம் செய்த சேவைகள் காரணமாகத்தான் மத்திய அரசில் இருந்த பலமிக்க அமைச்சர்களைக் கூடத் தோற்கடித்து எம்மால் நாடாளுமன்றத்துக்கு வர முடிந்துள்ளது.

இந்த அளவுக்கு அதிகாரம் மாகாண சபைகளுக்கு இருக்கும்போது இன்னும் மேலதிகமாக அதிகாரத்தை வழங்கவேண்டிய தேவை இல்லை.

தேர்தல் முறைமையை மாற்றுவதற்காகவும் வறுமையை ஒழிப்பதற்காகவும் புதிய அரசமைப்பு கொண்டு வரப்படுமாக இருந்தால் அதை ஆதரிக்கலாம். விருப்பு வாக்கு முறைமையால் மோசடிகள்தான் இடம்பெறுகின்றன. பணக்காரர்களுக்குத்தான் அதனால் நன்மை அதிகம். இந்த நிலைமை மாற வேண்டும்.

அதேபோல் 70 வீதமான மக்கள் வறுமையில் வாடுகின்றனர். இவர்களின் வறுமை ஒழிப்புக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அத்தோடு கல்வி,சுகாதாரம் போன்ற விடயங்களை முன்னேற்றுவதற்காக நிலையான கொள்கை வகுக்கப்பட வேண்டும். எந்த ஆட்சி வந்தாலும் அந்தக் கொள்கை மாறக்கூடாது. இவ்வாறானவற்றுக்காகப் புதிய அரசமைப்பு தேவைப்படுகின்றது.

இவ்வாறான விடயங்களுக்காக அரசமைப்பு கொண்டு வரப்பட்டால் நாம் எதிர்க்கட்சியில் இருந்தாலும் அதை ஆதரிப்போம். ஆனால், அதிகாரப் பகிர்வை வழங்கக்கூடிய அரசமைப்பு கொண்டு வரப்பட்டால் அதை நாம் எதிரிப்போம் - என்றார். (த-3)

# அதிகாரப் பகிர்வு குறித்து இறுதி முடிவேதுமில்லை

## வீரவன்ஸவின் கட்சி வெளியேறியது மடைத்தனம் என்கிறார் அனுரகுமார



கொழும்பு, ஜூலை 22

அதிகாரப்பகிர்வு குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்று அரசமைப்புச் சபையின் வழிநடத்தல் குழு உறுப்பினரும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அத்துடன், விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி [illegible]னது அரசமைப்புச சபையிலிருந்து வெளியேற எடுத்துள்ள முடிவானது சிறுபிள்ளைத்தனமானது என்றும் அவர் கூறினார்.

மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் மாநாடு நேற்று முன் தினம் முற்பகல் பெலவத்தையிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது, புதிய அரசமைப்பு தொடர்பிலும் அரசமைப்புச் சபையிலிருந்து தேசிய சுதந்திர முன்னணி வெளியேறியுள்ளமை குறித்தும் எழுப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீடுகளிலுள்ள சிறுபிள்ளைகள் பற்றி பெரியவர்கள் விழிப்பாகவே இருப்பார்கள். ஏனெனில், அவர்கள் மீதான கவனம் திசை திரும்பும் பட்சத்தில், விளையாட்டுப்பொருளை கீழே அடித்து விடுவார்கள். அது சிறுபிள்ளைத்தனம். எனவே, தேசிய சுதந்திர முன்னணியின் முடிவும் இதற்கு ஒப்பானதொன்றே. அது பற்றி பெரிதாக அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

நாட்டுக்குப் புதியதொரு அரசமைப்பு அவசியம். அதை இயற்றும்போது 3 முதன்மை விடயங்கள் தொடர்பில் பல கோணங்களில் கருத்துகள் முன் வைக்கப்பட்டுள்ளன. அவை பற்றி கருத்தாடல்கள் இடம்பெற்றன.

புதிய தேர்தல் முறைக்குச் சகல அரசியல் கட்சிகளும் 80 சதவீதமான இணக்கப்பாட்டுக்குள் வந்துவிட்டன. விரைவில் முழு சம்மதமும் கிடைக்குமென எதிர்பார்க்கின்றோம். நிறைவேற்று அரச தலைவர் முறைமையை ஒழிப்பதற்குப் பெரும்பான்மையான கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன. எனினும், ஓரிரு கட்சிகள் இந்த விவகாரம் பற்றி தொடர்ந்தும் கலந்துரையாடல் மட்டத்தில் இருக்கின்றன. வழிநடத்தும் குழுக் கூட்டத்தில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் இன்னும் இறுதி முடிவுக்கு வரவில்லை.

அத்துடன், ஒற்றையாட்சி,பௌத்த மதம் தொடர்பான சரத்துகள் பற்றி எந்தவொரு பேச்சும் இல்லை. அவை அப்படியே நிலையானதாக இருக்கும்-என்றார். (த)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எய்ட்ஸ் தொற்றுக் காரணமாக

# கடந்த வருடத்தில் உயிரிழப்பு 1,000,000

பாரிஸ், ஜூலை 22

உலகம் முழுவதும் கடந்த ஆண்டில் மட்டும் எய்ட்ஸுக்கு 10 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல் வந்துள்ளது.


ஐக்கிய நாடுகள் சபையின் ஏற்பாட்டில் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில், எய்ட்ஸ் அறிவியல் கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில் வைத்தே இந்தத் தரவு வெளியிடப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்களில் 53 சதவீதம் பேருக்கு மட்டுமே மருத்துவ வசதி கிடைக்கிறது. விழிப்புணர்வு பரப்புரைகளின் மூலம் எய்ட்ஸ் நோயாளிகளின் உயிரிழப்பு கணிசமாகக் குறைந்துள்ளது.

கடந்த 2005ஆம் ஆண்டில் எய்ட்ஸ் காரணமாக 19 லட்சம் பேர் உயிரிழந்தனர். இந்த எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வருகிறது. கடந்த ஆண்டில் 10 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். எதிர்வரும் 2020ஆம் ஆண்டுக்குள் 3 கோடி எய்ட்ஸ் நோயாளிகளுக்கு முறையான மருத்துவ சிகிச்சை கிடைக்க ஐக்கிய நாடுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)





ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக் சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பின் பிடியில் இருந்த ஈராக்கின் மோசூல் நகரம் அண்மையில் மீட்கப்பட்டது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மோசூலைக் கைப்பற்ற முன்னர் அது எவ்வாறு இருந்தது என்ற ஒளிப்படத்தையும், தற்போது அதாவது நீண்டதும் கொடியதுமான போர் நடைபெற்ற பின்னர் மோசூல் எவ்வாறு உள்ளது என்ற ஒளிப்படத்தையும் இணைத்து டெய்லி மெய்ல் ஊடகம் வெளியிட்டுள்ளது. (ம)

# கிளர்ச்சிக் குழுவுடனான உறவை முறித்துக்கொள்கிறது அமெரிக்கா

வொஷிங்டன், ஜூலை 22



சிரிய அதிபர் அல் அசாத்துக்கு எதிராகத் தோற்றம்பெற்ற ஆயுதக் குழுக்களுக்கு இராணுவ உதவி வழங்குவதை அமெரிக்கா நிறுத்தவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிரிய அதிபல் அல் அசாத்தை பதவி நீக்க வேண்டும் என்று தோற்றம்பெற்ற அழுத்தக்குழுக்கள் தற்போது ஆயுதக் குழுக்களாக மாறியுள்ளன.

அந்தக் குழுக்களுக்கு அமெரிக்கா இராணுவ உதவி செய்தது. அரச படைகளுக்கு ரஹ்யா உதவி செய்தது.

இதனால் சிரிய விவகாரம் அமெரிக்கா மற்றும் ரஷ்யா இடையிலான பரப்பரீட்சை என்றும் பார்க்கப்பட்டது.

இந்த நிலையில், சிரியாவில் அமைதி திரும்பவும், ரஷ்யாவுடனான உறவுகளை மேம்படுத்தவும் அமெரிக்கா சில முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒருபடியாக கிளர்ச்சிக் குழுக்களுக்கு ஆயுத உதவிகள் வழங்குவதை குறைக்க முடிவு செய்துள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா கிளர்ச்சி யாளர்களுக்கு ஆயுதம் வழங்க அனுமதி கொடுத்திருந்தார்.

கடந்த 2013ஆம் ஆண்டில் ஆரம்பித்த போர் சிறிய அளவிலான வெற்றிகளையே அமெரிக்காவுக்கு கொடுத்துள்ளது. இதனால் ஆயுத உதவியை நிறுத்த தற்போதைய அதிபர் ட்ரம்ப் முடிவு செய்துள்ளார் என்று அறியவருகிறது. (ம)



# சனாவில் உச்சக்கட்ட பாதுகாப்பு

ஏமன் தலைநகர் சனாவில் பாதுகாப்பு இருமடங்காக்கப்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஏமனில் ஹௌதி ஆயுதக் குழு செயற்பட்டு வருகிறது. அந்த அமைப்புக்கு எதிராக ஏமன் கடும் நடவடிக்கைகளை எடுத்து வந்தாலும் ஹௌதியின் கை அவ்வப்போது ஓங்குவது வழமை. இதனால் ஏமன் அரசுக்கு ஆதரவாக சவூதி தலைமையில் கூட்டுப்படை போரிட்டு வருகிறது. தலைநகர் சனாவை ஹௌதி தனது முக்கிய இலக்காக கொண்டுள்ள நிலையில் அங்கு தற்போது பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



# வெனிசுலா கலவரத்தில் 100 பேர் பரிதாபச் சாவு


கரஸ்கஸ், ஜூலை 22

வெனிசுலா அரசுக்கு எதிராக அங்குள்ள இளைஞர்களால் நடத்தப்படும் கலவரங்களில், அரச தரப்பால் மேற்கொள்ளப்படும் துப்பாக்கிச் சூடுகள் காரணமாக இதுவரை சுமார் 100 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

வெனிசுலா அதிபராக நிக்கோலஸ் மதுரோ உள்ளார். அவரின் ஆட்சியில் வெனிசுலா மிகப்பெரும் பொருளாதாரப் பின்னடைவை எதிர்கொண்டுள்ளது. இதனால் அவர் பதவி விலகவேண்டும் என்று ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்களே தற்போது கலவரங்களாக மாறியுள்ளன. கலவரங்கள் எல்லைமீறிச் செல்லும் போது அரச தரப்பால் கடுமையாக அடக்கப்படுகிறது. அவ்வப்போது துப்பாக்கிச் சூடும் நடத்தப்படுகிறது என்று குற்றம் சாட்டப்படுகிறது. கடந்த ஏப்ரலில் ஆரம்பித்த இந்தக் கலவரங்களால் இதுவரை சுமார் 100 பேர் உயிரிழந்தனர் என்று சொல்லப்படுகிறது. (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரிட்டனுக்கு பிரான்ஸ் உடும்புப்பிடி

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலக வேண்டுமானால் 100 பில்லியன் யூரோக்களை பேச்சுவார்த்தை தொடங்கும் முன்னரே கொடுக்க வேண்டும் என பிரான்ஸ் நிபந்தனை விதித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகுவதாக பிரிட்டன் அறிவித்ததை அடுத்து, இதற்கான நடைமுறை பேச்சுக்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், இது தொடர்பான விவாதங்கள் பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் நடைபெற்று வருகின்றன. பிரிட்டன் விலகுவதால் ஏகப்பட்ட கூட்டு ஒப்பந்தங்களும், இரு தரப்பு ஒப்பந்தங்களும் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. இது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில் பிரிட்டனின் விலகலால் தமக்கு ஏற்படப்போகும் இழப்புக்காக 100 பில்லியன் டொலர்களை அந்த நாடு செலுத்த வேண்டும். அதுவும் பேச்சு ஆரம்பமாகும் முன்னரேயே செலுத்த வேண்டும் என்று பிரான்ஸின் தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம)

## ஐ.எஸ்ஸுக்கு எதிரான போர்

# ரக்கா பெருநகர் சின்னாபின்னம்

டமஸ்கஸ், ஜூலை 22

சிரியாவின் ரக்கா நகரம் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போரில் பெரும் சேதத்தைச் சந்தித்துள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் ஈராக்கின் மோசூல், சிரியாவின் ரக்கா ஆகிய முக்கிய நகர்கள் இருந்தன. இந்த மாத ஆரம்பத்தில் மோசூல் நகரம் அரச தரப்பால் கைப்பற்றப்பட்டுவிட்டது. இந்த நிலையில் ரக்கா நகரிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைத் தோற்கடிப்பதற்கான போர் தற்போது மிகவும் உச்சமாக நடைபெற்று வருகிறது.

அமெரிக்கப் படை பெரும் முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. அதேநேரம் பல்வேறு திசைகளால் சிரிய அரசபடையும், கூட்டுப்படைகளும் முன்னேறி வருகின்றன.

கிட்டத்தட்ட முழுவதுமாக அழிந்துவிட்ட நிலையை ரக்கா தற்போது எட்டியுள்ளது. மோசூலைப் போன்று ரக்காவிலும் ஐ.எஸ். அமைப்பு மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துகிறது. இதனால் மீட்புப் பணிகள் மந்த கதிக்குச் செல்லலாம்.

சுமார் 2 லட்சம் மக்களின் நிலை தொடர்பில் ஐக்கிய நர்டுகள் சபை கவலை தெரிவித்துள்ளது. மக்களை மீட்பது, தற்கொலைத் தாக்குதல்களை முறியடிப்பது, நகரை மீட்பது என்று பலமுனைப் போரில் அரச தரப்புப் படைகள் சிக்கியுள்ளன. (ம)



# இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு எதிராக பலஸ்தீனப் பெண்கள் ஆர்ப்பாட்டம்

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு மனோபாவத்துக்கு எதிராக கிழக்கு ஜெருசலேமில் போராட்டம் நடத்தியுள்ளனர் பலஸ்தீனப் பெண்கள்.

பலஸ்தீனத்திடம் இருந்து பல்வேறு பகுதிகளை ஆக்கிரமித்து வந்துள்ள இஸ்ரேல், தற்போது கிழக்கு ஜெருசலேமைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது. அதைத் தன்னுடையதாக்கிக் கொள்ள பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன்படி கிழக்கு ஜெருசலேமில் ஏகப்பட்ட குடியிருப்புத் தொகுதிகளை இஸ்ரேல் அமைத்துள்ளது. அந்த நாட்டின் இத்தகைய ஆக்கிரமிப்பைக் கண்டித்து பலஸ்தீனப் பெண்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர். வழக்கம்போல் இஸ்ரேலால் கண்டுகொள்ளப்படாத ஆர்ப்பாட்டமாக இது நடந்து முடிந்தது. (ம)





# ஈரானியத் தூதர்களை விடுவிக்கிறது குவைத்

குவைத், ஜூலை 22

குவைத்தை உளவு பார்த்தமை, ஆயுதக் குழுக்களுடன் தொடர்பு வைத்திருந்தமை ஆகிய குற்றங்களுக்காக ஈரானியத் தூதர்கள் 15 பேரை நாட்டை விட்டு வெளியேறுமாறு குவைத் உத்தரவிட்டது.

குவைத்தில் 2015ஆம் ஆண்டில் தீவிரவாத தாக்குதல் நடந்தது. அந்த வழக்கில் கடந்த ஆண்டு 24 பேருக்கு தண்டனை விதிக்கப்பட்டது. எனினும் இது தொடர்பான புலனாய்வு நடவடிக்கைகள் தொடர்ந்துகொண்டே இருந்தன. இந்த நிலையில் குவைத்தை உளவு பார்த்தமை, ஆயுதக் குழுக்களுடன் தொடர்பு வைத்திருந்தமை ஆகிய குற்றங்களுக்காக ஈரானியத் தூதர்கள் 15 பேரை நாட்டை விட்டு வெளியேறுமாறு குவைத் நேற்று உத்தரவிட்டது. ஈரானுடன் கட்டாருக்கு இருக்கும் நட்புறவை விமர்சித்த நாடுகளில் குவைத்தும் ஒன்று. கட்டாருக்கு சில தடைகளையும் குவைத் விதித்திருந்தது. இந்த நிலையில் ஈரானியத் தூதர்களை அந்த நாடு வெளியேற்றியமையானது ஈரானுடன் ம[illegible] கொண்டிருக்கும் உறவு முடிவுக்கு வரும் நிலை[illegible] (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# கறுப்பு ஜூலையின் நினைவுகள்

தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான அரசியல் மோதல் ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்ததன் 35ஆவது ஆண்டுக்குள் நுழையப் போகிறோம். இந்த மூன்றரைதசாப்தங்களில்கிட்டத்தட்ட மூன்றுதசாப்தங்களைப் போரிலேயேகழித்திருக்கிறோம். லட்சக்கணக்கானஉயிரிழப்புகள், கணக்கற்ற சொத்தழிவுகள், பலப் பல மில்லியன் நிதிச் செலவுகள் என்பவற்றை ஏற்படுத்திய போர் முடிந்து 8 ஆண்டுகளின் பின்னரும் போர் உருவாகியதற்கான காரணங்கள் அப்படியேதான் இருக்கின்றன என்பது பெரும் துன்பியல்.

கறுப்பு ஜூலை என்று வர்ணிக்கப்படும் ஆடி இனக் கலவரம் தான்இலங்கையின்நவீனவரலாற்றைப்புரட்டிப்போட்டது. அரசியல் செல்நெறியைத் திசைமாற்றியது. தமிழர்களும் சிங்களவர்களும் சேர்ந்து ஒரே நாட்டில் வாழ முடியாது என்கிற நிலையைஏற்படுத்தியது. தனிநாட்டுக்கான ஆயுதப்போராட்டத்தை தமிழர்களின் பேராதரவுடன் முன்னகர்த்தியது.

1983ஆடி மாதம் 23ஆம்திகதியாழ்ப்பாணம்திருநெல்வேலி தபால்கட்டைச்சந்தியில் இலங்கைத்தரைப்படை பயணித்த வாகனத்தின்மீது பதுங்கித்தாக்குதல்நடத்தப்பட்டது. இதில் 13 படையினர் உயிரிழந்தனர்.

அதற்கு முன்னரே தமிழர்களை அரசியல் அதிகார ரீதியில் ஒடுக்கிவிடுவதற்கு முயன்று வந்த சிங்கள அரசுகள், தமிழர்களின் எதிர்ப்புக் குரலாலும் போராட்டங்களாலும் பெரிதும் ஆத்திரம் கொண்டிருந்தன. தமது முழுமையான அதிகாரத்தைக்கேள்விக்குட்படுத்தியதமிழர்களைஅடக்கிஒடுக்கிஒரு மூலையில் அமர்த்திவிடவேண்டும் என்று சிங்கள அதிகார வர்க்கத்திடம் கனன்றுகொண்டிருந்த நெருப்பு ஆடி 23 சம்பவத்துடன்பெருந்தீப்பிழம்பாகி கோரத்தாண்டவம் ஆடியது.

விளைவு, வரலாற்றில்மிகமிகத்துயரமானதமிழ் இனஅழிப்பு அரங்கேறியது. தமிழர்கள்என்றஒரேகாரணத்திற்காகத்தேடித் தேடி அழிக்கப்பட்டார்கள். அவர்களின் கடைகள், சொத்துக்கள் எரிக்கப்பட்டன, சூறையாடப்பட்டன, சேதமாக் கப்பட்டன. அரச காவலர்கள் பார்த்துக் கொண்டிருக்க, அவர்களின் அனுசரணையுடனேயே எல்லாக் கொடூரங்களும் அரங்கேறின. ஆட்சியாளர்கள் ஆசீர்வதித்து நின்றார்கள்.

அப்போதைய அரசதலைவர்ஜே.ஆர்.ஜெயவர்த்தன, அதற்கு முன்னரேதமிழர்களுடன் 'போர்என்றால்போர்அமைதி என்றால்அமைதி' என்றுநாடாளுமன்றத்திலேயே முழங்கியவர். எனவேஅவரது முழுமையானநல்லாசியுடன்தமிழர்களுக்கு எதிரானகாடைத்தனங்கள்போராகக்கட்டவிழ்த்து விடப்பட்டன.

அடித்து, நொருக்கி, கொளுத்தி, கொன்றும் அடங்காத ஆட்சியாளர்கள்இறுதியில்செய்ததுதான்இலங்கையைநிரந்தரமாகத் துண்டாடியது. கலவரத்தால்பாதிக்கப்பட்ட தமிழர்கள்அனைவரையும் இடைத் தங்கல் முகாம்களில் தங்க வைத்த பின்னர் கப்பலில் ஏற்றி வடக்கு கிழக்குக்கு அனுப்பி வைத்தது கொழும்பு அரசு. அன்றே தமிழர்களின் தாயகமும், நாடும் வடக்கு கிழக்குத்தான் என்பதைப் பிரித்துக் காட்டியது.

அதன் பின்னர் 26 வருடங்கள் தொடர்ந்த குருதிச்சகதிபடிந்த போர் முடியும் வரையும் போரைக் காரணம் காட்டியே லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டுவிட்டார்கள். இறுதிப் போரிலும் பல்லாயிரம் அப்பாவித் தமிழர்கள்கொல்லப்பட்டதுடன் ஆயுதச்சண்டைகள்ஒருமுடிவுக்கு வந்தன.

போர் ஏற்படுத்திய தாக்கங்கள், விளைவுகளின் படிப்பினை வழியாக இனியாவது பிரச்சினைக்கு ஓர் தீர்வு காணப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையும் பொய்த்துப் போயிருக்கும் ஒரு சூழலில், கறுப்பு ஜூலையின் நினைவுகள் மீண்டும் சூழ்கின்றன.

தமிழர்களின் அரசியலில் பெரும் புயலைக் கிளப்பிய ஆடிக் கலவரங்களில் கொல்லப்பட்டவர்களின் நினைவாகக்கூட இதுவரையில் எந்த நினைவிடங்களும் இல்லை. ஒருங்கிணைக்கப்பட்ட நினைவேந்தல்நிகழ்வுகளும்இல்லை. நினைவுகளின் வழி அரசியலை ஊடுகடத்தும் திறனைத் தவறவிட்டிருக்கும் ஒரு சமூகமாக மாறியிருக்கும் நாம், இனியாவது விழித்துக்கொண்டு இதுபோன்ற நினைவுகளை பெரு நிகழ்வுகளாக ஏந்துவதன் ஊடாக அரசியல் தீர்வுக்கான உந்து சக்தியை, அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும். செய்வோமா?

# உருப்படியாக எதுவுமே செய்யாத வடமாகாண சபை

## 99ஆவது அமர்வில் தவராசா கடும் காட்டம்

*வடக்கு மாகாண சபையின் 99ஆவது அமர்வு நேற்று நடைபெற்றது. இதன்போது வடமாகாண சபையின் கடந்த காலச் செயற்பாடுகள் தொடர்பிலான மீளாய்வு குறித்த உரையை வடமாகாண எதிர் கட்சித் தலைவர் எஸ்.தவராசா ஆற்றினார். குறித்த உரையின் சாரம்பம் இங்கே தரப்படுகிறது.*

வடக்கு மாகாண சபையின் இன்றைய 99ஆவது அமர்வில் கடந்த மூன்று வருடங்கள் 9 மாதங்கள் நிறைவில் வட மாகாண சபையின் செயற்பாடுகளை மீளாய்வு செய்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றிகள்.

மீளாய்வென்பது, அரசினால் தரப்படும் மூலதன செலவினத்துக்கான அற்பசொற்பநிதித்தொகையை ஏதோ செலவழித்தோம் என்று கணக்குக் காட்டுவதோ அல்லது 32 ஆயிரம் ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளைச் செலுத்தி விட்டோம் என்பதோ அல்ல. அதற்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஓர் மாகாண சபை வேண்டுமென்றில்லை. ஆளுநருக்குக் கீழ் செயற்படும் ஓர் நிர்வாகக் கட்டமைப்பு இருந்திருந்தாற்போதும்.

நான் மீளாய்வு செய்ய இருப்பது, இந்த 32 ஆயிரம் வட மாகாண சபை ஊழியர்கள் மூலம் மக்களுக்குச் சரியான சேவை கிடைக்கப் பெற்றுள்ளதா? கல்வித்துறையைச் சார்ந்தவர்களைத் திறன்பட செயற்பட வைத்து எமது கல்வியை மேம்படுத்தியிருக்கின்றோமா? அரசு தருகின்ற நிதிக்கு மேலதிகமாக எமது பிரதேசத்தின், எமது மக்களின் பொருளாதார வளத்தை,மேம்படுத்த ஏதாவது செய்திருக்கின்றோமா? போன்ற விடயங்களையே.

முதலில் வடமாகாண சபையின் நிறைவேற்றுத் துறை மற்றும் நிர்வாக செயற்பாடுகள், நிதி முகாமைத்துவம் என்பவை வினைத்திறனாக நடைபெற்றிருக்கின்றனவா? எனப் பார்ப்போம்.

### இரணைமடு - யாழ். நீர் வழங்கல் திட்டத்துக்கு மாற்றுத் திட்டம் முன்வைத்தீர்களா?

நான் முதன் முதலில் இந்தச் சபைக்கு வந்தபோது இரணைமடு - யாழ். நீர் வழங்கல் மற்றும் கழிவகற்றல் திட்டத்தை நீங்கள் தடுத்தமை தொடர்பாகவே உரையாற்றினேன். அப்போது நாங்கள் மாற்றுத்திட்டம் முன்வைப்போமென்று முதலமைச்சர் கூறியிருந்தார். நீங்கள் இது வரை மாற்றுத்திட்டமேதாவது முன்வைத்தீர்களா? அதில், யாழ். மாநகர சபையின் கழிவு நீர் அகற்றல் தொடர்பான திட்டமும் உள்ளடங்கியிருக்கின்றதா? நடைமுறைப்படுத்தப்படவிருந்த திட்டத்தையும் வேண்டாமென்று தூக்கியெறிந்திருந்தீர்கள்.

எமது மாகாண சபைக்கு ஒரு வருடத்திற்குக் கிடைக்கும் மூலதன நிதி, ஏறத்தாழ 4 ஆயிரம் மில்லியன் ரூபா முதல் 4 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா வரையே. இரணை மடுத்திட்டத்திற்குக் கிடைக்கவிருந்த நிதியோ ரூபா. 25 ஆயிரம் மில்லியன். (164 மில்லியன் அமெரிக்க டொலர்). ஐந்து வருடங்களுக்கு மாகாண சபைக்குக் கிடைக்கும் நிதியை விட இது கூடுதலானது. அதனை வேண்டாமென்று உதறித் தள்ளினீர்கள். மாற்றுத்திட்டமாவது இது வரை கொடுத்திருக்கின்றீர்களா?

திட்டம் தொடர்பாக 2014 - 2016ஆண்டுகள் காலப் பகுதிக்குள் மத்திய அமைச்சுக்கு கடிதம் அனுப்பப்பட்டதா என்ற எனது கேள்விக்கு தாம் கடிதமெதுவும் அனுப்பவில்லையென முதலமைச்சர் கூறியிருந்தார். ஆனால் உங்களது பிரத்தியேகச் செயலாளர் 2014நவம்பரில் திட்டம் குறித்த கருத்து ஆவணமொன்றை மத்திய அமைச்சுக்கு அனுப்பியிருக்கிறார். இதுதான் தங்களுடைய கருத்து ஆவணமா? அல்லது இந்த விடயம் தங்களுக்குத் தெரியாதா?

2014ஆம் ஆண்டில் பளையில் அமைக்கப்பட்ட மின்காற்றாலை தொடர்பாகவும் சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தேன். அதற்கான ஒப்பந்தத்தில் சபையின் முன்னைய செயலாளரை நீங்கள் கைபொப்பமிட வைப்பித்தது தவறான செயற்பாடு. அந்தக் காற்று மின்னாலையை அமைத்த 'ஜூல் பவர் மற்றும் பீற்றா பவர்' நிறுவனங்களிடமிருந்து முதலில் பெற்ற நிதிக் கணக்குகள் மாகாண சபையின் கணக்கிற்குள் உட்படுத்தப்படாதமை பெரிய குற்றம். வெளிப்படைத் தன்மை கையாளப்பட்டிருக்குமாயின், அவர்கள் தந்த பணத்தை விடக் கூடிய தொகையை இன்னொரு நிறுவனம் தர முன் வந்திருக்கலாம். அது குறித்து நான் கேள்வி எழுப்பியபோது, அதனைப் பகிரங்கமாகச் செய்தால், அரசு எமக்கான நிதியைக் குறைத்து விடும் என்று பொறுப்பற்ற விதத்தில் பதிலளிக்கப்பட்டது. விவசாய அமைச்சரிடம் எழுப்பிய கேள்விக்கு நியாயமான பதில் கிடைக்காததால் கணக்காய்வாளர் நாயகத்துக்கு நான் கடிதம் எழுதியிருந்தேன். இன்று முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவும் குறித்த நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட நிதியைச் செலவிட்டமை தொடர்பாக கணக்காய்வு செய்யப்பட வேண்டுமெனப் பரிந்துரைத்துள்ளதைத் தங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நிர்வாகக் குறைபாடு குறித்து நான் பேசிய வேளைகளில் ஆளுநர், மற்றும் தலைமைச் செயலாளர் ஆகியோர் எல்லாவற்றுக்கும் தடையாக இருக்கின்றனர் எனக் கூறினீர்கள். ஆனால் ஆளுநரும் தலைமைச் செயலாளரும் மாற்றப்பட்டு புதியவர்கள் நியமிக்கப்பட்டும் நீங்கள் எதைத்தான் சாதித்தீர்கள்?

முன்னைய தலைமைச் செயலாளரது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சுற்றறிக்கை விடுத்த நீங்கள், நீதிமன்றில் அதனைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாக அறிவித்தீர்கள். நீதிமன்றத்தின் முன்னிலையில் தவறை ஏற்றுக் கொண்டீர்கள்.

அது மட்டுமன்றி ஐ.நா. சபையின் பிரதிநிதிகளுடன் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நிதித் தேவைகள் மதிப்பீடு தொடர்பாக நீங்கள் முரண்பட்டுக் கொண்டதால் அந்த நிதி கிடைக்காது போயிற்று. பன்னாட்டு நிறுவனமொன்றைப் பகைத்துக் கொண்டதால் கிடைக்க விருந்த எத்தனையோ உதவித் திட்டங்கள் கிடைக்காது போயின.

ஒட்டுசுட்டானில் இந்திய அரசின் உதவியுடன் நிறுவப்படவிருந்த தொழிற் பயிற்சி நிலையம் தங்களது அமைச்சினதும் அதிகாரிகளினதும் அசமந்தப் போக்குக்காரணமாக கைவிடப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வர் தொடர்பான விசாரணை குறித்து உறுப்பினர் ஒருவரின் கேள்விக்கு அளித்த பதில் குறித்து (01.09.2015 ) பின்னர் முன்னுக்குப் பின் முரணான தகவல் தெரிவிக்கப்பட்டது. ஏன் இவ்வாறான குழப்ப நிலை எனப் புரியவில்லை.

யாழ்.மாநகர சபை சுத்திகரிப்புத் தொழிலாளர்களது வேலை நிறுத்தம் குறித்து அவர்களுடனான பேச்சுக்களின்போது, அதற்கு முன்னர் முதலமைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர் அலுவலகத்தில் நடந்த கூட்டங்கள் பலவற்றில் தாம் கலந்து கொண்டவேளை தொழிலாளர்களது பிரதிநிதிகள் அசமந்தப் போக்குடன் நடத்தப்பட்டனர் என்று தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். உங்கள் அமைச்சுக்களது அசமந்தப் போக்கை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

**தப்பான பரப்புரைகளால் பயனென்ன?**

லண்டன் மற்றும் கனடா நாடுகளின் நகராட்சிகளுடன் நட்புறவு ஒப்பந்தங்கள் செய்ததாகப் பரப்புரை செய்யப்பட்ட போதிலும், இதுவரை அவற்றால் பயனேதும் கிட்டியதா? இவையெல்லாம் மக்களை ஏமாற்றும் செயல்களாகவே கணிக்க வேண்டியுள்ளது. புலம் பெயர்ந்து வாழும் எம்மவர்கள் இவற்றின் மூலம் தங்களது அரசியல் செல்வாக்கை ஈட்டத் தங்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்கறே கருத முடிகிறது.

சுன்னாகம் நிலத்தடி நீர் தொடர்பான பிரச்சினையில் நீர் மாதிரிகள் ஆஸ்திரேலிய நிபுணர் குழுவொன்றினால் பரிசோதிக்கப்பட்டதில் ஒயிலின் அளவு அபாய நிலையிலும் குறைவாக இருப்பதாகக் கண்டறியப்பட்டதாக பிரித்தானிய உயர்ஸ்தானிகருக்கு யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்ததாக எனது கேள்வியொன்றுக்கு பதிலளித்திருந்தீர்கள். சுன்னாகம் பகுதியில் 12 கிணறுகளில் பெறப்பட்ட நீர் மாதிரிகளை வைத்து மேற்கொண்ட ஆய்வின் முடிவை வைத்து சுன்னாகம் பகுதி முழுவதிலும் கிணறுகளில் ஒயில் கசிவு குறைந்து வருவதாக நீங்கள் எவ்வாறு கூற முடியும்?

உயரதிகாரிகளைக் கூடத் தங்களால் சரியாகப் பயன்படுத்தத் தெரியவில்லை. இவையெல்லாம் தங்களின் நிர்வாகத்தின் வினைத்திறனற்ற செயற்பாடுகள் அல்லவா?

அதிகாரிகளை தரம் கண்டு பயன்படுத்தாது, நியமனங்கள் செய்திருந்தீர்கள். அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம் ஆளுநருக்கு உரியதென சாக்குப் போக்குக் கூறினாலும், உங்களது பரிந்துரை, வேண்டுகோள் என்பவற்றின் அடிப்படையிலேயே ஆளுநர் அவ்விதம் செயற்பட்டார்.

மாகாண சபையால் வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டங்களுக்கான வாடகைக் கொடுப்பனவு அரச மதிப்பீடு செய்யப்படவில்லை என்ற எனது குற்றச்சாட்டு, 2015ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் அரசினால் தரப்பட்ட நிதியைச் செலவிட்டமை தொடர்பாக சரியான நிதிக் கையாள்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதைக் கணக்காய்வு அறிக்கைகளைப் பார்த்தபோதே தெரியவந்தது. செலவழிக்காமல் வைப்புக் கணக்குகளில் வைப்பு வைத்த தொகை, செலவழிக்கப்பட்டதாகக் கணக்குக் காட்டப்பட்டுள்ளமை தவறான செயற்பாடாகும்.

**நியதிச் சட்டங்களை ஆக்கிச் செயற்படுத்த இயலாது போன விவசாய அமைச்சர்**

விவசாய அமைச்சர், பொருளாதார அபிவிருத்தி தொடர்பான முதலீடுகளுக்குத் தடையாக உள்ளார் என முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன. ஆனால் அமைச்சர் சுற்றுச் சூழல் தொடர்பாகத்தலையிடவோ, தடைசெய்யவோ அதிகாரம் இல்லாத நிலையில் அதற்கான நியதிச் சட்டங்களை ஆக்கிச் செயற்படுத்த 45 மாதங்களாக எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளாது இருந்திருக்கிறார்.

வவுனியா மாவட்டத்தில் சுயதொழிலை முன்னெடுக்கும் திட்டங்கள் தொடர்பாக முதலமைச்சரின் விசாரணைக்குழுவின் அறிக்கையில் மூங்கில் நடுகைத் திட்டத்தை நிராகரித்தமை சட்ட பூர்வமற்ற தெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணைக்குழு அமைச்சரது நடத்தை மீது சந்தேகப்படுவதிலும் நியாயமுள்ளது மாங்குளத்தில் கரும்புச் செய்கையில் முதலீடு செய்ய முன் வந்த நிறுவனம் அமைச்சருக்கு 15 வரை தருவதாகக் கூறியதாக நான் அறிகின்றேன். அது என்னவென்று எனக்கு விளங்கவில்லை.

கிளிநொச்சி பனை, தென்னை கூட்டுறவுச் சங்க ஊழல் தொடர்பாக விசாரணை நிதி மோசடி இடம்பெற்றமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தும், மோசடி செய்யப்பட்ட நிதித் தொகையை மீளப் பெற கூட்டுறவு ஆணையாளர் நடவடிக்கை மேற்கொள்ளாதது ஏன் என கூட்டுறவு அமைச்சரிடம் கேட்கின்றேன். எவருடைய தலையீட்டினால் அது நிறுத்தப்பட்டுள்ளது?

சுன்னாகம் நிலத்தடி நீர் விவகாரத்தில் அமைச்சினால் அமைக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை நோதேர்ண் பவர் நிறுவனத்தைக் காப்பாற்றுவதற்கான முயற்சியென நான் சபையில் வாதிட்டபோது அது குறித்து நிபுணர் குழுவிடம் பேச ஒழுங்கு செய்து தருகிறேன் எனக் கூறினார் விவசாய அமைச்சர். இதுவரை அதற்கான ஒழுங்கை ஏற்படுத்தித் தராததேன்?



கணக்காய்வில் விவசாயம் மற்றும் கூட்டுறவு அமைச்சுக்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டேதும் தெரிவிக்கப்படாத நிலையில் விசாரணைக்குழுவின் அறிக்கையில் குற்றங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் தெரிவித்ததாக அறிய முடிந்தது. நாம் ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும். கணக்குக்குக் காட்டப்பட்டவையே கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும். உதாரணமாக கையூட்டல் இடம்பெற்றிருந்தால் அது கணக்காய்வுக்கு ஒருபோதும் உட்படுத்தப்படமாட்டாது.

**நியமனம் இட ஒதுக்கீடு, இடமாற்ற விடயங்களில் கல்வி அமைச்சர் தலையிடுவது தவறு**

கல்வி அமைச்சரினால் அமைக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கையில் நியமனம், இடஒதுக்கீடு, இடமாற்றம் போன்ற விடயங்களில் அமைச்சர் தலையிடுவது தவறெனக் குறிப்பிடப்பட் டுள்ளது. இதனால் தான் அதிகார துஷ்பிரயோகக் குற்றச்சாட்டில் அமைச்சர் குருகுலராஜா பதவியிலிருந்து விலகிக் கொள்ள வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டது.

புதிய கல்வி அமைச்சரும் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் நியமன விடயத்தில் தமது பணிப்புரைக்கமைய ஒருவரை நியமித் துள்ளார். முன்னைய கல்வி அமைச்சர் செய்தது. பிழையென்றால் தற்போதைய அமைச்சர் சர்வேஸ்வரன் செய்தது அதை விடத் தவறான காரியம் அவரும் உடனடியாகப் பதவி விலக வேண்டும்.

கடந்த மார்ச் மாதம் நியமிக்கப்பட்ட 559 பட்டதாரிகளில் 94 பேர் யாழ்.மாவட்டத்தில் நியமனம் பெற்றுள்ளனர். வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் ஆசிரியர் பற்றாக் குறை உள்ள நிலையில் கல்வி அமைச்சின் இவ்வாறான செயற்பாடுகள் நியாயமற்றவை. கல்வி அமைச்சைப் பொறுத்தவரை கடமை நிறைவேற்று அதிபர் நியமன விடயத்திலும் உரிய நடைமுறை பின்பற்றப்படவில்லை என்பதற்கு என்னிடம் ஏராளமான ஆதாரங்கள் உள்ளன.

புனித ஜோன் பொஸ்கோ, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மற்றும் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை ஆகியவற்றில் தரம் 1 அனுமதி தொடர்பாக விசாரணைக்கு நான் பல தடவைகள் வற்புறுத்தியுள்ளேன். சுற்று நிருபங்களின் அடிப்படையிலேயே எல்லாம் நடைபெறுவதாக முன்னைய கல்வி அமைச்சர் கூறியிருந்தார். ஆனால் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் அனுமதிக்காத மாணவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட 2.4 மில்லியன் தொகை கணக்காய்வுக்குக் காட்டப்படவில்லையென கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு யார் பொறுப்புக் கூறப் போகிறீர்கள். முன்னைய கல்வி அமைச்சரும் கூட இத்தகைய அனுமதி முறைகேடுகளில் தொடர்புபட்டுள்ளதாக நான் இங்கு உறுதியாகக் கூறுகின்றேன்.

ஆசிரியர் அதிபர் மாநாட்டுக்கென இரண்டு நாள்களில் 40 மில்லியன் செலவிடப்பட்டமை குறித்து விசாரணைக்குழுவின் அறிக்கையில் மட்டுமல்லாது 2014ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கையிலும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. வீண்விரயச் செயற்பாடுகள் தொடர்பான விசாரணைக்குழுவின் அவதானிப்பை கணக்காய்வு அறிக்கையும் உறுதிப்படுத்தியுள்ளது. முன்னாள் கல்வி அமைச்சரது வாசஸ்தலத்துக்கு 2015ஆம் ஆண்டில் தனியார் பாதுகாப்புச் சேவையின் பாதுகாப்பு வழங்கப்பட்டதற்கு ஐந்து லட்சம் ரூபா வரை செலவிடப்பட்டமை சர்ச்சைக்கு உரியதொன்றாக கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

> “ காணி அமைச்சர் என்ற முறையில் முதலமைச்சர் அரச காணி தொடர்பான அதிகாரங்களை வலுப்படுத்துவதற்கு இதுவரை ஏன் நியதிச் சட்டம் ஒன்றை உருவாக்க முயற்சிக்கவில்லை. நாம் எமக்குள்ள அதிகாரங்களை பயன்படுத்தத் தெரியாமல் வேறு விடயங்களில் எமது கவனத்தை செலுத்திக் கொண்டிருக்கின்றோம்.
> சட்ட ஒழுங்கு முதலமைச்சருக்கு உரிய அதிகாரம். அதனைப் பயன்படுத்துமாறு நான் மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே முதலமைச்சரைக் கோரியிருந்தேன்.

அதேபோன்று கல்வி அமைச்சில் நடைபெற்ற நியமனங்கள் பதவி வழங்கல், இடமாற்றம் தொடர்பில் அமைச்சின் செயலாளரது கடமைகளில் அமைச்சர் வாரியம் தலையிட்டுள்ளதாக விசாரணைக்கு அறிக்கையொன்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று பல்வேறு பாடசாலைகளில் அதிபர் நியமனம் கல்வி அமைச்சரது அழுத்தம் காரணமாகவே இடம்பெற்றுள்ளதாக விசாரணைக்குழுவின் அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை தமக்கு அதிகாரம் வழங்கப்படாத பல விடயங்களில் முன்னாள் கல்வி அமைச்சர் தலையீடு செய்து அழுத்தங்கள் பிரயோகித்துள்ளமை அதிகார துஷ்பிரயோக அல்லவா? அதே போன்று கிளிநொச்சி தருமபுரத்தில் வைத்தியசாலைக்கு என்று ஒதுக்கப்பட்ட காணி விடயத்தை நீதிமன்றம் கல்வி அமைச்சர் மட்டுமன்றி சுகாதார அமைச்சரும் அதில் சம்பந்தப்பட்ட தலையீடு மேற்கொண்டமை முற்று முழுதான அதிகார துஷ்பிரயோகமே.

அதேபோன்று மீன்பிடி போக்குவரத்து அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட திட்டங்களுக்குச்செலவு செய்யப்பட்ட பல மில்லியன்கள் தொகை தொடர்பாக கணக்காய்வில் பல குறைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

**விசாரணைக் குழுவைக் குறை கூறுதல் கீழ்த்தரமான பண்பற்ற செயற்பாடு**

விசாரணைக்குழு உறுப்பினர்கள் பக்கச் சார்பானவர்கள், விசாரணை நடத்தத் தகுதியற்றவர்கள் அரசியல் பின்னணி கொண்டவர்கள் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளன. விசாரணைக்குழு உறுப்பினர்களது நியமனம் குறித்து முதலமைச்சர் சபைக்குத் தெரிவித்த வேளையிலேயே இது குறித்து ஆட்சேபனை தெரிவித்திருந்த வேண்டியிதே நியாயம். மாறாக அதனை ஏற்று விசாரணைக்குழு முன் முன்னிலையாகிச் சாட்சியமளித்த பின்னர் இத்தகைய குற்றச்சாட்டைச் சுமத்துவது கீழ்த்தரமான பண்பற்ற செயற்பாடு. விசாரணைக் குழுவின் அறிக்கையில் அமைச்சின் செயலாளரது கடமையில் அமைச்சர் வாரியம் தலையிடுவது தவறெனவும் கொள்கை ரீதியிலான முடிவுகளை எடுப்பதே அமைச்சர்களதும் அமைச்சு வாரியத்தினதும் கடமை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதற்கு முற்று முழுதாக நான் உடன்படுகிறேன். அமைச்சு வாரியத்தின் அனுமதியுடன் தான் பல இடங்களில் சில அதிகார துஷ்பிரயோகங் கள் நடைபெற்றுள்ளதாகத் தெரியவருவதால், ஏற்கனவே தமது அமைச்சுப் பதவிகளைக் கைவிட்டு விலகிய இரு அமைச்சர்கள் மட்டுமன்றி முழு அமைச்சரையுமே துஷ்பிரயோகங்களுக்கான பொறுப்பேற்க வேண்டும் என நான் கூறி வைக்க விரும்புகிறேன்.

இதுவரை குறிப்பிட்ட கடந்த கால குறைபாடுகளுக்கு மேலதிகமாக மாகாண அரசு என்னென்ன விடையங்களைச் செய்திருக்க வேண்டும் எனக் குறிப்பிட விரும்புகின்றேன். சுகாதார சேவைகள், சட்டமும், கல்விக் கட்டளைச் சட்டமும் வட மாகா ணத்தில் கடந்த வருட ஆரம்பத்தில் இருந்தே செல்லுபடியற்றதாகிவிட்டன. எனவே மத்திய அமைச்சுக்கள் வெளியிடும் சுற்றுநிரு பங்கள் வடமாகாணத்தில் தற்போது செல்லுபடியற்றவை. அதேபோன்று பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்க ளும் செல்லுபடியற்றவை. ஆனால் அவற்றையே இன்னமும் நாம் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றோம். எனவே எமக்கான சுற்றுநிருபங்களையும் சேவைப் பிரமாணக் குறிப்புக்களையும் நாம் தயாரித்தாக வேண்டும்.

அண்மையில் என்னைச் சந்தித்த ஒரு தூதரக அரசியல் பிரிவு உயர் அதிகாரி இது குறித்து எனக்குச் சுட்டிக்காட்டியிருந்தார். உங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களை நீங்கள் உங்கள் வசப்படுத்தியுள்ளீர்களா? என அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

**அரச காணி தொடர்பான அதிகாரங்களை முதலமைச்சர் வலுப்படுத்த ஏன் முயலவில்லை**

காணி அமைச்சர் என்ற முறையில் முதலமைச்சர் அரச காணி தொடர்பான அதிகாரங்களை வலுப்படுத்துவதற்கு இதுவரை ஏன் நியதிச் சட்டம் ஒன்றை உருவாக்க முயற்சிக்கவில்லை. நாம் எமக்குள்ள அதிகாரங்களை பயன்படுத்தத் தெரியாமல் வேறு விடயங்களில் எமது கவனத்தை செலுத்திக்கொண்டிருக்கின்றோம்.

சட்ட ஒழுங்கு முதலமைச்சருக்கு உரிய அதிகாரம். அதனைப் பயன்படுத்துமாறு நான் மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே முதலமைச்சரைக் கோரியிருந்தேன்.

மாகாண சபை வட மாகாண அபிவிருத்திக்கான துறைசார் ஒன்றிணைந்த அபிவிருத்தித் திட்டங்களை வகுத்திருக்க வேண்டும்.


எமது பிரதேசத்தில் முதலீட்டு வாய்ப்புக்களை இனங்கண்டு வெளி நாட்டவர்கள் மற்றும் புலம்பெயர் எம்மவர்கள் இங்கு முதலீடுகளை மேற்கொள்ள வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்க வேண்டும். அதற்குப் பதிலாக சிங்கள அரசு முட்டுக்கட்டை செய்கிறது; சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படுகிறது எனக் கூக்குரல் இடுவதால் பயன் ஏதும் இல்லை. இன்று எமது பிரதேசத்தின் இளைஞர்களது வேலை இல்லாப் பிரச்சினைக்கு தீர்வு கண்டாக வேண்டும். எமது பிரதேசத்தில் பொருளாதார அபிவிருத்திக்கான முனைப்புக்களை மேற்கொண்டாலே அது சாத்தியமாக வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்கு எல்லாமே இயற்கைதான்

சேரலாதன்

இயற்கையை வென்றிட எவராலும் முடியாது. ஏனென்றால் இந்த உலகையும் உயிர்களையும் அந்த இயற்கைதான் படைத்துப் பாதுகாக்கின்றது. மலைகள், நதிகள், அருவிகள், காடுகள் எல்லாமே இயற்கையின் அற்புதப் படைப்புக்கள். சூரியன் உதிக்காமல் உலகம் இயங்க முடியாது. உயிர்கள் வாழமுடியாது. ஆனால் எவராலும் சூரியனை நெருங்கமுடியுமா? நெருங்கினாலும் உயிர்பிழைக்க முடியுமா? சூரியன் இல்லாவிட்டாலும் வாழமுடியாது. உண்மையில் அதை நெருங்கவும் முடியாது. இதுதான் இயற்கையின் அற்புதம். மனிதர்களால் புரிந்துகொள்ள முடியாத அதிசயம். ஓயாமல் எரிந்து கொண்டிருக்கும் சூரியன் என்றோ ஒருநாள் ஓய்வெடுக்கப் போகின்றது. அன்று இந்த உலகமும் நிரந்தரமாக ஓய்வெடுத்துவிடும். வானம் அழுதால் பூமி சிரிக்கும் எனக் கூறுவார்கள். மழைபெய்யாது விட்டால் உலகமே வறண்டுபோய்விடும். நதிகள், குளங்கள், அருவிகள், கிணறுகள் எல்லாமே வெறுமையாகிவிடும். மரம்,செடி, கொடிகள், புல்,பூண்டு எதனையும் பார்க்க முடியாது. எல்லாமே எரிந்து சாம்பலாகிவிடும். பசுமையான பொருள்கள் எதையும் காணமுடியாது. மனிதர்கள் உட்பட உயிரினங்கள் சகலதும் அழிந்தொழிந்து இந்த உலகமே வெறுமையாகிவிடும்.



### நல்ல காற்று வேண்டும்

மனிதர்கள் உயிர்வாழ்வதற்கு நல்ல காற்று எப்போதும் வேண்டும். மரங்கள் மாப்பொருளைத்தயாரிப்பதற்கும் காற்று நிச்சயமாக வேண்டும். கடல்வாழ் உயிரினங்கள் விலங்குகள் பறவைகள் யாவுமே நல்ல காற்றின் உதவியுடன் தான் உயிர்வாழ்கின்றன. காற்றின் இயக்கம் நின்றுவிட்டால் உலகின் அனைத்து இயக்கங்களும் தானாகவே ஓய்ந்துவிடும்.

மேலே குறிப்பிட்ட மூன்றும் இயற்கையால் உருவாக்கப்பட்டவை. பாதுகாக்கப்படுகின்றவை. இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்தால் ஒரு தீங்கும் நேர்ந்துவிடாது. அதனோடு பகைகொண்டால் ஒன்றுமே மிஞ்சாது.

இந்த உலகத்தின் ஆயுட்காலம் எண்ணப்பட்டு வருவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதனால் வேற்றுக்கிரகங்களில் மனிதர்களைக் குடியேற்றுவதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. தற்போது செவ்வாய்க்கிரகத்தின் மீது அனைவரதும் பார்வை பதிந்துள்ளது. ஆனால் வேற்றுக் கிரகங்களில் மனிதர்களைக் குடியேற்றுவது எந்த அளவுக்குச் சாத்தியமாகும் என்பது தெரியவில்லை. இந்த உலகமே சொர்க்கமாகத்தான் இருந்தது. இதை நரகமாக மாற்றியதே மனிதர்கள்தான். மனிதர்களின் சுயநலத்தால் இந்த உலகமே தனது மாண்புகளை இழந்து காணப்படுகின்றது.

உலகின் ஒருபகுதி மழைக்காக ஏங்கி நிற்கின்றது. வறட்சி அங்கு தாண்டவம் ஆடுவதால் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய முடியவில்லை. இதனால் உணவுப் பஞ்சம் தலைவிரித்து ஆடுகின்றது. உணவு கிடைக்காததால் மக்கள் எலும்பும் தோலுமாகக் காட்சியளிக்கின்றனர். குழந்தைகளும், சிறுவர்களும் போசாக்கின்மையால் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். குடிதண்ணீர் கிடைக்காமை பெரும் பிரச்சினையாக உருவாகிவிட்டது. நெடுந்தீவில் குடிதண்ணீர் கிடைக்காததால் இறந்த குதிரைகளின் உடல்களைப் பார்க்கும் போது மனம் வெதும்புகிறது. கண்கள் கண்ணீரைப் பணிக்கின்றன. ஆபிரிக்க நாடுகள் சிலவற்றிலும் கூட மனிதர்கள் இவ்வாறான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

> ஓயாமல் எரிந்து கொண்டிருக்கும் சூரியன் என்றோ ஒரு நாள் ஓய்வெடுக்கப் போகின்றது. அன்று இந்த உலகமும் நிரந்தரமாக ஓய்வெடுத்துவிடும். வானம் அழுதால் பூமி சிரிக்கும் எனக் கூறுவார்கள். மழை பெய்யாது விட்டால் உலகமே வறண்டுபோய்விடும். நதிகள், குளங்கள், அருவிகள், கிணறுகள் எல்லாமே வெறுமையாகிவிடும். மரம்,செடி, கொடிகள், புல்,பூண்டு எதனையும் பார்க்க முடியாது. எல்லாமே எரிந்து சாம்பலாகிவிடும். பசுமையான பொருள்கள் எதையும் காணமுடியாது. மனிதர்கள் உட்பட உயிரினங்கள் சகலதும் அழிந்தொழிந்து இந்த உலகமே வெறுமையாகிவிடும்.

இதேவேளை உலகின் மறுபகுதியில் பெருமழைபெய்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுப் பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன. பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். அவர்களது இடங்கள் வெள்ளத்தினால் சூழப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இயற்கை தனது சமநிலையை இழந்து நிற்பதை இது துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றது. இதற்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்தால் அதன் பின்னணியில் மனிதர்கள் உள்ளமை தெளிவாகத் தெரிகிறது. காடுகளையும் பிற இடங்களிலுள்ள மரங்களையும் வகைதொகையின்றி அழிப்பதும் பல்வேறு புறக்காரணிகளால் உலகை வெப்பமடையச் செய்வதும் மனிதர்களின் வாடிக்கையாகிவிட்டது. இதன் காரணமாகவே இயற்கைச் சமநிலை குலைவுறுகிறது. சமநிலை இழக்கப்படும் போது காலநிலையிலும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

### பிளாஸ்ரிக் உணவுகள்

அண்மைக்காலமாக வெளிவந்து கொண்டிருக்கின்ற செய்திகள் மக்களைக் குழப்பத்திலும் கலக்கத்திலும் ஆழ்த்தி வருகின்றன. பிளாஸ்ரிக்கிலான அரிசி, முட்டை ஆகியன பயன்பாட்டுக்கு வந்துள்ளதான செய்திகளே அவை. பிளாஸ்ரிக்கினால் முழு உலகத்துக்குமே ஆபத்து எனக்கூறப்படும் நிலையில் மனிதர்களின் உணவுகளைப் பிளாஸ்ரிக்கில் உருவாக்கி அவற்றைப் பாவனைக்கு விடுவது எத்தகைய ஆபத்தான செயல் என்பதை மனிதர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இவர்கள் அதை உணரும் போது எல்லாமே கைநழுவிப் போய்விடும்.

எமைப் பத்து மாதங்கள் கருவில் சுமந்து பெற்று வளர்ப்பவள் தாய்தான். தாய்க்கு நிகராக நாம் எவரையும் கூறிவிடமுடியாது. அதுபோலவே இயற்கையும் எமது தாய்தான். நாம் பிறந்து வளர்ந்து நடமாடுவதற்கும் வாழ்வதற்கும் இந்த உலகைப் படைப்பாக்கம் செய்தவனே இயற்கை அன்னைதான். இத்தகைய அன்னையைப் போற்றிப் பாதுகாப்பது என்பது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். பொறுமையின் சின்னமான இயற்கை அன்னை பொங்கி எழும்போது இந்த உலகமே நடுங்கி நிற்கின்றது. சுனாமி, பூகம்பம், சூறாவளி, வெள்ளப்பெருக்கு, எரிமலைவெடிப்பு, கடுமையான வறட்சி என அனைத்துமே இயற்கையின் கோரத்தாண்டவங்கள். இவற்றுக்கு ஈடுகொடுப்பதற்கு மனிதர்களால் முடியாது. ஆனால் இயற்கையைச் சபிப்பதற்கு மட்டுமே இவர்களால் முடிகின்றது. இந்தச் செயல் நிலைகள் எமக்குப் பயனேதும் தந்துவிடப் போவதில்லை. உணர்ந்து கொள்ள வேண்டும்.

### இயற்கையை நேசித்தல்

எங்களுடைய மூதாதையர்கள் இயற்கையை நேசித்தார்கள் அதனுடன் ஒன்றி வாழ்ந்தார்கள். இயற்கையாகக் கிடைக்கின்ற உணவுகளையே அவர்கள் உண்டதால் நீண்ட காலம் ஆரோக்கியத்துடன் வாழ்ந்தனர். ஆனால் இன்றைய நிலையென்ன? வாய்க்குச் சுவை தருகின்ற அத்தனை உணவுகளையும் தேடித் தேடி உண்கின்றோம். சுவையைத் தருவதற்குச் சுவையூட்டிகளின் உதவியும் நாடப்படுகின்றது.

எந்தவிதமான கட்டுப்பாடுமின்றி பசியாற உண்கின்றோம். பின்னர் அதன் விளைவுகளையும் அனுபவிக்கின்றோம். சிறு வயதிலேயே தொற்றாநோய்கள் எம்முடன் ஒட்டிவிடுகின்றன. இதனால் மருத்துவமனைகளை நாடித் தஞ்சம் அடைகின்றோம்.

இயற்கை எவரையுமே வஞ்சிப்பதில்லை. அனைவரையும் ஒத்த விதமாகவே பார்க்கின்றது. ஆனால் மனிதர்களோ இயற்கையைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றனர். இந்த உலகம் எமக்கானது எம்மை வாழ வைப்பது என்ற எண்ணம் எம்முள் எழும்போது இயற்கையை நேசிக்கின்ற மனப்பாங்கு தானாகவே எம்முள் தோன்றிவிடும். இதுவே ஓர் ஆரம்பப்புள்ளியாக உருவாகிக் காலப்போக்கில் பெரிதாக வளர்ந்து செல்கின்றது. இதுவே இயற்கையை நேசிப்பதற்கும் அதைப் போற்றுவதற்கும் வழிகாட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுங்க இசைவிற்கான 'லங்கா பே' கொடுப்பனவுக் கட்டமைப்பு அறிமுகம்

## இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பின் கீழாக நடைமுறைக்கு



சுங்க இசைவிற்கான இணையத்தளம் ஊடான கொடுப்பனவுகளை செலுத்தக்கூடிய புதிய கொடுப்பனவுத்தளம் ஒன்று இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பின் கீழாக அறிமுகப்படுத்தப்பட்டது.

மத்திய வங்கியின் பூரண கண்காணிப்பின் கீழ் 'லங்கா கிளியர்' நிறுவனம் ஊடாக செயற்படுத்தப்படும் 'லங்கா பே' (Lanka Pay) கொடுப்பனவுத் தளத்தை நிதி இராஜாங்க அமைச்சர் இரான் விக்ரமரத்ன அரம்பித்து வைத்தார்.

இதன்பிரகாரம் இலங்கை சுங்கத்தின் அனைத்துக் கொடுப்பனவுகளையும் அனுமதிப்பத்திரம் பெற்ற அனைத்து வணிக வங்கிகளின் ஊடாக இணையவழி மூலம் மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கொடுப்பனவுக் கட்டமைப்புக் குறித்து கருத்துரைத்துள்ள மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி,

"மத்திய வங்கியின் கண்காணிப்பு மற்றும் வழிநடத்தலின் கீழ் இது இடம்பெறுகிறது. கொடுக்கல் வாங்கல் மற்றும் கொடுத்துத் தீர்த்தல் சட்டம் உள்ளிட்ட அனைத்துச் சட்டங்களினாலும் இது நிர்வகிக்கப்படுகிறது. இவை இலங்கையின் பொருளாதார உறுதித் தன்மைக்குத் தேவைப்படுகின்றன. மத்திய வங்கி இந்தத் தளத்தின் செயற்பாடுகளை உறுதிப்படுத்த வேண்டும்." - என்றார்.

இந்த நிகழ்வில் மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி மற்றும் சுங்கப் பணிப்பாளர் நாயகம் சூலாந்தன பெரேரா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஒ)

> அரசின் வரி அறவீட்டுச் செயற்பாடுகள் இத்தளமூடாக சிறந்த முறையில் இடம்பெறுகிறது. இவை அரசின் இலத்திரனியல் பொருளாதாரம் தொடர்பில் எடுக்கப்பட்ட மற்றொரு நடவடிக்கையாகும்.





# எல்.பி.பினான்ஸ் பி.எல்.சி இன் 155 ஆவது நிலையம் திறந்து வைப்பு

எல்.பி.பினான்ஸ் பி.எல்.சி தனது 119ஆவது கிளையின் 155ஆவது நிலையத்தினை கடந்த வியாழக்கிழமை மன்னாரில் ஆரம்பித்து வைத்தது.

எல்.பி.பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நிரோசன் உடகே கிளை நிலையத்தினை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார். அத்துடன் நிலையான வைப்பு, சேமிப்புக் கணக்கு, தங்கக்கடன் சேவைகள் மற்றும் லீசிங் போன்ற வாடிக்கையாளர் கொடுக்கல் வாங்கல் செயன்முறைகளும் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த ஆரம்ப நிகழ்வில் எல்.பி.பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மார்ச் பெரேரா, எல்.பி.பினான்ஸ் பி.எல்.சி. நிறுவன யாழ்ப்பாணம், புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, வவுனியா கிளை ஊழியர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# முதலீடு மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் குறித்து ஆராய இலங்கை வருகிறார் சவுதி இளவரசர் அஸீஸ் அல் சவூத்



இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளவும், அது சார்ந்து வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் ஆராயவும் சவுதி அரேபியாவின் முன்னணி முதலீட்டாளரும், இளவரசருமான முக்ரீன் பின் அப்துல் அஸீஸ் அல் சவூத் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்ற தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நான்கு நாள் உத்தியோகப்பூர்வ பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகைத் தரவுள்ள இளவரசர் அல் சவூத் அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன மற்றும் அயலுறவுத் துறை அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட முக்கிய அமைச்சர்கள்பலரையும்சந்தித்துபேச்சு வார்த்தை நடத்தவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஏற்பாடுகளை புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல் லாஹ் மேற்கொண்டுள்ளதுடன் இளவரசர் கிழக்கு மாகாணத்துக்கான பயணத்தையும் மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# நடப்பு வருடத்தில் 25 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வருவர்

## சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க கருத்து

2017 ஆம் ஆண்டில் 25 லட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வரவுள்ளனர் என்ற தகவலை சுற்றுலாத் துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க வெளிப்படுத்தியுள்ளார்.

பன்னாட்டுச் செய்திச் சேவை ஒன்றுக்கு சுற்றுலாத்துறை முன்னேற்றம் தொடர்பிலும், சுற்றுலா வரும் வெளிநாட்டவர்கள் குறித்தும் கருத்துரைக்கையிலேயே இவ்வருடம் நாட்டினுள் வருகை தருவார்கள் என அரசு எதிர்பார்த்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறித்தான மேற்படி தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் இதுகுறித்து கருத்துரைத்துள்ள அமைச்சர், "சுற்றுலாப் பயணிகளின் உள்வருகையில் உள்ள பிரச்சினைகள் குறித்து அதிகாரிகள் மட்டத்தில் கவனம் செலுத்தப்படுகின்றது.

இவ்வாண்டிலும் இயன்றளவு செயற்திறனோடு நடவடிக்கைகளை மேற்கொண்டு எதிர்ப்பார்த்த இலக்கை அடைவதுடன் அந்நியச் செலாவணியை பெற்றுக்கொள்ளவும் திட்டமிட்டப்பட்டுள்ளது.

அதேநேரம் இலங்கையின் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக உலகின் பல்வேறு நகரங்களில் விளம்பரப்படுத்தல் திட்டங்களை முன்னெடுக்க தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்றார். (ஒ)

> கடந்த ஆண்டில் 20 லட்சம் சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றச் சூழமைவுகளும் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தாக்கம் செலுத்தும் பிரதான காரணியாக அமையவுள்ளது.



அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
19 . 02 . 1982



மறைவு
24 . 01 . 2017

கடந்த 24.01.2017 செவ்வாய்க்கிழமை அன்று அகாலமரணமடைந்த எமது அன்புச்செல்வம்

அமரர்

மார்க்கண்டேயபிள்ளை இராகுலன்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (23.07.2017) ஞாயிற்றுக் கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 24.07.2017 திங்கட்கிழமை சாளம்பை, புலோலி மேற்கில் உள்ள அவரது இல்லத்திலும் நடைபெற உள்ளன. அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்கு பற்றி எமக்கு ஆறுதல் கூறிய அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றி தெரிவிப்பதோடு 24.07.2017 திங்கட்கிழமை அன்று நடைபெறும் மதியபோசன நிகழ்வில் பங்குபற்றி எமது நன்றிகளை ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

சாளம்பை,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

21/7/2017 | www.cse.lk

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -14.96 | 6,669.51 | 6,684.47 |
| S&P SL20 | -18.03 | 3,819.23 | 3,837.26 |
| வியாபாரப்புரள்வு | | 516,771,136 | 1,005,656,060 |
| உள்நாடு:- கொள்வனவு | | 235,183,424 | 313,992,928 |
| விற்பனை | | 241,224,608 | 660,246,660 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 281,587,712 | 691,663,100 |
| விற்பனை | | 275,546,528 | 345,409,344 |

பங்குச்சந்தைத் தகவல்கள்



| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 172.50 | 795,340 | 138,149,468 |
| சிலோன் கோல்ட்ஸ்ரோஸ் | CCS.N | 852.00 | 80,768 | 68,814,336 |
| சேவ்ரோன் லூப்பிரிக்கன் | LLUB.N | 149.00 | 349,525 | 52,260,620 |
| அக்சஸ் எஞ்யினியரிங் | AEL.N | 25.70 | 1,322,044 | 34,622,549 |
| சுவிஸ்டென் சிலோன் | PARQ.N | 77.50 | 283,625 | 21,983,622 |
| சென்றல் இன்வெஸ்ட் & பைனான்ஸ் | CIFL.N | 1.20 | 13,050,579 | 17,438,885 |
| செலான் வங்கி | SEYB.N | 95.00 | 176,006 | 16,720,101 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.R | 3.00 | 4,466,086 | 13,495,072 |
| அடம் இன்வெஸ்மென் | AINV.N | 0.70 | 21,244,769 | 12,748,808 |
| டன்கொட்டுவ போசலன் | DPL.N | 9.50 | 1,034,140 | 9,824,611 |

- பங்குலாபம் -

சேவ்ரோன் லூப்பிரிக்கன் ரூபா 2.00

சந்தைக் குறிகாட்டிகள்.

| | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| [illegible] | [illegible] |
| விலை உழைப்பு | 11.5 |
| [illegible] | [illegible] |
| பங்குலாப [illegible] | 2.6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர்கேடுகளின் வடிவங்களாக சிறைச்சாலைகள்

சிறைச்சாலைகள் குற்றவாளிகளைச் சீர்திருத்துகின்ற இடங்களாக மாறு மேயானால் குற்றங்கள் வெகுவாகக் குறைந்து விடும், குற்றவாளிகளின் எண்ணிக்கையும் கட்டுப்படுத்தப் பட்டுவிடும்.

ஆனால் சிறைச்சாலைகள் அமைக்கப்பட்டதன் நோக்கம் இன்று திசை மாறிச் செல்வதைக் காணமுடிகின்றது. வசதி வாய்ப்புள்ளவர்கள் சிறைச்சாலைகளில் சொகுசு வாழ்க்கை வாழ்வதுடன் சிறையில் இருந்தவாறே வெளியில் குற்றச் செயல்களைத் தூண்டி வருகின்றனர். இவர்களுக்குத் தேவையான சகல வசதிகளும் சிறைக்குள்ளேயே கிடைப்பதால் தாம் சிறைக் கைதிகள் என்ற நினைப்பே இவர்களுக்கு வருவதில்லை.

இதற்கு இலங்கையிலுள்ள சிறைகளும் விதிவிலக்கானவை அல்ல. சிறைகளுக்குப் பொறுப்பானவர்களின் ஒத்துழைப்புடன் சிறைக் கைதிகள் தமது எண்ணம் போன்று சிறைக்குள் வாழ்கின்றனர்.

தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்தவர் மறைந்த ஜெயலலிதா என்பது தெரிந்த விடயம். அவரது நெருங்கிய தோழிதான் திருமதி சசிகலா நடராசன். இவர் வழக்கொன்றில் குற்றவாளியாகக் காணப்பட்டு பெங்களூரில் உள்ள அக்ரகார சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார். ஆனால் பணம் அங்கும் புகுந்து விளையாடியுள்ளது. சசிகலா தங்கியிருக்கும் சிறைக்குப் பொறுப்பானவர் பெரும் தொகையான பணத்தைப் பெற்றுக் கொண்டு அவருக்குத் தேவையான சகல சொகுசு வசதிகளையும் சிறைக்குள் செய்து கொடுத்துள்ளார் என்று குற்றம் சாட்டப்படுகிறது. தற்போது இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. சிறைச்சாலைகளின் சீத்துவக் கேட்டை இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.




கறுப்பு ஜூலை என்றாலே தமிழர்கள் இப்போதும் பயந்து நடுங்குவார்கள். அந்த அளவுக்கு 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் கொடுமைகளை அனுபவித்தவர்கள் அவர்கள். அதிலும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சக கைதிகளால் குரூரமான முறையில் கொலை செய்யப்பட்டதைத் தமிழர்கள் என்றுமே மறக்க மாட்டார்கள். சிறை அதிகாரிகளின் முழு ஆதரவுடன் இடம்பெற்ற இந்தக் கொலைகளுக்கு அரசே பொறுப்புக் கூறியிருக்க வேண்டும். ஆனால் எதுவுமே இடம்பெறவில்லை பின்னரும் இதுபோன்ற சம்பவங்கள் தொடரவே செய்தன.

சிறைச்சாலைகள் என்றாலே மக்கள் முகம் சுழிக்கின்ற நிலைதான் இன்று காணப்படுகின்றது. இதற்கு அரசுதான் முக்கிய காரணம் என்பதைச் சொல்லத் தேவையில்லை. சிறைச்சாலைகளை நல்ல முறையில் நிர்வகிக்கத் தெரியாத அரசு வேறு எதைத்தான் ஒழுங்காகச் செய்யப்போகின்றது?

## வரலாற்றில் இன்றைய தினம் 22.07.2017



1943-இத்தாலிய நகரான பலார்மோ கூட்டுப் படைகளால் கைப்பற்றப்பட்டது.

1894-முதலாவது மோட்டார் சைக்கிள் ஓட்டப்போட்டி, பிரான்சின் பரிஸ் மற்றும் றூயன் நகர்களிடையே இடம்பெற்றது.

1942-போர்க்காலத் தேவையை அடுத்து குடிமக்களுக்கான மண்ணெண்ணெய் விநியோகம் கட்டாய பங்கீட்டு முறைமூலம் இடம்பெறத் தொடங்கியது.

1943-இத்தாலிய நகரான பலார்மோ கூட்டுப் படைகளால் கைப்பற்றப்பட்டது.

1944-போலந்தில் கம்யூனிஸ்ட் ஆட்சி தொடங்கும் முகமாகப் போலந்து தேசிய விடுதலைக் குழுவால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

1976-இரண்டாம் உலகப் போரின் போது பிலிப்பைன்ஸ்'க்கு ஜப்பானால் ஏற்பட்ட சேதத்துக்கான இழப்பீடு செலுத்தப்பட்டது.

1977-சீனத் தலைவர் டெங்சியா ஓபிங் மீண்டும் அதிகாரத்துக்கு வந்தார்.

1983-போலந்தில் மார்சல் சட்டம் உத்தியோக பூர்வமாக மீளப் பெறப்பட்டது.

1986-பொலனறுவைப் பகுதியில் இருந்து சிங்களவர் பீதியால் வெளியேற்றம்.

1992-கொலம்பியாவின் இரண்டாவது பெரிய நகரான மெடலினுக்கு அருகாமையிலிருந்து கொலம்பியாவின் போதைக்கடத்தல் மன்னன் பாப்லோ எஸ் கோபா, தான் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்படலாம் என்கின்ற அச்சத்தால் தப்பிச் சென்றான்.

1995-புலிகள் பலவீனப்பட்டால் தமிழருக்குத் தீர்வு இல்லையென மு.சிவசிதம்பரம் தகவல்.

2002-நாரந்தனைச் சம்பவ வழக்கில் மதனராஜன் மன்றில் முன்னிலையானார்.

2013-சீனாவின் டிங்சியில் ஏற்பட்ட தொடர் நிலநடுக்கத்தில் 89 பேர் உயிரிழந்தனர். 500 பேர் வரை காயமடைந்தனர்.

2016-நான் இனவாதியல்லன் நல்லிணக்க வாதியே என்கிறார் வடக்கு ஆளுனர் கூரே.

2016-யாழ்ப்பாணத்தில் தற்போதும் தமிழீழ நீதித்துறையே உள்ளது என உதய கம்மன்பில தெரிவிப்பு.

2016-யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலை அதிபர்களுடன் நீதிபதி இளஞ்செழியன் சந்திப்பு.

2016-ரவிராஜ் கொலை வழக்கில் 6 பேர் மீது குற்றப்பத்திரம்.

2016-கூட்டுப் படைத்தாக்குதலால் சிரியாவில் 77 பொது மக்கள் உயிரிழப்பு.

## ஆடி மாத பலன்

2017

உத்திரம் 2, 3, 4 பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2, பாதங்கள்

### கன்னி

வாக்கு நாணயம் தவறாமல் உண்மைக்காகப் பாடுபடும் குணமும் உடைய கன்னி ராசியினரே; இந்த மாதம் ராசிநாதன் புதன் நட்பு வீட்டில் சஞ்சாரம் செய்கிறார். முடங்கிக் கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பெறுவதோடு மட்டுமல்லாமல் மனதில் புதுத் திட்டங்களும் உருவாகும். புதிய தொடர்புகளால் நன்மை உண்டாகும். வீண் பகை, மன சஞ்சலம், தேவையற்ற செலவு ஆகியன அகலும். மனச் சஞ்சலம் தீரும். பகைகள் தொல்லை தராமல் இருக்கும்.

வியாபாரம், தொழில் மூலம் உண்டாகும் செலவுகள் குறையும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். ஆனால் அவர்களிடம் திறமையாகப் பேசித் தக்க வைத்துக் கொள்வது நல்லது. வியாபாரம் தொழில் போன்றவற்றை விரிவாக்கம் செய்ய புதிய திட்டங்களைப் பற்றி ஆலோசனை செய்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். புதிய தொழிலில் முதலீடு செய்யும் போது கவனம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களுடன் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குழந்தைகளின் முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டுவது நல்லது. நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள் கூறும் கருத்துகளுக்கு எதிராகப் பேசுவதை விட்டுவிட்டு நிதானமாக உங்கள் கருத்தை சொல்வது நன்மை தரும். பெண்களுக்கு கடன் பிரச்சினை கள் குறையும். புதிய எண்ணங்கள் உண்டாகும். புது நபர்களின் நட்பும் கிடைக்கலாம். கலைத்துறையினருக்கு இருந்த பிரச்சினைகள் நீங்கும். காரிய அனுகூலம் உண்டாகும். மனதில் ஏதாவது கவலை இருந்து வரும். இஷ்ட தெய்வத்தை வழிபடக் கவலை குறையும். ஆன்மிக நாட்டத்தை அதிகரித்துக் கொள்வதன் மூலம் மன நிம்மதி ஏற்படும். அரசியல் துறையினருக்கு உழைப்புக்கான அங்கீகாரம் கிடைக்கும். மனதுக்குச் சந்தோஷமான காரியங்கள் நடக்கும். இலாபம் அதிகரிக்கும். பணியாள்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். புகழ் கிடைக்கும். பங்கு, ரர்கள் மூலம் சில தொந்தரவுகள் நேரிடலாம்.

**மாணவர்கள்:** வீண் விவாதங்களைத் தவிர்த்து கூடுதல் நேரம் ஒதுக்கி பாடங்களைப் படிப்பது முன்னேற்றத்துக்கு உதவும்.

**பரிகாரம்:** விஷ்ணு சகஸ்ர நாமம் பாராயணம் செய்து வர எதிர்ப்புக்கள் அகலும். செல்வம் சேரும். மன நிம்மதி உண்டாகும்.

**உத்திரம் 2, 3, 4 பாதங்கள்:**
இந்த மாதம் திறமையான செயல்கள் மூலம் எடுத்த காரியம் சாதகமாக நடந்து முடியும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றத்திற்கு இருந்த முட்டுக் கட்டைகள் விலகும். சக மாணவர்களின் ஒத்துழைப்பு இருக்கும்.

**அஸ்தம்:**
இந்த மாதம் திட்டமிட்டுச் செயலாற்றுவீர்கள். வெளியூர்ப் பயணங்கள் செல்ல நேரலாம். வரவேண்டிய நிலுவையில் உள்ள பணம் வந்து சேரும். தந்தை மூலம் நன்மை உண்டாகும். எந்தஒரு காரியத்திலும் தெளிவான முடிவினை எடுப்பீர்கள். மனதில் இருந்த வீண்கவலைகள் நீங்கும்.

**சித்திரை 1, 2, பாதங்கள்:**
இந்த மாதம் அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் இருந்த முட்டுக்கட்டைகள் நீங்கும். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்கள் மூலம் நன்மை உண்டாகும். வியாபாரத்துக்குத் தேவையான நிதி உதவியும் கிடைக்கலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எளிதாக பணிகளை செய்யும் படியிருக்கும்.

### நாளை


**23.07.2017**
ஞாயிற்றுக்கிழமை

**ஆடி - 07**

திதி: அமாவாசை பி.ப.04.39 வரை
நட்சத்திரம்: புனர்பூசம் மு.ப. 11.26 வரை
சுபநேரம்: 09.02–10.32 வரை
ராகுகாலம்: 04.32–06.02 வரை

ஆடி அமாவாசை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2025 இல் விற்பனைக்கு

பொய் சொல்ற வாய்க்கு
போசனம் கிடைக்காதாம்



ஆனா வீட்ல சாப்பாடு
நல்லாருக்கெண்டு பொய்
சொன்னாத்தான் நமக்கு
அடுத்தவேளை போசனமே
கிடைக்குது...

கண்ணெல்லாம் கன்னா பின்னான்னு
கலங்குது; யாரும்மா நீ




ஆய்வில் தகவல்:
எப்ப பொண்ணுங்க கரண்டி பிடிக்கிற
கையில போனைப் பிடிச்சாங்களோ




அப்பவே சோத்தில உப்பும் இல்ல
குழம்பில சுவையும் இல்ல

நண்பர்: என் மனைவிக்கு என்
மேலே அன்புன்னா அன்பு
கொள்ளை அன்பு!
மற்றவர்: எப்படி?
நண்பர்: என்னதான் என்ன
சமைக்கச் சொன்னாலும், அவ தன்
கையாலதான் பரிமாறுவேன்னு
அடம் பிடிப்பா.

# 720 மணிநேர திரைப்படம்

உலகின் மிகவும் நீளமான திரைப்படத்தை தயாரித்து வருகிறார் சுவீடனைச் சேர்ந்த இயக்குனர் ஆண்டர்ஸ் வெபெர்க்.
47 வயதான இவர் உலகின் மிக நீளமான திரைப்படத்தை எடுத்து வருகிறார். இது ஒரு பரிசோதனை முயற்சிக்கான திரைப்படம். அம்பெய்ன்ஸ் என்று பெயரிடப்பட்டுள்ள இந்தத் திரைப்படம் 720 மணி நேரம் ஓடக்கூடியது! தொடர்ந்து 30 நாள்கள் ஒளிபரப்பினால்தான் முழுமையாகத் திரைப்படத்தைப் பார்த்து முடிக்க முடியும்! இருபதாண்டுகளாகத் திரைப்படத் துறையில் இயங்கி வரும் ஆண்டர்ஸ், 2020ஆம் ஆண்டில் இந்தத் திரைப்படத்தை வெளியிட்டு, தன்னுடைய திரை வாழ்க்கையை முடித்துக்கொள்ள இருக்கிறார்.
உலகம் முழுவதும் ஒரே நேரத்தில் திரைப்படத்தை வெளியிட்டு, ஒரே ஒரு காட்சி மட்டுமே காட்டப் போகிறார். பிறகு இந்தத் திரைப்படத்தின் நகல்களை அழித்துவிடுவார். ஏனென்றால் இந்தத் திரைப்படத்தை இன்னொரு முறை யாரும் பார்க்கக்கூடாது என்கிறார். 30 நாள்களும் இருக்கையில் உட்கார வைப்பதற்கு, இது தன்னுடைய ஆகச் சிறந்த படைப்பு என்று ஆண்டர்ஸ் பொய் கூறவில்லை. 'நான் உலகின் மிக நீளமான திரைப்படத்தை எடுக்க வேண்டும் என்று மட்டுமே திட்டமிட்டேன். இது வணிக ரீதியில் வெற்றி பெற்று சம்பாதித்துக் கொடுக்குமா என்றெல்லாம் நினைக்கவில்லை' என அவர் மேரும் தெரிவித்தார்.



## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 5 | | 4 | | | 3 | |
| | | | | | 2 | 5 | 1 | 4 |
| | | 3 | 5 | | | | 8 | |
| | | | | | 5 | 8 | | 9 |
| | 5 | | | | | | 4 | |
| 9 | | 8 | 1 | | | | | |
| | | | | | 7 | 6 | | |
| 1 | 3 | 2 | 8 | | | | | |
| | 6 | | | 2 | | | | 8 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 3 | 4 | 2 | 6 | 1 | 7 | 8 |
| 2 | 4 | 1 | 3 | 8 | 7 | 6 | 9 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 1 | 5 | 4 | 2 | 3 |
| 1 | 3 | 7 | 6 | 4 | 8 | 9 | 5 | 2 |
| 4 | 2 | 6 | 5 | 3 | 9 | 8 | 1 | 7 |
| 8 | 5 | 9 | 1 | 7 | 2 | 3 | 4 | 6 |
| 3 | 8 | 5 | 7 | 9 | 4 | 2 | 6 | 1 |
| 7 | 1 | 4 | 2 | 6 | 3 | 5 | 8 | 9 |
| 9 | 6 | 2 | 8 | 5 | 1 | 7 | 3 | 4 |

நேற்றைய சுடோக்கின் விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**மேடம்:** உறவினரின் செயலை குறை சொல்ல வேண்டாம். தொழில் வியாபாரத்தில் மந்த நிலை உருவாகும். இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடலாம்.

**இடபம்:** சாமர்த்தியமாக செயற்பட்டு பிறரின் பாராட்டைப் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். இல்லறத்துணையின் அன்பில் மகிழ்வீர்கள்.

**மிதுனம்:** மனதில் புத்துணர்ச்சி மேலோங்கும். பலரும் அன்பு பாராட்டுகிற சூழ்நிலை உருவாகும். தொழில் வியாபார வளர்ச்சியால் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும்.

**கடகம்:** எவரிடமும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில் வியாபாரத்தில் பணவரவு சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு நிர்வாகத்தினருடன் கருத்துவேறுபாடு ஏற்படலாம். பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர்.

**சிங்கம்:** குடும்பத்தினரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் உருவாகிற இடையூறை சரி செய்வீர்கள். அளவான பணவரவு கிடைக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.



**கன்னி:** நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். உறவினர், நண்பர்களால் உதவி உண்டு. தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சுதந்திர உணர்வுடன் பணியாற்றுவர்.

**துலாம்:** லட்சிய மனதுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.



**விருச்சிகம்:** நண்பரின் செயலில் குறை சொல்ல வேண்டாம். உடல்நலனில் அக்கறை தேவை. தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**தனுசு:** பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவ முன் வருவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். இலாபம் படிப்படியாக உயரும். கடனாக கொடுத்த பணம் கிடைக்கும்.

**மகரம்:** எதிர்பார்த்த செயல் எளிதாக நிறைவேறும். எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**கும்பம்:** திட்டமிட்டுச் செயற்பட்டு வருவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் இலாபம் உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பிள்ளைகளின் வழியில் திடீர் செலவு ஏற்படலாம்.

**மீனம்:** செயல்களில் நிதானம் நிறைந்திருக்கும். தொழில் வியாபார நடைமுறையில் இருந்த குறுக்கீடு விலகும். இலாபம் மிதமாக இருக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவரையும் ஏளனம் செய்யாதே!

ஒரு கோழிக்குஞ்சு இருந்தது. அதற்கு எல்லோரையும் கேலி செய்வதுதான் பொழுது போக்கு. அது தன் வயதுக்கு மீறி எல்லா உயிரினங்களையும் கேலி செய்யும். ஒரு குருவியையும் கேலி செய்யும்; ஒரு யானையையும் கேலி செய்யும். அதன் கேலிப் பேச்சுக்களில் இருந்து இது வரை எந்த உயிரினமும் தப்பியது கிடையாது. கோழிக்குஞ்சின் இந்தக் குணம் தாய்க் கோழிக்குப் பிடிப்பதில்லை. "இப்படி எல்லோரையும் ஏளனமாகக் கருதி கேலி பேசாதே! அது பிறர் மனதைப் புண்படுத்தி விடும். இப்படி நீ மற்றவர்கள் மனதைப் புண்படுத்தினால், நீயும் ஒரு நாள் துன்பப் படத்தான் போகிறாய் பார்த்துக் கொண்டே இரு" என்றது தாய்க்கோழி. குஞ்சோ "ஏனம்மா எனக்கு சாபமிடுகிறாய்?" என்றது கோழி. "இது சாபமல்ல நீ திருந்து வதற்காக உன்னை எச்சரிக்கிறேன்" என்றது தாய்க் கோழி. ஆனால் தாயின் அறிவுரைகளை யெல்லாம் ஒரு காதில் வாங்கி மறுகாதால் விட்டுவிடும் கோழிக்குஞ்சு.

ஒரு நாள் கோழிக்குஞ்சு வயிறு நிறையத் தின்று விட்டு. எந்த உயிரினமாவது கண்ணில் படுகிறதா? என தேடித்திரிந்தது. அப்போது 'கொறு'க் 'கொறு'க்கென்று ஒரு கரட்



கிழங்கைகக் கடித்துத் தின்று கொண்டிருந்த ஒரு முயலைக் கண்டது. அந்த முயலுக்கு அண்மையில் சென்ற கோழிக்குஞ்சு ஒரு கேலிப் பேச்சை அவிழ்க்க வாயைத் திறந்த போது மேலே பறந்து கொண்டிருந்த ஒரு வல்லூறு 'விர்' 'விர்' என தாழப் பறந்து வந்து முயலை லபக்கெனத் தன் கால்களால் தூக்கிச் சென்றது. வினாடி நேரத்தில் எல்லாம் நடந்து விட்டது. முயலோ சாவு பயத்தால் கால்களை உதறியபடி கதறியது. வல்லூறிடமிருந்து விடுபடப் போராடியது. முயலின் துடி துடிப்பைக் கண்டு எள்ளி நகையாடிய கோழிக்குஞ்சு. "என்ன முயல் பயலே! என்னமோ நீ வேகத்தில் புலி கிலி என்று பெருமையடித்துக் கொள்வாயே! இப்போது எங்கே போயிற்று. உன் வேகம்? அந்த வல்லூறின் வேகத்துக்கு உன்னால் ஈடு கொடுக்க முடியுமா? இப்போது தெரிகிறது. நீ ஒரு பொய்யன் புளுகன் என்று. இவ்வாறு கூறி ஹா.... ஹா என்று கேலி யாகச் சிரித்தது.

கோழிக் குஞ்சின் பேச்சு முயலின் காதில் விழ அதனைக் சுட்டெரிக்கும் கண்களால் பார்த்த முயல் "ஏய் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சாதே! நான் இங்கு சாகக்கிடக்கிறேன். உனக்கு கொண்டாட்டமாக இருக்கிறதா? இரு நீயும் ஒரு நாள் இது போன்ற துன்பத்தை அனுபவிக்கத்தான் போகிறாய். அப்பொழுது தெரியும் உனக்கு அடுத்தவர் மனம் எப்படிப் புண்படுமென்று" முயல் கூறி முடிக்க கிக்... கிக்...கிக்... என்று சிரித்தது திமிர்ப்பிடித்த கோழிக்குஞ்சு.

இப்போது வானத்தில் பசியுடன் வட்டமிட்ட பருந்து ஒன்றின் கண்ணில் பட்டது அந்தக் கோழிக்குஞ்சு, அவ்வளவுதான், அடுத்தவினாடி ரொக்கெட் வேகத்தில் கோழிக்குஞ்சை நோக்கிப் பறந்தது பருந்து

இப்போது பருத்தின் கால்களுக்கிடையில் அவலக் குரல் எழுப்பியது குஞ்சு. "ஐயோ! இதென்ன ஒரு பருந்து என்னைத் தூக்கிச் செல்கிறதே! நான் செத்தேன். முயலின் வாக்கு இவ்வளவு விரைவில் பலிக்குமென நான் அறியவில்லையே" என்று அலறியபடி பருந்தின் பிடியிலிருந்து விடுபடப் போராடியது.


ஆனால் உயரமான ஒரு மலை உச்சியில் இறங்கிய பருந்து தன் கால்களுக்குள் அகப்பட்டிருந்த குஞ்சை இறுக மிதித்து ஓங்கி தன் கூரிய அலகினால் ஒரு கொத்து கொத்தியது. "எத்தனை பேர் மனதைக் காயப்படுத்தியிருப்பேன். என் தாய் சொன்ன அறிவுரைகளையும் அலட்சியம் செய்தேன். எனக்கு இந்த தண்டனை தேவைதான்" எனக் கூறி, அலறிக் கொண்டு உயிரை விட்டது கோழிக்குஞ்சு.


**நாம் பிறருக்குத் துன்பம் காலையில் செய்தால் எமக்குத் துன்பம் மாலைக்குள் கிடைக்கும்.**


**நல்லதையே செய்வோம்.**


**நன்றாக வாழ்வோம்.**

## கீழ்வரும் உருக்களில் இனங்காணக்கூடிய சதுரங்களின் எண்ணிக்கை யாது?


1) 
1) 4
2) 5
3) 6


2) 
1) 15
2) 10
3) 14


3) 
1) 30
2) 17
3) 22

4) 
1) 50
2) 55
3) 26

## கீழ் வரும் உருக்களில் இனங்காணக் கூடிய முக்கோணங்களின் எண்ணிக்கை யாது?

1) 
1) 3
2) 2
3) 4

2) 
1) 5
2) 4
3) 6

3) 
1) 5
2) 10
3) 8

4) 
1) 15
2) 6
3) 12

# சிறுவர்கள் எதிர்கால தலைவர்கள்



- பதினெட்டு வயது வரையுள்ள ஆண் பெண் இருசாராரையும் சிறுவர் எனக் கூறுவார்கள்.
- சிறுவர்கள் வயதில் இளையவர்கள் மட்டுமல்ல உடல் ரீதியாக மென்மையானவர்களும் கூட.
- இத்தகைய சிறுவர்களைச் சிலர் பெரியவர்கள் போல் பாவித்து துன்புறுத்துகிறார்கள்.
- சிறுவர்களைக் கொண்டு கடும் வேலைகளைச் செய்விக்கிறார்கள்.
- சிறுவர்களை உடல் ரீதியிலும் உள ரீதியிலும் துன்புறுத்தினார்கள்.
- சிறுவர்கள் படும் துயரம் போக்க நல்ல மனமுடையவர்கள் முன்வந்தார்கள்.
- ஐக்கிய நாடுகள் சபை சிறுவர் உரிமைகளைத் தயாரித்தது.
- கல்வி கற்பது சிறுவர்களின் உரிமையானது.
- சிறுவர்களின் தேவைகளுக்கு மதிப்பளிக்கப்பட்டது.
- இவற்றை வலியுறுத்தும் வகையில் ஒக்டோபர் முதலாம் நாள் சிறுவர் தினம் கொண்டாடப்படுகிறது.
- உலக நாடுகள் சிறுவர் தினத்தை விமரிசையாகக் கொண்டாடுகின்றன.
- சிறுவர்களின் உரிமைகளை உலகிற்கு எடுத்துக் காட்டவே சிறுவர் தினம் கொண்டாடப்படுகிறது.
- சிறுவர்களின் பாதுகாப்பு அரசின் பொறுப்பாகும்.
- சிறுவர் தினம் கொண்டாடப்பட்டால் மட்டும் போதாது.
- சிறுவர்களின் நலனிலும் கரிசனை காட்ட வேண்டும்.
- நாட்டின் எதிர்காலத் தலைவர்கள் சிறுவர்கள்தான் என்பதை சிறுவர் தினம் பறைசாற்றுகிறது.



# கடைப்பிடிக்க வேண்டியவை

பசி இல்லாமல் புசியாதே!
பழைய உணவு உண்ணாதே!
நடு நிசியில் வயிற்றை நிரப்பாதே!
நீரைச் சுருக்கி அருந்தாதே!

கீரை வகையைத் தள்ளாதே!
கொழுப்பை அதிகம் விரும்பாதே!
காரம் ஏற உண்ணாதே!
பகலில் தூக்கம் கொள்ளாதே!

பொய் ஒரு போதும் பேசாதே!
பெரியோரை மதிக்க மறக்காதே!
செய்த தவறை மறைக்காதே!
சிறிய உயிரையும் வதைக்காதே!

அடிதடி சண்டைகள் செய்யாதே!
எவரையும் என்றும் வையாதே!
கூடா நட்பைக் கொள்ளாதே!
கோபத்திற்கு இடம் கொடுக்காதே!

வீதியில் விற்பதை உண்ணாதே!
விளையாட்டிற்காகவும் திருடாதே!
நீதிக்கு மாறாய்ப் பேசாதே!
நேர்மையை விட்டு விலகாதே!



# புள்ளிகளை இணைத்து உருவத்தை முழுமை செய்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய...

தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் நேற்றுமுன்தினம் கூடினர்.

கொழும்பு, விஜயராம மாவத்தையில் அமைந்துள்ள மகிந்தவின் இல்லத்தில் நடைபெற்ற மேற்படி சந்திப்பில், அரசமைப்பு மீளமைப்புப் பணி, உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் திருத்தச் சட்டவரைவு, வெளிநாட்டுப் பிரமுகர்களின் இலங்கைப் பயணம் உள்ளிட்ட விவகாரங்கள் சம்பந்தமாக விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

இதன்போதே புதிய அரசமைப்பொன்று இயற்றப்படும் முயற்சியைத் தோற்கடிக்கவேண்டுமென முடிவெடுக்கப்பட்டது என்றும், இதற்காக உள்ளே இருந்து ஒரு குழுவும், வெளியேறி மற்றுமொரு குழுவும் அழுத்தங்களைப் பிரயோகிக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

"அரசமைப்பு நிர்ணயச் சபையில் என்ன நடக்கின்றது என்பதை அறிவதற்கும், தகவல்களைப் பெறுவதற்கும் ஒரு குழு அங்கு இருக்க வேண்டும். அப்போதுதான் இழுத்தடிப்புகளைச் செய்யலாம். வெளியேயுள்ள குழு அழுத்தங்களைப் பிரயோகிக்கமுடியும்.

எது எப்படியோ புதிய அரசமைப்பு உருவாவதைத் தோற்கடிப்பதே எமது குறிக்கோள். இதற்காக இரண்டு வழிகளில் நடவடிக்கை முன்னெடுக்கப்படும்" என்று இந்தச் சந்திப்பின் பின்னர் உதய கம்மன்பில ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டார்.

"ஒரு குழு உள்ளேயும், மற்றைய குழு வெளியேயும் இருந்து செயற்படும். எது எப்படியோ அரசிலிருந்து 17 உறுப்பினர்கள் பொது எதிரணியுடன் இணைவார்கள். 3 உறுப்பினர்கள் என்னுடன் பேச்சு நடத்தியுள்ளனர். ஏனைய தகவல்களை தற்போது வெளியிட முடியாது" என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். (த)

## பேருந்து..

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த இ.போ.ச பேருந்து மீது கிளிநொச்சிப் பகுதியில் வைத்து நேற்றிரவு கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது. சம்பவத்தில் சாரதி காயமடைந்தார். பயணிகளுக்குப் பாதிப்பில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி ஏ9 சாலையில் பேருந்து பயணித்துக் கொண்டிருந்த போது ரிப்பர் வாகனத்துக்குப் பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களே இவ்வாறு கற்களை வீசிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத் தனர்.

(வ-21,34)

### கடை வாடகைக்கு

கார்கில்ஸ் Square எதிரில் கடை வாடகைக்கு உண்டு. (மகாத்மா காந்தி வீதி)

தொடர்பு.077 772 2448

### விற்பனைக்கு

40 நாள்கள் ஆகிய பூச்சி நீக்கி தடுப்பூசி போடப்பட்ட ஜேமன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு.077 946 2841

### வேலையாள்கள் தேவை

சாவகச்சேரியில்இயங்கும்சிற்றூண்டிச்சாலைக்குவிற்பனையாளர்(பெண்) தேவை.

0772719116, 0779415570

### வெல்டர் தேவை

எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு திறமை வாய்ந்த வெல்டர் (welder) தேவை. தொடர்புகளுக்கு

077 3614638, 076 3165730

### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் கடமையாற்றும்
ஆசிரியர்
**திருமதி விஜித்தா அன்ரன் செல்வநாயகம்**
அவர்களின் அன்புத் தந்தையார்

**சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை**

அவர்கள் 21.07.2017 அன்று இறைவனடி சேர்ந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்.**
**யா/சென். மேரிஸ் வித்தியாலயம், யாழ்ப்பாணம்**

### நல்லூர் பிரதேச சபை கேள்வி அறிவித்தல் திருத்தம்

2017 யூலை 21ஆம் திகதிய 10 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்ட கேள்விகள் கீழ் குறிப்பிட்டவாறு திருத்தியமைக்கப்படுகின்றது. அட்டவணை ஐ இல் 11ஆம் 12 ஆம் வேலைகளுக்கான வேண்டப்படும் தரம் ஊ 8 என மாற்றியமைக்கப்படுகின்றது.

**மேலும் பந்தி 8 பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றது.**

08 . அட்டவனைண ஐ இன் முதல் 07 வேலைகள் மற்றும் 11 ஆம் 12 ஆம் வேலைகளுக்குமான கேள்வியானது செல்லுபடியாகும் காலம் கேள்விசமர்பிக்கும் இறுதியிலிருந்து 63 நாள்கள் ஆகும்.

**தலைவர்**
**பொறுகைக்குழு**
**நல்லூர் பிரதேசபை, கொக்குவில்.** 2017.07.22

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
27 . 03 . 1944



இறப்பு
22 . 07 . 2016

**இராஜரட்ணம் இராஜேந்திரா**

அன்புக்கோர் இலக்கணமாய்
பண்புக்கோர் உதாரணமாய்
பாசத்துக்கோர் ஒளிச்சுடராய்
நற்குணங்களின் சிகரமாய்
எங்கள் குடும்பத் தலைவனாய் வாழ்ந்தீர்களே!
உங்கள் நினைவோ எம்மை விட்டு
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் அகலாது

**என்றும் நீங்கா நினைவுடன்**
**மருமக்கள், பெறாமக்கள்.**


# P.P.T Express

## மற்றுமோர் விரிவாக்கசேவை பகல் சேவை




**எதிர்வரும் திங்கள் 24.07.2017 தொடக்கம் தனது பகல் சேவையை விஸ்தரிக்கின்றது.**
**இதன் ஊடாக காலை 07.00 மணிக்கு கொழும்பு நோக்கி தனது சேவையை தொடர்கின்றது.**
**அதே போன்று கொழும்பு வெள்ளவத்தையிலிருந்து காலை 06.00 மணிக்கு புறப்பட்டு கொட்டாஞ்சேனை ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி பயணிகள் சேவையை விஸ்தரித்துள்ளது.**
**அதன் வழமையான இரவு சேவைகள் வழமைபோல் நடைபெறுகின்றது.**
**மேலும் இலங்கையின் முதற்தர துரித பொதிகள் சேவை ஊடாக வெளிநாட்டு (அனைத்து நாடுகளுக்கும்) பொதிகள் உடனுக்கு உடன் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் துரித பொதிகள் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.**




**இலங்கையில் சுற்றுலா பயணத்திற்கு உரிய பஸ் சேவைகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.**




**யாழ்ப்பாணம் - 077 573 1318**
**பருத்தித்துறை - 077 573 6003**
**கொழும்பு - 077 575 5175/011 232 0336**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டி.ஐ.ஜி...

செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க பொலிஸ் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார்.

வித்தியா கொலை வழக்கின் முதன்மைச் சந்தேகநபரான சுவிஸ்குமார் தப்பிச் செல்வதற்கு உடந்தையாகவும் உதவியாகவும் இருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்க, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவரை பொலிஸ் சேவையில் இருந்து இடைநிறுத்துவதற்கு பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு உத்தரவிட்டது.

இதனையடுத்தே, பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்க சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார். (த)

## மகிந்த...

யைச் சேர்ந்த 11 பேர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெறுவதற்குத் தயாராக இருக்கின்றனர். அது தொடர்பில் இரகசியப் பேச்சு நடைபெற்று வருகின்றது. இவ்வாறு சுதந்திரக் கட்சியின் இளைஞர் அணித் தலைவரும் முன்னாள் அமைச்சருமான சாந்த பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அரசுடன் ஒப்பிடுகையில் இந்த அரசு எவ்வளவு தூரம் ஜனநாயகமிக்கதாகவும் வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும் உள்ளது என்பதை மக்கள் அறிவர். இரண்டு முதன்மைக் கட்சிகளும் ஒன்றிணைந்து பெரும் அபிவிருத்தி இலக்கை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் அரசின் பயணத்துக்குத் தடை ஏற்படுத்தும் சில செயற்பாடுகள் இடம்பெறத் தொடங்கியுள்ளன.

எமது கட்சியில் உள்ள அமைச்சர்கள் சிலர் திடீரென அரசை விட்டு விலகுவதற்கு முடிவெடுத்துள்ளனர். அடிப்படையற்ற பல குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி அரசை விட்டு விலகுவதற்கு இவர்கள் திட்டமிடுகின்றனர். இவ்வாறு விலகினால் அதனால் யாருக்கு நன்மை ஏற்படும் என்று இவர்கள் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாம் ஒற்றுமையாக இருந்தால்தான் அடுத்த தேர்தலில் சுதந்திரக் கட்சியால் தனித்து ஆட்சி அமைக்க முடியும். இவர்கள் திடீரென காலை வாருவதன் மூலம் நன்மையடையப் போவது ஐக்கிய தேசியக் கட்சிதான். சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் அரசில் இருந்து விலகி மகிந்த அணியில் இணைந்தால் மகிந்த அணியைச் சேர்ந்த 11 பேர் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெறுவதற்குத் தயாராக இருக்கின்றனர். அது தொடர்பில் இரகசியப் பேச்சு நடை பெற்று வருகின்றது. ஆகவே, நாம் அனைவரும் கட்சியின் நலனை அப்படையாகக் கொண்டே செயற்பட வேண்டும் என்றார். (த)

## வானிலிருந்து...

பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடந்துள்ளது.

நேற்றுக் காலை 7.30 மணிமுதல் 7.50 மணி வரை வழமைபோன்று காலைப் பிரார்த்தனை நடைபெற்றது. அப்போது மாணவிகள் மீது செம்மஞ்சள் நிறத் திரவம் வானத்தில் இருந்து கொட்டியது. அந்தத் திரவம் பட்ட இடங்களில் அடையாளம் ஏற்பட்டதுடன், எரிவும் ஏற்பட்டது.

திரவம் பட்ட மாணவிகளில் ஒருவர் ஒவ்வாமையால் வாந்தி எடுத்தார். அவருக்கு தலைசுற்றும் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த மாணவிஉட்பட திரவம் பட்ட மாணவிகள் உடனடியா யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சிகிச்சைகள் வழங்கப்பட்டு, பெற்றோர்களுடன் வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

"பாடசாலை ஒன்று கூடலின் போது, மஞ்சள் நிறத் திரவம் மாணவர்களின் மீது விழுந்தது. மஞ்சள் திரவம் விழுந்தவுடன் மாணவி ஒருவர் மயக்கமுற்று விழுந்துள்ளார். அந்த மாணவி உடனடியாக யாழ்ப்பாணம்போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஏனைய மாணவிகளும், ஆசிரியர் ஒருவரும் பாதிப்புக்குள்ளாகினர். அவர்களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்" என்று பாடசாலை அதிபர் ரேணுகா சண்முகரட்ணம் தெரிவித்தார்.

பொலிஸாரும், சுகாதாரப் பரிசோதகர்களும் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

கடந்த 19ஆம் திகதியும் இவ்வாறான திரவம் கொட்டியது என்றும், அதில் மாணவிகள் சிலர் பாதிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

"ஒருவகை மஞ்சள் நிற திரவம் பாடசாலை வளாகத்துக்குள் பரவியதையடுத்து சிறு மயக்கமும் எரிவும் ஏற்பட்டதாக தெரிவித்து மாணவிகள் சிகிச்சைக்காக வைத்தியசாலையை நாடினர். அதனால் மாணவிகள் அனைவரும் நோயாளர் விடுதிக்கு மாற்றப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதமையால் மாணவிகள் அனைவரும் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்" என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். (வ-ற-10-106-101)

## ஐ.நா. அரசியல்...

இதன்போது இலங்கையில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க முயற்சிகள், புதிய அரசமைப்பு உருவாக்கம் என்பன பற்றி அரச தலைவர் ஐ.நா. அரசியல் செயலருக்கு எடுத்துரைத்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் இந்த சந்திப்பு இடம்பெற்றதாக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான அலுவலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு மேற்கொள்ளவேண்டிய செயற்பாடுகள், மனித உரிமை விடயங்களில் காட்டவேண்டிய முன்னேற்றங்கள் குறித்து இந்தச் சந்திப்பின்போது ஐ.நா. அரசியல் செயலர் சுட்டிக்காட்டியதாகச் செய்திகள் தெரிவித்தன. (த)

## வீதியில்...

விபத்தில் ஆறு பிள்ளைகளின் தந்தை உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"புத்தூர், யாழ்ப்பாணம் பருத்தித்துறை சாலையில் நேற்றுக் காலை 9 மணியளவில் தேநீர்க் கடைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய வயோதிபரை அந்தப் பகுதியால் பயணித்த வான் மோதித்தள்ளியது. அவர் சாலையைக் கடக்க முற்பட்டபோதே விபத்து இடம்பெற்றுள்ளது.

சாலையில் தூக்கி எறியப்பட்ட வயோதிபர் சம் பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

ஆவரங்கால் கிழக்கு பொக்கணையைச் சேர்ந்த சிவனேஸ் கிட்டினன் (வயது-73) என்ற 6பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

வயோதிபரின் சடலம் உடனடியாக அச்சுவேலி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

விபத்துச் சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-8)

## மோ.சைக்கிள்...

உயிரிழந்துள்ளார். மன்னார் நானாட்டன் பிரதேச செயலாளர் பிரிவுக்குபட்ட நறுவிலிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த றெக்ஸ் கமில்டன் (வயது- 27) என்பவரே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின என்று தெரிவிக்கப்பட்டது. மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படு காயங்களுக்கு உள்ளான நிலையில் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டனர். அவர்களில் கமில்டன் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். மற்றையவர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது. விபத்துதொடர்பாகமேலதிகவிசாரணைகளை மன்னார் பொது மருத்துவமனைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-56)

## சைட்டம்...

மருத்துவ பீட மாணவர் பெற்றோர் சங்கம் ஐக்கிய நாடுகள் சபையில் முறைப்பாடு செய்துள்ளது.

அது தொடர்பான முறைப்பாட்டு மனு கொழும்பில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தில் நேற்று கையளிக்கப்பட்டது.

பேரணியாக ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தை வந்தடைந்து மனு கையளிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

"கடந்த ஜனவரி மாதம் முதல் அனைத்து பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து சைட்டம்மருத்துவக்கல்லூரிக்குஎதிராகபோராடி வருகின்றோம், அரசு எமது பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்கவில்லை. நாளை முதல் (இன்று) போராட்ட வடிவத்தை மாற்றவுள்ளோம். கடந்த மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்ட மாணவர்கள் விடுவிக்கப்பட வில்லை. எங்களுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரையில், போராட்டத்தைத் தொடரவுள்ளோம்" என்று கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒருவர் கருத்து தெரிவித்தார். (ற-10)

கோடிபதி ஷனிதா
சீட்டிழுப்பு வாரம்: 165
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 21.07.2017
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 94,991,256/-
L 27 41 61 73
08 20 42 72
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

சீட்டிழுப்பு வாரம்: 584 வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 21.07.2017
வெற்றி இலக்கங்கள்
04 22 62 63 X
02 13 16 64
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 30,965,491/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

திகதி 21.07.2017 வெற்றி வாரம் 2161 வர்ணம் சிவப்பு
விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 08 36 46 55
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 000, 000/=
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
01 22 24 42
2017.07.23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊதா நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## மரண அறிவித்தல்கள்

### பரமு ஆறுமுகம் கணபதிப்பிள்ளை
(மலேசியா)

காரைநகர் நீலப்பத்தனையைப் பிறப்பிடமாகவும், மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கணபதிப்பிள்ளை நேற்று (21.07.2017) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னக்குட்டி தம்பதியரின் அன்புமகனும் சுப்பிரமணியம் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் இரட்ணபுவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நித்தியானந்தராசா மற்றும் ஜெயராஜ், உசா ஆகியோரின் அன்புத்தந்தையும் வனஜா, விஜயராணி, குலராசா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கந்தையா, பொன்னம்பலம் (சேலையூர்), இராசம்மா, பாறுவதி, கனகசபாபதி ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2017) சனிக்கிழமை மலேசியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**நீலிப்பத்தனை, காரைநகர்.**
**கனகசபாபதி பரமேஸ்வரி (மைத்துனி)**

### சிவக்கொழுந்து பரமானந்தம்
(சாமியார்)



இல.177, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து பரமானந்தம் 19.07.2017 புதன்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணலீலாவின் அன்புக்கணவரும் நந்தினி (நந்தா) யின் அருமைத்தந்தையும் திருமதி ந.லீலாவதியின் அருமைச் சகோதரரும் ஜெகசிற்பியனின் அருமை மாமனாரும் சரண்யா, துணால் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.07.2017 திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**இல.177, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு.**
**திருமதி நந்தினி ஜெகசிற்பியன் (நந்தா - மகள்)**

## மரண அறிவித்தல்

### றிச்சட் கிறிஸ்ரி (லிற்றன்)



யுவானியார் கோயில் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட றிச்சட் கிறிஸ்ரி (லிற்றன்) நேற்று (21.07.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றிட்சட் - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்புமருமகனும் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் விஜிதா (பிரான்ஸ்), றாஜன் (பிரான்ஸ்), ஜசோதா (இத்தாலி) காலஞ்சென்ற கஜேந்தா ஆகியோரின் அன்புத்தந்தையும் சிறி, யோகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அருந்ததி, அஜய், கபிலன், வரதன், டிலான், பானுசா, பாலேஸ் ஆகியோரின் அன்புப்பேரனும் சந்திராவதி, பத்மாவதி, சிறிமாவதி, திலகேந்திரன், விமலேந்திரன், தனேந்திரன், இன்பவதி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.**
**குடும்பத்தினர்**
**077 188 2041**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலோரக்...

ரக் காவற்படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதனால் காவற்படையினர் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியதால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

வடமராட்சி நாகர்கோவில் குடத்தனை வீதியில் நேற்றுமாலை இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

சம்பவத்தில் கடலோரக் காவற்படையினர் இருவர் படுகாயமடைந்தனர். அவர்களில் ஒருவரின் நிலை கடுமை எனத் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் இடம்பெற்ற பகுதி மற்றும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்கு நேற்றிரவு சிறப்புப் பாதுகாப்பு வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு அருகே கடலோரக் காவற்படையினர் நால்வர் துவிச்சக்கர வண்டியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டடிருந்தனர். அவர்கள் மணல் கடத்தலில் ஈடுபட்ட வாகனத்தை மறித்து சோதனையிட முற்பட்டுள்ளனர். எனினும் அதில் பயணித்தவர்கள் காவற்படையினர் மீது கற்களை எறிந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். மேலும் காவற்படையினர் இருவர் மீது அவர்கள் துவளுந் தடிகளால் (சவள்களால்) தாக்குதல் நடத்தியுள்ளனர்.

சம்பவத்தையடுத்து காவற்படையினர் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியதால் மணல் கடத்திலில் ஈடுபட்டோர் வாகனத்துடன் தப்பித்துள்ளனர். இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்றிரவு கடலோரக் காவற்படையினர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர்.

அதனையடுத்து வடமராட்சிக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எஸ்.பி.மாரசிங்க, பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த ஆகியோர் தலைமையில் பொலிஸ் குழுவினர் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை, சம்பவத்தில் மணல் கடத்தலில் ஈடுபட்டோரால் கடலோரக் காவற்படையினரின் துப்பாக்கி ஒன்று பறிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் அதனை கடற்படையினர் மறுத்தனர்.

(வ-101,21,26)

## அரசமைப்பை...

விச் செயலாளர் நாயகம் ஜெப்ரி பெல்ட்மனிடம் இடித்துரைத்துள்ளனர்.

கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் நேற்றுச் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

**ஆர்வம் குறைந்து விட்டது**

சந்திப்பின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன், தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினை தொடர்பில் அரசின் அக்கறையீனம், அதில் காட்டப்பட்டு வரும் மெத்தனம் தொடர்பில் எடுத்துக் கூறியுள்ளார்.

இதன் பின்னர் அரசமைப்பு விடயத்தைப் பற்றி பேசியுள்ளார். "புதிய அரசமைப்பு உருவாக்கும் பணிகள் 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. அவை இன்னமும் தொடர்ந்து கொண்டு செல்கின்றன. அரசுக்கு இந்த விடயத்தில் ஆரம்பத்தில் இருந்த அக்கறை - ஆர்வம் தற்போது குறைந்துவிட்டது. அவர்கள் இந்த பணிகளிலிருந்து பின்வாங்கப் பார்கின்றார்கள். ஆனால் நாம் சரியாகத்தான் செயற்படுகின்றோம்.

இந்த ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு இரண்டு ஆண்டு கால நீடிப்பு வழங்கும் பிரேரணை கொண்டு வரப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் எமது கட்சிக்குள்ளேயே, கால நீடிப்பு வழங்கப்படக்கூடாது என்ற குரல்கள் எழுந்தன. அதனையும் மீறி நாங்கள், நம்பிக்கையின் அடிப்படையில் கால நீடிப்புக்கு இணங்கினோம். ஐ.நா. தீர்மானத்தை அரசு மந்தகதியிலேயே நடைமுறைப்படுத்துகின்றது. எதிர்பார்த்தளவுக்கு விடயங்கள் நடைபெறவில்லை" என்று இரா. சம்பந்தன் சுட்டிக்காட்டி னார்.

**மக்கள் கோபமாக இருக்கிறார்கள்**

சந்திப்பில் கலந்துகொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், "புதிய அரசமைப்பு தேவையில்லை. தேர்தல் திருத்தம் மாத்திரமே போதுமானது என்ற போக்கில் அரசு செயற்படுகின்றது. தமிழ் மக்கள் இதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அவர்கள் விரக்தி நிலைக்குச் சென்றுகொண்டிருக்கின்றார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன், "மக்கள் எங்கள் மீது கோபமாக இருக்கின்றார்கள். அரசு பல விடயங்களைச் செய்யவில்லை. மக்களின் கோபம் நியாயமானது. நாங்கள் உங்களை (ஐ.நா.) நம்பித்தான் இருக்கின்றோம் என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், "இலங்கை அரசுக்கு 2 வருடக் கால அவகாசம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வழங்கப்படுவதை எதிர்த்தவர்களில் நானும் ஒருவன். கால அவகாசம் வழங்கினால், இலங்கை இழுத்தடித்து ஒன்றையும் செய்யாது. காலப் போக்கில் அரசும் மறந்து போகும். நீங்களும் மறந்து விடுவீர்கள். நாங்கள் நடுத் தெருவில் நிற்கவேண்டி ஏற்படும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

**மீண்டும் ஆயுதப் போராட்டம்**

நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், தமிழ் மக்கள் இந்த அரசு மீது விரக்தியடைந்து விட்டார்கள். அதிலும் இளைஞர்கள் அதி உச்ச விரக்திக்குச் சென்றுவிட்டார்கள். மீண்டும் ஆயுதப் போராட்டம் வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றது" என்று தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சந்திப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மக்களின் காணிகளை அரசு மீளக்கொடுக்காமல் இருப்பதற்கான எந்தவித நியாயமான காரணங்களும் இல்லை எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், காணிகள் மக்களிடம் மீளக்கையளிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

காணாமற்போனோர் தொடர்பில் கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன், பல்வேறு ஆணைக்குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சமர்ப்பணங்களின் அடைப்படையில் 20 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காணாமற்போயுள்ளதாகத் தெரிவித்த அதேவேளை, இவர்களில் அநேகமானோர் ஆயுதக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள் அல்லர் என்பதனையும் தெளிவுபடுத்தினார். அன்பிற்குரியவர்களுக்கு என்ன நடந்ததென்பதை அறியாத நிலையில் மக்கள் பெரிய மனஅழுத்தத்தில் காணப்படுகின்றமையையும், இந்த நிலமை தொடரமுடியாது என்பதனையும் வலியுறுத்தினார்.

**தளம்பும் வாக்குறுதி**

பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த கூட்டமைப்பின் தலைவர், இந்தச் சட்டம் நீக்கப்படும் என்ற உத்தரவாதத்தைப் பன்னாட்டுச் சமூகத்துக்கு இலங்கை அரசு வழங்கியிருந்தது. இதனை நீக்குவது தொடர்பில் மிகச் சிறியளவு முன்னேற்றமே காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் தற்போது தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது. காலவரையறையின்றி இந்த விடயங்களில் நாம் காத்திருக்க முடியாது எனவும், தாம் அர்ப்பணிப்புடன் இந்த விடயத்தில் செயலாற்றுகின்றோம். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாட்டைப் பிளவுபடுத்தும் தீர்வைக் கோரவில்லை. மாறாக அனைத்து அரசியல் கட்சிகளினதும் மக்களினதும் ஒத்துழைப்போடும் ஒப்புதலோடுமான ஒரு தீர்வையே வலியுறுத்துகின்றது. மேலும் சில்லறைத்தனமான அரசியல் விளையாட்டுக்களைச் செய்து எமது மக்களை மீண்டும் பாதிக்கப்பட்ட சமூகமாக மாற்றுவதற்கு இவர்களுக்கு இடமளிக்கமுடியாது" என இரா.சம்பந்தன் தெரிவித்தார். (த-5)

## கூட்டமைப்புக்குள்...

பயணிக்கவேண்டும். இவ்வாறு ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் ஜெப்ரிபெல்ட்மன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஐ.நா.வின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விடயங்களைச் சுட்டிக்காட்டிய பின்னர் அவர் தெரிவித்ததாவது:

நீங்கள் குறிப்பிட்ட விடயங்களை நாங்கள் அறிந்து வைத்திருக்கின்றோம். நாங்கள் நிச்சயமாக அரசுக்கு அழுத்தம் கொடுப்போம். ஐ.நா. பொதுச் செயலரிடம் உங்களின் ஆதங்கங்களை எடுத்துரைப்பேன். ஐ.நா. உங்கள் விடயத்தில் அக்கறையாக இருக்கின்றது.

வடக்கு மாகாண சபையில் நடந்த விடயங்கள் எங்களுக்குத் தெரியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை மிக முக்கியம். நீங்கள் தொடர்ந்தும் ஒற்றுமையாக வேலை செய்யவேண்டும்.

இலங்கை நிலவரம் தொடர்பில் ஐ.நா. அவதானத்துடன் உள்ளது. புதிய அரசமைப்பு உள்ளடக்கமும் உருவாக்கும் நடைமுறைகளும் நீண்டகால அரசியல் தீர்வுக்கு மாத்திரமன்றி நாட்டின் அபிவிருத்திக்கும் செழிப்புக்கும் மிக அத்தியாவசியமானதாகும்.

அரசின் நல்லெண்ணங்கள், அடிமட்டத்திலுள்ள மக்கள் மாற்றத்தை உணர்ந்து கொள்ளும் வகையிலான செயன்முறைகளாக மாற்றப்படவேண்டும். ஐ.நா. செயலாளர் நாயகம் உட்பட்ட ஐ.நா. சமூகமானது இந்த முக்கியவிடயங்கள் தொடர்பில் தொடர்ந்தும் உன்னிப்பான அவதானத்துடன் செயற்படும். இலங்கை தொடர்பில் தமது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எதிர்காலத்திலும் முன்னெடுக்கும் - என்றார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சிவசக்திஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டதுடன், ஐ.நா.வின் உதவிச் செயலாளர் நாயகம் மற்றும் இலங்கைக்கான ஐ. நா. வதிவிடப்பிரதிநிதி உட்பட ஐ.நா. அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். (த-5)

## மனித...

ளின் பட்டியலில் பிரிட்டன் இணைத்துள் ளது. பிரிட்டன் அயலுறவு மற்றும் பொதுநலவாயப் பணியகம் வெளியிட்டுள்ள 2016ஆம் ஆண்டுக்கான மனித உரிமைகள் அறிக்கையில், 30 நாடுகளை, மனித உரிமைகள் முன்னுரிமை நாடுகள் என்று பட்டியலிடப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இலங்கை, ஆப்கானிஸ்தான், பாஹ்ரைன், பர்மா, புரூண்டி, மத்திய ஆபிரிக்க குடியரசு, சீனா, கொலம்பியா, வடகொரியா, கொங்கோ, எகிப்து, எரித்ரியா, ஈரான், ஈராக், இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன ஆக்கிரமிப்புப் பகுதி, லிபியா, மாலைதீவு, பாகிஸ்தான், ரஸ்யா, சவூதி அரேபியா, சோமாலியா, தென்சூடான், சூடான், சிரியா, துர்க்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான், வெனிசுவேலா, யேமன், சிம்பாப்வே ஆகிய நாடுகள் இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையில், இலங்கையின் மனித உரிமைகள் நிலமையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக வரவேற்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், மேலும் முன்னேற்றங்கள் இடம்பெறவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (த)

## கிளிநொச்சி...

அவர் இரணைமடு இராணுவ தலைமையகத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் நிலமைகள் தொடர்பில் அவர் கேட்டறிந்தார்.

"நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குடிதண்ணீர் உள்ளிட்டதேவைகளை நிறைவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன" என்று அவர் தெரிவித்தார். (ற-10-6)

## வட மாகாண...

யின் கணக்கில் வைப்பிலிடப்பட வில்லை. அதுஒருகுற்றம். என்னநடந்தது? முதலமைச்சர் நியமித்த விசாரணைக் குழுவும் இந்த நிதிக்கு என்ன நடந்தது என்பதைத் தீர விசாரிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறதே!

முன்னர் எடுத்தத ற்கெல்லாம் ஆளுநர்தான் தடை என்றீர்கள். பின்னர் ஆளுநரை மாற்றினீர்கள், நீங்கள் கேட்ட தலைமைச் செயலரைப்பெற்றீர்கள், அவற்றால்நீங்கள்சாதித்தது என்ன? ஆடத்தெரியாதவன் மேடை சரியில்லைஎன்றகதைதானேஉங்களுடையது.

முதலமைச்சர் விரும்பிய ஒருவருக்குப் பதவி கொடுக்கவில்லை என்பதற்காக ஐ.நாவுடன் முதலமைச்சர் முரண்பட்டதால் ஐ.நா. மூலம் மாகாண சபைக்குக் கிடைக்கவிருந்த நிதி வேறு திசையால் திருப்பப்பட்டது. தனிமனித [illegible] நிறுவனம் ஒன்றைப் [illegible] கிடைக்கவிருந்த உதவிகளைக் கோட்டைவிட்டிருக்கிறோம்.

முதலமைச்சரதும் அவரது அலுவலர்களினதும் கவனவீனத்தால், அசண்டையால் இந்தியநிதிஉதவியில்ஒட்டுசுட்டானுக்குக்கிடைக்கவிருந்த ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தை இழந்திருக்கிறோம்.

கொழும்பின் அயலுறவுத்துறை அமைச்சு, நோர்வே தூதரகம், வறுமை ஒழிப்பிற்கான மையம்என்பனஇணைந்துநடத்தியமுதலீடு தொடர்பானகூட்டத்தைமுதலமைச்சர்புறக்கணித்தார். கேட்டபோது அது பற்றித் தெரியாது என்று பொய் சொன்னார். ஆனால் அந்தத் திட்டம்பற்றிஅவருடன்ஏற்கனவேநன்குகலந்துரையாடப்பட்டிருந்திருக்கிறது. என்றாலும் முதலமைச்சர் இந்தச் சபையில் பொய் கூறி மக்களை ஏமாற்றினார்.

மக்கள் பிரச்சினைகளில் முதலமைச்சர் அசமந்தப் போக்குடனேயே செயற்பட்டார்.

கனடா மற்றும் லண்டன் மாநகரங்களுடன் இரு தரப்பு உடன்படிக்கைகளைச் செய்து கொண்டீர்கள்என்றுபீற்றிக்கொண்டீர்களே, அவற்றால்ஏதாவது பயன் கிடைத்ததுண்டா?

சுன்னாகம் நிலத்தடி நீர் மாசு விவகாத்தில் அறிக்கைகளைத்தவறாகத்திரித்துவெளிநாட்டவர்களையும் பிழையாக வழிநடத்தினார் முதலமைச்சர்.

தரங்கூடியஅதிகாரிகளைவைத்துக்கொண்டு அடுத்த தர நிலை அதிகாரிகளுக்குப் பதவி கொடுத்தார் முதலமைச்சர். இப்படி அதிகாரிகளைப் பந்தாடியதால்தான் ஆளுநர் அந்த விடயத்தில் இறுக்கமாகத் தலையிடவேண்டி வந்தது.

அளவுக்கதிகமானவாடகைமற்றும்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு மாகாண சபை நிதி விரயம் செய்யப்பட்டது.

ஆளுநர் நிதியத்தில் நிதி தூங்குகிறது என்று பிரச்சினையைக் கிளப்பி அந்த நிதியைப் பெற்றுமாகாணசபையில்தூங்கவைத்திருக்கிறீர்கள்.

ஒதுக்கப்பட்ட நிதியை அந்த ஆண்டில் செலவிடாமல்வைத்திருந்தாலும்அதுசெலவிடப்பட்டதாகப் பொய்க் கணக்குக் காட்டி, அதனை அடுத்தஆண்டுநடுப்பகுதிவரையில்வைத்துச் செலவிட்டுத் தவறு செய்திருக்கிறீர்கள். 2014 ஆம் ஆண்டுடன் இந்தத் தவறு திருத்தப்பட்டதாக நான் நம்பினேன். ஆனால் 2015ஆம் ஆண்டிலும் அதுவேதான் திரும்பவும் நடந்தது.

130 மில்லியன் ரூபா செலவில் கட்டிமுடிக்கப்பட்ட14கட்டங்கள்இன்னமும்திறக்கப்படாமல் இருக்கின்றன. அதுவாவது முதலமைச்சருக்குத் தெரியுமா?

அமைச்சர்கள் அதிகார முறைகேடுகளில் ஈடுபட்டனர். ஆளுக்கொரு நியாயம் எழுதினர். முன்னாள் அமைச்சர் குருகுலராஜா செய்த தவறைவிடப் பெரிய தவறைச் செய்திருக்கும் தற்போதைய கல்வி அமைச்சர் உடன் பதவி விலகவேண்டும்.

கடமைநிறைவேற்றுஅதிபர்கள்நியமனத்தில் முறைகேடு. அதிபர்தரமுள்ளவர்களுக்குமிரட்டல். பாடசாலைஅதிபர்களைநியமிப்பதில்பல அரசியல் தில்லுமுல்லுகள்.

போசாக்கு வேலைத் திட்டத்திற்குக் கொடுத்த பணத்தில் சுகாதார அமைச்சர் ஒரு வாகனம் கொள்வனவு செய்திருக்கிறார்.

முன்னாள் போராளிகளுக்கான கொடுப்பனவிலும் பல குறைபாடுகள்.

நியதிச்சட்ட உபவிதிகள்வர்த்தமானியில்வெளியிடப்படவில்லை. மாகாணநியதிச்சட்டங்கள் உருவாக்கப்பட்ட பின்னரும் செல்லுபடியற்றுப்போன கொழும்பின் சுற்றறிக்கைகள் இன்னும் பயன்படுத்தப்படுகின்றன. நிறைவேற்றபட்டநியதிச்சட்டங்களின்அடிப்படையிலான நடவடிக்கைகள்கூட ஆரம்பிக்கப்படவில்லை.

மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கான முற்கூட்டிய திட்டத் தயாரிப்பு சபையிடம் இல்லை. அதுவிடயத்தில்சுகாதாரஅமைச்சர் மட்டுமே தூரநோக்கத்துடன் செயற்பட்டார். ஏனையவர்களிடம் அத்தகைய எந்தத் திட்டமும் இல்லை. பொருளாதார மேம்பாடு, வேலை வாய்ப்பை ஏற்படுத்துதல் ஆகியன தொடர்பில் திட்டங்களே இல்லை.

வடக்கு-கிழக்கு இணைந்தமாகாணசபை16 மாதங்களில் செய்தவற்றைக் கூட வடக்கு மாகாணசபை45மாதங்களில்செய்யவில்லை. இவைதான் மாகாண சபை இதுவரையில் சாதித்தவைகள் என்றார்.

*எதிர்க் கட்சித் தலைவரின் முழுமையான உரையை*
**(16,17,18ஆம்பக்கங்களில்காணலாம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாகாண மட்டத் தடகளத் தொடரில் யாழ்ப்பாணம் தொண்டைமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தின் சார்பாகக் கலந்துகொண்டு வெற்றியீட்டிய மாணவர்கள் பாடசாலைச் சமூகத்தால் நேற்றுப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். (ம-108)

# ஐயனார் வி.கழகம் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 22

நா.நவரத்தினராசா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் வேலணை துறையூர் ஐயனார் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தின் 30ஆவது நிமிடத்தில் வேலனை துறையூர் ஐயனார் அணிக்கான முதலாவது கோல் அந்த அணியின் சுவிதனால் பதிவு செய்யபட்டது. முதல் பாதியின் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் ஐயனார் அணி முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியின் 55ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணியின் துசாந்தன் தனது அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார். 72ஆவது நிமிடத்தில் ஐயனாரின் இரண்டாவது கோல் சுவிதனால் பதிவானது. 79ஆவது நிமிடத்தில் விதுசன் ஐயனாரின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார். 89ஆவது நிமிடத்தில் பிரேம்குமார் டயமன்ஸின் இரண்டாவது கோலைப் பதிவு செய்த போதிலும் முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் ஐயனார் அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.

(ம-23)

## சென். ஜோன்ஸ் இறுதியாட்டத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் தொடரில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது.

முதலாவதாகத் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றது. தனுசன் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களையும், பிரசாந் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் சார்பில் ஜவன், மெனிக் இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

239 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 132 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. மெனிக் பெற்ற 40 ஓட்டங்களே அதிகபட்சம்.

பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் சார்பில் சௌமியன் 6 இலக்குகளை வீழ்த்தினார்.

(ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 22

**தாச்சித் தொடர்**

கைதடி குமரநகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்த சிறி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவாலி தென்றல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**மரதனோட்டம்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தப்படும் ஆண்களுக்கான 5 மைல் மரதன் ஓட்டப் போட்டி இன்று காலை அரியாலை தபால்கட்டை சந்திக்கு அருகாமையில் நடைபெறவுள்ளது.

**சைக்கிளோட்டம்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தப்படும் ஆண்களுக்கான 50 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டப்போட்டி இன்று காலை அரியாலை தபால்கட்டை சந்திக்கு அருகாமையில் நடைபெறவுள்ளது.

(ம-23)

# அம்பாள், சிந்து அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

கைதடி குமரநகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் தாவடிகாளியம்பாள் விளையாட்டுக் கழக அணி மற்றும் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'ஏ' அணி என்பன வெற்றிபெற்றன.

கைதடி குமரநகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மின்னொளி விளையாட்டுக் கழக அணி மோதியது. 10:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அம்பாள் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதியது. அதில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணி 10:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

(ம-23)



# விம்பிள்டனில் சூதாட்டம் விசாரணைகள் ஆரம்பம்

அண்மையில் முடிவடைந்த விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் சூதாட்டம் நடைபெற்றிருக்கலாம் என்ற சந்தேகம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து அது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பித்துள்ளன,


பன்னாட்டு அங்கிகாரம் பெற்ற விம்பிள்டன் தொடர் லண்டனில் அண்மையில் நடைபெற்று முடிவடைந்தது. விம்பிள்டன் தொடரில் நடைபெற்ற மூன்று ஆட்டங்களில் ஆட்ட நிர்ணயச் சூதாட்டம் உள்ளது என்று தற்போது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பொதுவாக கால்பந்தாட்டம், துடுப்பாட்டம் போன்றவற்றிலேயே சூதாட்டம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவது வழமை. ரென்னிஸில் அது மிகமிகக் குறைவான ஒன்றாகவே காணப்படுகிறது. இந்த நிலையில் முக்கியத்துவம் வாய்ந்த விம்பிள்டனில் அத்தகைய குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டமை பல அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரின் ஓர் ஆட்டத்திலும் ஆட்டநிர்ணயச் சூதாட்டம் நடைபெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்தச் சூதாட்டக் குற்றச்சாட்டுக்கள் எந்தெந்த ஆட்டங்களில் நடைபெற்றன என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

நடப்பு வருட விம்பிள்டன் தொடரில் ஆண்கள் பிரிவில் பெடரரும், பெண்கள் பிரிவில் முகுருசாவும் சம்பியனாகியிருந்தனர். இந்த ஆட்டநிர்ணயக் குற்றச்சாட்டு தொடர்பில் அவர்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர். இந்த விடயத்தில் முழுமையான விசாரணை அவசியமானது என்று பெடரர் வலியுறுத்தியுள்ளார்.

(ம)



# வாய்ப்புக்காக கெய்ல் உருக்கம்

கடைசியாக ஒரு டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடிவிட்டு ஓய்வு பெற்றால் சிறப்பாக இருக்கும் என மேற்கிந்தியத் தீவுகளின் வீரர் கிறிஸ் கெய்ல் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபைக்கும், மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையின் வீரர்களுக்கும் இடையிலான ஊதிய ஒப்பந்தப் பிரச்சினையைத் தொடர்ந்து அணியில் இருந்து நீக்கப்பட்டார் கெய்ல். ரி-20 ஆட்டங்களில் இவருக்கு இடம்கொடுக்கப்பட்ட போதிலும், டெஸ்ட் ஆட்டங்களில் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டுக் கொண்டே உள்ளார். இந்த நிலையில் தான் ஓய்வை அறிவிக்க ஒரு வாய்ப்பைத் தரவேண்டும் என்று தற்போது அவர் தெரிவித்துள்ளார்.

எல்லா கிரிக்கெட் வீரர்களும் டெஸ்ட் ஆட்டங்களில் சாதிக்க வேண்டும் என்பதுதான் கனவாக இருக்கும். எனக்கும் அதுபோல்தான். கடைசியாக ஒரு டெஸ்டில் பங்கேற்றால், மகிழ்ச்சியாக விடைபெறலாம் என கெய்ல் மேலும் தெரிவித்தார். (ம)




உலகப் புகழ்பெற்ற 'ரூர் டி பிரான்ஸ்' சைக்கிளோட்டப்போட்டி பிரான்ஸில் தற்போது நடைபெற்று வருகிறது. கடந்த இரு வாரங்களுக்கும் மேலாக நடைபெற்றுவரும் இந்தப் போட்டியின் 17ஆவது கட்டத்தில் பிரான்ஸ் அதிபர் இம்மானுவல் மக்ரோன் நேரில் சென்று வீரர்களுக்கு தனது வாழ்த்தைத் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாஸின் பயிற்சியில் இந்தியாவை எதிர்கொள்கிறது இலங்கை



இலங்கை அணியின் முன்னாள் ஜாம்பவானான சமிந்த வாஸின் பந்துவீச்சுப் பயிற்சியில் இந்தியாவை எதிர்கொள்கிறது இலங்கை அணி. இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சு பயிற்சியாளராக இருந்த ராமநாயக்க தனது பதவியில் இருந்து விலகியுள்ள நிலையில் அந்த இடத்துக்கு புதிய பயிற்சியாளராக வாஸ் நியமிக்கப்பட வாய்ப்புள்ளது என்று தெரியவருகிறது. இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்துள்ளது இந்திய அணி. இந்தத் தொடரில் வாஸின் பயிற்சியின் கீழ் இலங்கை அணி விளையாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நியமனம் சாதகமாக அமையவேண்டும் என்பது போன்ற கருத்துக்களையே சமூக வலைத் தளங்களிலும் இலங்கை ரசிகர்கள் வெளியிட்டுள்ளனர். (ம)



## சமரவீரவின் பதவிக்காலம் முடிவுக்கு

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக இருந்து வந்த திலன் சமரவீரவின் பதவிக் காலம் நீடிக்கப்படவில்லை. முக்கியமான கிரிக்கெட் அணிகளில் ஒன்றாக பங்களாதேஷ் தற்போது வர்ந்துள்ளது. சமீபத்தில் இங்கிலாந்தில் நடைபெற்ற மினி உலகக் கிண்ணத் தொடரில் காலிறுதிக்கு முன்னேறிய அந்த அணி, இந்தியாவிடம் தோற்று தொடரில் இருந்து வெளியேறியது. அந்த அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக இலங்கை அணியின் முன்னாள் வீரர் திலன் சமரவீர செயல்பட்டு வந்தார். இவர் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நியமிக்கப்பட்டிருந்தார். மினி உலகக்கிண்ணம் வரை அவருக்கு பதவி வழங்கப்பட்டிருந்தது. தற்போது, அவரது பதவிக்காலம் முடிவடைந்துள்ளது. அவருக்கு பதவி நீட்டிப்பு வழங்கப்படமாட்டாது என்றும் புதியதொரு ஆலோசகர் நியமிக்கப்படவுள்ளார் என்றும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்தது. (ம)

## ஓய்வுக்காக மோர்கல் சிந்தனை

பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் இருந்து ஓய்வு பெறுவது தொடர்பில் தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் மோர்கல் சிந்தித்து வருகிறார் என்று தகவல்கள் வெளியாகின.

தென்னாபிரிக்க அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான மோர்கல், உலகளவில் தலைசிறந்த வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவராகவும் உள்ளார். 32 வயதாகும் இவர் "கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறுவது குறித்து ஆலோசனை செய்து வருகிறேன்" என்று தெரிவித்துள்ளார். நடைபெற்றுவரும் இங்கிலாந்துத் தொடர் முடிந்த பின்னர் இதுதொடர்பில் உத்தியோகபூர்வ முடிவை மோர்கல் அறிவிக்கவுள்ளார்.



"நான் என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையை தொடங்கவில்லை. என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கை கிட்டத்தட்ட முடிவடையப் போகிறது. 2019ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடருக்கான அணியை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறார்கள். அந்த திட்டத்தில் நானும் ஒரு பகுதியாக இருக்கப்போகிறேனா? என்பது சந்தேகமே" என மோர்கல் மேலும் தெரிவித்தார். (ம)

## ஆஸி. கிரிக்கெட்டில் தொடர்கிறது குழப்பம்

ஊதிய ஒப்பந்தம் தொடர்பில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கும், வீரர்களுக்கும் இடையிலான கருத்து மோதல்கள் தொடர்ந்து வருகின்றன என்று பன்னாட்டு ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டன. எனினும் இந்த விவகாரம் முன்னரை விட தற்போது சற்றுத் தணிந்துள்ளது என்று ஆஸ்திரேலிய ஊடகங்களின் அண்மைக்கால செய்திகள் சில குறிப்பிடுகின்றன.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கும் அந்நாட்டு கிரிக்கெட் சபைக்கும் இடையிலான ஒப்பந்தம், கடந்த முதலாம் திகதியுடன் நிறைவடைந்துள்ள நிலையில், புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடும் வரையில், கிரிக்கெட் தொடர்களில் பங்குபற்றப் போவதில்லை என வீரர்கள் அறிவித்திருந்தனர். இதனால் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கும், வீரர்களுக்கும் இடையில் மிகப்பெரும் குழப்பநிலை நிலவியது. தற்போது அது ஓரளவு சுமூக நிலையை அடைந்துள்ளது என்பது ஆஸ்திரேலிய ஊடகங்கள் சிலவின் கருத்து. எனினும் பன்னாட்டு ஊடகங்கள் பலவும் குழப்ப நிலையே தொடர்ந்தும் உள்ளது என்று குறிப்பிடுகின்றன. (ம)

## ஆஸியைப் புரட்டியெடுத்து

# இந்தியா இறுதியில்



பெண்கள் உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது இந்திய அணி.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 42 பந்துப்பரிமாற்றங்களில் (மழை காரணமாக ஆட்டம் 42 பந்துப்பரிமாற்றங்களாகக் குறைக்கப்பட்டது) 4 இலக்குகளை இழந்து 281 ஓட்டங்களைக் குவித்தது. கருர் ஆட்டமிழக்காமல் 171 ஓட்டங்களைக் குவித்தார். அவர் 115 பந்துகளில் 7 சிக்சர்கள், 20 பவுண்டரிகள் உள்ளடங்கலாக இந்த ஓட்டங்களைக் குவித்திருந்தார். கரூரை விட அணித் தலைவி மிதாலி ராஜ் 36 ஓட்டங்களையும், டீப்ரி சர்மா 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கிரான்டர், பிம்ஸ், விலானி, ஸ்கட்ஸ் ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி ஆரம்பத்திலேயே இலக்குகளை இழந்து தடுமாறியது. 21 ஓட்டங்களில் அந்த அணி முதல் மூன்று இலக்குகளையும் இழந்தது. பிளக்வெல் 90 ஓட்டங்களைக் குவித்தாலும் ஏனைய வீராங்கனைகள் தடுமாற்றம் காட்ட 245 ஓட்டங் களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது ஆஸ்திரேலியா. 36 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது இந்தியா.

இங்கிலாந்து அணி ஏற்கனவே இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ள நிலையில் நாளை நடைபெறும் இறுதியில் இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதவுள்ளன. (ம)





## காய்ச்சல் காரணமாக விலகினார் சந்திமல்

இந்தியாவுக்கு எதிரான முதலிரு டெஸ்ட் ஆட்டங்களில் இருந்தும் இலங்கை அணியின் தலைவர் சந்திமல் விலகினார். இதனால் அணி யின் பொறுப்புத் தலைவராக கேரத் செயற்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் காலியில் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தத் தொடருக்கான இந்திய அணி இலங்கை வந்துள்ளதுடன் பயிற்சி ஆட்டத்திலும் தற்போது விளையாடி வருகிறது.

இந்த நிலையில் இலங்கை அணித்தலைவர் சந்திமல் காய்ச்சல் காரணமாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளதால் அவர் முதலிரு ஆட்டங்களிலும் களமிறங்க மாட்டார் என்று கொழும்பு ஊடகங்கள் குறிப்பிட்டன. சந்திமல் களமிறங்காத காரணத்தால் அணியின் பொறுப்புத் தலைவராக கேரத் செயற்படுவார் என்றுத் தகவல்கள் வந்துள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெஸ்ஸி - பார்சிலோனா ஒப்பந்தத்தால் சுவாரஸ் திருப்தி

பார்சிலோனா அணியுடன் எதிர்வரும் 2021ஆம் ஆண்டு வரை தொடரும் ஒப்பந்தத்தில் முன்னணி வீரர் லயனல் மெஸ்ஸி கைச்சாத்திட்டுள்ள நிலையில், இது தொடர்பில் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார் சுவாரஸ்.
ஆர்ஜென்ரீனா தேசிய அணியின் தலைவரான மெஸ்ஸி, கழகத்தைப் பொறுத்த வரையில் ஸ்பெய்னின் பார்சிலோனா அணிக்காக விளையாடி வருகிறார். மெஸ்ஸியை கால்பந்தாட்ட உலகின் ஜாம்பவானாக்கியதும் பார்சிலோனாவே. அவருக்கும் பார்சிலோனா அணிக்கும் இடையிலான ஒப்பந்தம் இந்த வருடத்துடன் முடிவுக்கு வருகிறது. இதனால் அவர் பார்சிலோனா அணியை விட்டு வெளியேறவுள்ளார் என்று தக்வல்கள் வெளிவந்திருந்தன. இதற்கு மெஸ்ஸி எவ்வித மறுப்பும் தெரிவிக்காததால், அவர் வெளியேறுவது கிட்டத்தட்ட உண்மை என்றாகிய நிலையில் மெஸ்ஸி - பார்சிலோனா இடையிலான ஒப்பந்தம் எதிர்வரும் 2021ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டது. ஒப்பந்தத்தின் தொகை உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. எனினும் 300 மில்லியன் வழங்கப் பட்டிருக்கலாம் என்று பன்னாட்டு ஊட கங்கள் குறிப்பிட்டன. அடுத்த பருவ காலத் தொடர் (2017-2018) விரைவில் ஆரம்பமாக வுள்ள நிலையில் பார்சி லோனா அணி யின் வீரர்கள் சிலர் தமது விடுமுறையை முடித்து கழகத்துக்குத் திரும்பியுள்ளனர். இதையடுத்துக் கருத் துத் தெரிவிக்கை யிலேயே சுவாரஸ் இவ்வாறு குறிப்பிட் டார். "இந்தப் பருவகாலம் இதைவிட சிறப்பான செய்தியொன்றுடன் ஆரம்பிக்க வாய்ப்பில்லை. மெஸ்ஸி என்னும் ஜாம்பவானுடன் அணியில் தொடர்வதில் மிகவும் மகிழ்ச்சி" என சுவாரஸ் மேலும் குறிப்பிட்டார். (ம)




# ஆதிக்கத்தைத் தக்கவைப்போம் இப்படிச் சொல்கிறார் ஜோ ரூட்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான அடுத்த டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றி பெற்று தமது ஆதிக்கத்தைத் தக்க வைப்போம் என்று இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோ ரூட் தெரிவித்தார்.
இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது தென்னாபிரிக்க அணி. நான்கு ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரின் முதல் இரண்டு ஆட் டங்கள் முடிவடைந்துள்ளன. இரு அணிகளும் தலா ஓர் வெற்றியு டன் உள்ளன. அடுத்த ஆட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்ப மாகவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்று ஆதிக்கத்தைத் தொடரும் நம்பிக்கையை வெளிப் படுத்தினார் ரூட்.
இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவராக ரூட் எதிர்கொள்ளும் முதலாவது தொடர் இதுவே. இத னால் இந்தத் தொடரில் வெற்றி பெற வேண்டும் என்ற கௌரவச் சிக்கல் ரூட்டுக்கு உள்ளமை குறிப் பிடத்தக்கது. (ம)



# தெ. ஆபிரிக்காவுக்கு எதிரான தோல்வி இங்கிலாந்துக்கு பீற்றர்சன் கண்டனம்




"தென்னாபிரிக்க அணிக்கெதிரான 2ஆவது டெஸ்ட் ஆட்டத்தில், இங்கிலாந்து அணியின் முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள், ஈடுபாடற்ற வகையில் விளையாடினர்" என இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் கெவின் பீற்றர்சன் விமர்சித்தார்.
இந்த நிலையில், அடுத்த வாரம் ஆரம்பிக்கவுள்ள 3ஆவது டெஸ்டில், ஜேஸன் றோய், டேவிட் மலன் ஆகியோரைச் சேர்க்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.
ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கேட்டன் ஜெனிங்ஸ், இந்தத் தொடரின் 4 இன்னிங்ஸ்களில் 44 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுள்ளார். 3ஆம் இலக்கத் துடுப்பாட்ட வீரர் கரி பலன்ஸ், அவரது கடந்த 11 இனிங்ஸ்களில் அரைச்சதத்தைப் பெறவில்லை இவற்றையும் பீற்றர்சன் சுட்டிக்காட்டினார்.
"மோசமான டெஸ்ட் அணியொன்றை அவர்கள் (இங்கிலாந்து) தெரிவுசெய்தனர். லோர்ட்ஸில் இடம்பெற்ற ஆட்டத்தில் அவர்கள் வென்றனர் என்பது எனக்குத் தெரியும். ஆனால், ஜோ றூட்டின் அற்புதமான விளையாட்டி னாலேயே அவர்கள் வென்றனர். அற்புதமான தனிநபர்கள் அவ்வணியில் இருக்கின்றனர். ஆனால், அணியாக அவர்கள் சிறப்பாக விளையாட வேண்டிய அளவுக்கு விளையாடவில்லை. அந்தத் துடுப்பாட்ட வரிசையில், சில ஓட்டைகளும் உள்ளன" என்று பீற்றர்சன் மேலும் தெரிவித்தார். (ம)


## மரண அறிவித்தல்

### செல்லத்தம்பி மகேந்திரராஜா



யாழ்ப்பாணம், ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி மகேந்திரராஜா 19.07.2017 புதன் கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், திருமதி சற்குணதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாஸ்கரன் (கனடா) மற்றும் ரவீந்திரன், காலஞ்சென்ற உஷாதேவி, மற்றும் பிரபாகரன், நாகேஸ்வரன், கலாதேவி (ஜேர்மனி), சதாகரன் (சுவிஸ்), சிறீதரன் (கனடா), கெங்காதரன் (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரனும், வாசுகி (நோர்வே), வாகீசன் (ஜேர்மனி), கேதீசன் (அமெரிக்கா), ஜானகி (இத்தாலி), வைதேகி, வைஷாலி ஆகியோரின் அன்புத் தந்தையும், மோகன் ஜோன்சன் (நோர்வே), சுகனியா(ஜேர்மனி), பாமினி (அமெரிக்கா), சசிக்குமார் (இத்தாலி), ஜெயகுமரன் (சவுதி), வண.ஜோஹணன் பிலிப் (தலைமைப் போதகர் - சீயோன் தேவாலயம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெமீமா, ஸ்ரெவான், தெபோராள், கிதியோன், எஸ்தர், எஸ்றா, அபிஷாக், சகீனா, ஜெவ்றி, யூதா, பெனாயா ஆகியோரின் அன்புப் பேரனும், மல்லிகா, தவராஜா (கனடா), லோகேஸ்வரன் (ஜேர்மனி), ஜெயகுணரூபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் அடக்க ஆராதனை நாளை (23.07.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று இருபாலை கானான் சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புதுவீதி, ஆறுகால்மடம்.**
**மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.**

தகவல்
**குடும்பத்தினர்.**



# கவுட்டினோவுக்கு 1,200 கோடி ரூபா கொடுக்க முன்வந்தது பார்சிலோனா


**Win**
சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளும் ,A/C களும் உங்கள் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு.0779648942

**கார் விற்பனைக்கு**
நல்ல நிலையிலுள்ள Suzuki Celerio VXI 2015 (22000 KM) வெள்ளை நிறக்கார் (Automatic) விற்பனைக்குண்டு.
077 450 5587

**Personal Class-கணினி**
உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்
Ms office 2016, Internet & E-mail, DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker, Indesign, Illustrator) Web Design. சிங்கள Typing
TP:0779672038 இலவசம்.


பிரேசில் வீரர் பிலிப் கவுட்டினோவுக்கு இலங்கை மதிப்பில் சுமார் ஆயிரத்து 200 கோடி ரூபாவை பார்சிலோனா கொடுக்க முன்வந்த போதிலும், கவுட்டினோ தற்போது தங்கியுள்ள லிவர்பூல் அணி அதற்கு உடன்படாததால் இந்த ஒப்பந்தம் கைவிடப்பட்டது.
கடந்த வருடம் ரியல் மட்ரிட் அணி முக்கிய தொடர்களைக் கைப்பற்றிய காரணத்தால் இந்த வருடம் தனது அணியைப் பலப்படுத்த பார்சிலோனா கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதன்படி பல வீரர்களை ஒப்பந்தம் செய்ய அது எத்தனிக்கிறது. இந்த அடிப்படையில் கவுட்டினோவையும் ஒப்பந்தம் செய்ய அது முயன்றது. எனினும் லிவர்பூல் அதற்கு இடம்கொடுக்கவில்லை. (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org